விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 10 ஞாயிற்றுக்கிழமை (24.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 156

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# ஜனநாயக கட்டமைப்பிற்குள் இராணுவத்தை ஏற்க முடியாது

## ஆக்கிரமிப்புப்படையாக ஆளவிடக்கூடாது; வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

ஆயுதம் தாங்கிய அரச படைகள் அச்சுறுத்தும் இயல்பினைக் கொண்டவர்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. எவ்வளவுதான் மக்களைத் தம்வசம் கவருமுகமாக ஓர் இராணுவம் நடவடிக்கை எடுத்தாலும் அவர்களை ஜனநாயகக் கட்டமைப்புக்குள் ஏற்றுக்கொள்ள முடியாது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வித்தியா கொலை; விசேட குழு நியமனம்

(கொழும்பு)

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையில் உண்மைகளைக் கண்டறிவதற்கு பொலிஸார் கடமைகளைச் சரிவர செய்வதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வித்தியா படுகொலை விவகாரம் வடக்கில் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அரசின் செயற்பாடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரி

16 ஆம் பக்கம் பார்க்க....

## ஆகஸ்ட் 23-ல் புலமைப்பரிசில் பரீட்சை

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை. ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள 5ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை பழைய அமைப்பின்படி அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி முடிவடைந்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ)

## விடுதலைப்புலிகளின் சிந்தனைகளை நான் சரியாகப் புரிந்து கொள்கிறேன்

### அமெ.செனட் கறுப்பின பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சிந்தனையை தான் சரியாக புரிந்து கொள்வதுடன் அதற்கு ஆதரவு வழங்குவதாக அமெரிக்க செனட்டின் கறுப்பின பிரதிநிதி டானி டேவிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கையில் இன, மத சுதந்திரம் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் குழுவினர் சிறிசேன அரசாங்கத்தின் கீழான தற்போதைய

15 ஆம் பக்கம் பார்க்க....

## பங்கு பிரிவர்த்தன நிலையம் வழங்கிய ரூபாய் 5 மில்லியன் குறித்து நாமலிடம் புலனாய்வு விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் இயங்கிய நாளைக்கான இளைஞர் அமைப்பிற்கு, பங்கு பரிவர்த்தன நிலையத்தினால் வழங்கிய 5 மில்லியன் ரூபாய் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது குறித்து

15 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...




## மகிந்த-மைத்திரியை இணைக்க முன்னாள் பிரதமர் டி.எம்.முயற்சி !

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஈடுபட்டுள்ளார் என தகவல்கள் தெரியவருகின்றன.

இதன்படி மகிந்தவையும் மைத்திரியையும் ஒரே மேடையில் ஏற்றும் முயற்சியை முன்னாள் பிரதம்ர டி.எம்.ஜயரட்ன தலைமையிலான குழு வொன்று மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச்



சேர்ந்த 15 உறுப்பினர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்விருவரையும் இணைக்கும் முயற்சி குறித்து எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை தோற்கடிக்க வேண்டுமெனவும் அதற்கு மைத்திரி- மகிந்த கூட்டணி தேர்தலில் களமிறங்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யாவிட்டால் நாடு ஆபத்தில் சிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டை காப்பாற்றும் பொறுப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உண்டு என முன்னாள் பிரதமர் தெரிவித்துள்ளார். மேலும் 1994-ம் ஆண்டு முதல்

16 ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பெண்களுக்கு இனி 30 சதவீதம் ஒதுக்கீடு

(கொழும்பு)

இனிவரும் காலங்களில் மாகாண சபைகளில் பெண்களுக்கு 30 சத வீதம் ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்றும் இந்த தீர்மானத்தின்படி மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது என்றும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் நாடாளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி சபைகளிலும் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் இருந்தாலும் அது போதாது என்ற கருத்தே நிலவி வருகிறது.

குறிப்பாக மாகாண சபைகளில் 6 சத வீதத்திற்கும் மேலாக பெண்களுக்கான பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவிவந்தது. தற்போது இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளிலும் 447 உறுப்பினர்கள் அங்கத்துவம் பெற்றுள்ள போதிலும் 5 சத வீதத்திற்கும் குறைவான பெணகளே அவற்றில் இடம்பெற்றுள்ளனர். (செ-11)

# மன உளைச்சலைத் தவிர்ப்பதற்காகவே பெரிய மீன் தொட்டியை வைத்திருந்தேன்

## சுறாக்கள் வளர்த்ததை ஒப்புக் கொண்டார் கோத்தா



மன உளைச்சல்களை தவிர்த்து கொள்வதற்காக சுறாக்கள் இருக்கும் பெரிய மீன் தொட்டியொன்றை வைத்திருந்ததாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் கோத்தபாய ராஜபக்ஷவின் மீன்தொட்டி குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியாகி வந்தன.

இது தொடர்பில் அவர் ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அநேக வீடுகளில் செல்லப்பிராணிகளாக மீன்களை வளர்த்து வருகின்றனர். மீன் தொடடிக்கும், சுறா மீன்களை கொண்ட தொட்டிக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம் என்ன? வீடுகளில் பறவையினங்களை வளர்ப்பதில்லையா?

ஏன் இவ்வாறான விடயங்களில் எம் மீது மாத்திரம் விரல் நீட்டி வருகின்றீர்கள் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கேட்டுள்ளார்.

விஷேட பறவை யினங்கள் என்னிமில்லை. அரச ஊழியர் ஒருவருக்கு மீன்தொட்டியொன்றை வைத்துக் கொள்ளமுடியாதா என்ன?

அக்காலத்தில் அந்த மீன்களே எனக்கு ஆறுதல் வழங்கின. இவை எல்லாம் எவ்வாறு நடந்தது என்பதை விபரிக்க எனக்கு சநதர்ப்பம் வழங்குங்கள்.

நீங்கள் வீட்டில் இல்லாவிட்டால் காரியாலயத்திலேயே இருப்பீர்கள். வேறெங்கும் இருக்கமாட்டீர்கள் என என்னை பார்த்து நபரொருவர் குறிப்பிட்டார்.

வீட்டில் மீன்தொட்டியொன்றை வளர்த்தல் மனதிற்கு ஆறுதலை கொடுக்கும் எனவும், அதனால் உங்களின் மன உளச்சல்களிலிருந்து விடுதலை பெறலாம் எனவும் அந்நபர் என்னிடம் தெரிவித்தார்.

அது மிக பெரிய மீன்தொட்டி. அதை என் வீட்டிற்கு கொண்டு வந்த நாள் முதல் பல வருடங்களாக அங்கு சகல நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தவர் அவரே என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டுள்ளார். தற்போது அவர் என் வீட்டிலில்லை. அவர் அநேகருக்கு மீன் தொட்டிகளை வழங்கியு ள்ளார்.

- எங்களால் காப்பாற்றப்பட்ட சமாதானம், உறுதி செய்யப்பட்ட அபிவிருத்தி ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது இது அவசிய மற்றதொன்றாகிவிடும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)


## தேவை

சிங்களம் தெரிந்த தெரியாத தமிழ் முஸ்லிம் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பகுதிகளில் தொழில்வாய்ப்பு. ஜாம், கோடியல், காகில்ஸ், சவர்க்காரம், ஆப்பிக்கோ, ஐஸ்கிறீம், யோகட் இன்னும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல், பொதியிடல் தரம் பிரித்தல் பிரிவுகளுக்கு 18-55 வயது அவசியம். சம்பளம் 25000/= - 38000/=. வருகை தரும் நாளிலே வேலை.

உணவு, தங்குமிடம் உண்டு (ஆண்களுக்கு இலவசம்)

தொடர்புகளுக்கு:-0778430179

(சு-1058)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள் - அன்பளிப்பு பொருட்கள் - உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சு-1052)


# ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

## என்னைப்போல் கட்சிக்காக அர்ப்பணிப்பவர்கள் யாருமில்லை

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்காக என்னைப் போன்று அர்ப்பணித்தவர்கள் ஒருவரும் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி இவ்வாறு கருத்து தெரிவித்ததாக, அவரின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.


என்னை போன்று வேறு யாரும் கட்சிக்காக அர்ப்பணிப்புச் செய்தவர்கள் இல்லை. அப்படி யாரேனும் இருந்தால் தன்னிடம் தெரிவிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்னுடைய கட்சி, அதனை பிரித்து ஒதுக்கிக்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒரு போதும் நான் மேற்கொள்வதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி முதல தடவையாக கூட்டணி வைத்துக்கொண்டதற்கு காரணம் நான் அல்ல முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சிக்காக கடமைகளை நிறைவேற்றுங்கள் என கூறியுள்ளார்.

நாட்டை வெற்றி பெறச் செய்வது போன்றே கட்சியினை வெற்றி பெறச் செய்யும் கடமை தற்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் கண்டன கவனயீர்ப்பு போராட்டம்




பெண்கள் உரிமைகள் பாதுகாப்பு, பாலியல் வன்கொடுமைகள் எதிர்ப்பு புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுப் படுகொலை ஆகிய விடயங்களை முன் நிறுத்தி பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு நேற்றைய தினம் யாழ் நகரில் கவனயீர்ப்பு போராட்டத்தினை நடத்த அழைப்பு விடுத்திருந்தது. எனினும் நீதிமன்றம் யாழ் நகரில் கவனயீர்ப்பு போராட்டம் நடத்துவதற்குத் தடை விதித்ததைத் தொடர்ந்து நகரில் கூடிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் போராட்டத்தின் நியாயத் தன்மையினை பொலிஸாருக்கும் ஊடகங்களுக்கும் தெளிவுபடுத்தி கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். வித்தியாவின் படுகொலை தொடர்பாக விசேட நீதிக்குழு அமைக்கப்பட்டு அதனூடாக விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவதுடன் உரிய முறையில குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டு மென பிரதானமாக வலியுறுத்தப்பட்டது. மேற்படி போராட்டத்திற்கு இரா. யோகமலர் தலைமை தாங்கியதுடன் இப்போராட்டத்திற்கு வெகுஜன அமைப்புக்கள் பலவும் ஆதரவு வழங்கியது. குறிப்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி, கலைமதி மாதர் சங்கம்(புத்தூர்), வட மாகாண பெண்கள் சமாசம், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி என்பன ஆதரவு நல்கியதுடன் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கலந்து கொண்டனர். மாணவி வித்தியாவின் படுகொலையைப் பயன்படுத்தி சில சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமையும், மக்கள் தவறான முறையில் வழிநடத்தப்படு வதையும் இவ் அமைப்பு கண்டிப்பதுடன், பெண்கள் தாமாகவே தமக்கான நீதியைக் கோரி முன்வருதலானது சிறந்த பயனைத் தரும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை)

காலை அதிர்ந்தது காலன் கவர்ந்த செய்தி
கலங்கினோம் கதறினோம் மீளாத்துயரில்!
கண்ணீர் சொரிந்தனர் எம் பாடசாலைச் சமூகம்
கலங்கினோம் கதறினோம் மீளாத்துயரில்!
உன் அன்பும், சேவையும், பிரிவும் என்றுமே
உள்ளிருக்கும் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

யா/கொக்குவில் ஸ்தான
சி.சி.த.க.பாடசாலை சமூகம்

(சு-1061)

## கனத்த இதயத்துடன் அஞ்சலிகள்

திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை)



ஆளுமையின் இமயம் ஒன்று இல்லை என்று ஆனதுவோ?
ஆற்றொணாத் துயர் தந்து அமைதி அடைந்ததுவோ?
அன்புள்ளம் கொண்ட நல் அதிபரே-நின் ஆன்மா
நயினை அன்னையவள் பாதம் அடைந்திடுக.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர்கள்
கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை

(559)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி மங்களகௌரி தயாளநேசன்

(அதிபர், யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை)

கருவளர் நயினை கருணையில் மலர்ந்து
உருவளர் உறவால் உணர்வினில் கலந்தே
குருநிலை யதிபராய் குன்றென நின்றாய்
வருவிதி முடிவாய் வாழ்வினை முடித்தே
பெருந்துயர் தந்தாய் பிரிவினை ஆற்றோம்.

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:-

திரு.வே.ஞானகாந்தன்
செல்வி க.கமலநாயகி
திரு.திருமதி வ.கதிரேசபிள்ளை
திருமதி வி.கடம்பமலர்
திரு.சொ.லோகேஸ்வரன்
திரு.திருமதி ரவீந்திரராஜா
திரு.ம.ஞானசம்பந்தன்
திரு.திருமதி திரவியநாதன்
திரு.க.கணேஸ்வரன்

(சு-1059)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்து

## அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்



(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை கண்டிக்கத்தக்க விடயம் எனவும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துப்பட்டு நாட்டில் இது போன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாத வண்ணம் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பை உறுதி செய்வதுடன் சட்டமும் நீதியும் நிலை நாட்டப்பட வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக மக்கள் பொறுமை காத்து பாதுகாப்பு தரப்பினருக்கு தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

வித்தியாவின் கொலையில் சம்பந்தப்பட்ட சகலரையும் எதுவித பாரபட்சமின்றி எந்தவித பலவந்தங்களுக்கும் அடி பணியாது சட்டத்தின் முன்னிறுத்த வேண்டும். இது தொடர்பில் அமைச்சர், பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு உத்தர விடப்ப ட்டுள்ளது.

அத்துடன் இதில் எதுவித அரசியல் தலையீடுகளுக்கும் அடிபணியாது சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

இந்தவிடயத்தில் மக்கள் பொறுமை காத்து வன்முறைகளில் இறங்காது அமைதி காத்து பாதுகாப்பு தரப்பி னருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அமைச்சர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.(3-5)


### காணி விற்பனை

மருதனார்மடப்பகுதியில் 4 பரப்புக்காணி விற்பனைக்குள்ளது.

(552) தொடர்புகளுக்கு:077 328 8795

### உதவியாளர் தேவை

வட்டுக்கோட்டையில் அமைந்த ஆங்கில மருந்தகத்திற்கு அனுபவம் உள்ள பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு :- 077 372 6685/ 077 770 2817

(552)

### உடனடி வேலைவாய்ப்பு

சம்பளம் 18000/=,49000/= (தொழில் அடிப்படையில்) 17-50 வயது ஆண்,பெண் தேவை.நண்பர்கள்,குழுக்கள் தம்பதியினராகவும் இணைந்து கொள்ளலாம். உணவு தங்குமிடம் குறைந்த விலைகளுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/கிளவுஸ் Arpico.....தொழிற்சாலைகள், இலக்ரீசன்,பெயின்டர்,தச்சு,பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பல தொழில் வாய்ப்புக்கான வெற்றிடங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(554) 0776838231/0771116770


### அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம்,ஆனைக்கோட்டை, வட்டாரம்:-04, ஆதனஇலக்கம்:22, முருகமூர்த்தி வீதி.

வட்டாரம் 04 முருகமூர்த்தி வீதி,சாவற்கட்டு ஆதன இக்கம் 22 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை "கவடுகோலி" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 8.70 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த ஞானசேகரம் பெண் நாகதேவி,பொன்னம்பலன் கைம்பெண் இராசமணி ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் சாவற்கட்டைச் சேர்ந்த தயானந்தன் பெண் தீபா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மா.தியாகராசா முகதாவில் நிறைவேறிய 9395 ஆம் இலக்க 02.10.2006 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கவடுகோலி" நிலப்பரப்பு 01 குளி 8.70 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் தயானந்தன் பெண் தீபா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (சி-1040)


ஜூலை 23 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

Now prepare for your Accademic (General)



The World speaks IELTS

IELTS

BRITISH COUNCIL IELTS students Registration center

Speciality of our course

- Special attention to Advanced Grammar
- 12 Practice tests with explanation
- Unlimited hours for Listening practice
- Speaking practice

Spouse (Family) விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

IELTS LIFE SKILLS A1

City & Guild, KET,PET (A1&B1) போன்றவற்றிற்குப் பதிலீடாக UK Home office னால் ஏற்றுக்கொள்ளப்படும் புதிய தகைமை

COURSE SCHEDULE

Saturday & Sunday
Duration 10 week
Time 8.00-11.00

IELTS

Mon,Tues,Wed,Thur
10 Week
8.30-10.30, 5.00-7.00

BRITISH COLLEGE OF ENGLISH

No.192,Navalar Road, Jaffna.
Tel: 021 222 0384

(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
தொ.பே: 0778803887


## இராசி பலன்

24.05.2015
(வைகாசி 10, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சஷ்டி முற்பகல் 10.01 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 4.26 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை

வளவன்

**மேடம்** எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**இடபம்** விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர் கள், கடினமான வேலையைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய நாள், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் ஏற்படலாம்.

**சிம்மம்** வரவைக்காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள்.

**துலாம்** இல்லத்தில் இனிய சம்பவங்கய்ள் நடைபெறுவதற்கான வாய்ப் புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள். தொழிலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்தினர் வருகையுண்டு, தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், கொடுத்த வாக் கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம் பெறலாம், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள் வீர்கள்.

**மீனம்** நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியம் ஒன்று கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், வியாபார விருத்தியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை சிங்கள நாடல்ல!

# நீதியமைச்சரின் கருத்துக்கு சிங்கள ராவய போர்க்கொடி

(கொழும்பு)

**இலங்கை சிங்கள நாடல்ல! இலங்கையர்களின் நாடென நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ வெளியிட்ட கருத்திற்கு சிங்கள ராவய அமைப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மிமன தயாரத்ன தேரர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சரின் இவ்வாறான ஒரு கருத்தினால் அவ்வமைப்பு அதிருப்தியடைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் விஜேதாஸ ராஜபக்ஷ விடம் வினவிய போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இவ்வாறானதொரு கருத்தை வெளியிடுவார் என என் வாழ்நாளில் நான் நினைக்கவில்லை.

நான் ஒரு பௌத்தன் நானும் அவர் மேல் அன்பு வைத்துள்ளேன் அவரும் என் மீது அன்பு வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விஜேதாஸ ராஜபக்ஷவுடன் நல்ல ஒரு உறவை கட்டியெழுப்பியுள்ளோம்.

எனினும் அமைச்சர் இவ்வாறான தொரு கருத்தை வெளியிடுவார் என நான் நினைக்கவில்லை.

மேலும் இவரின் கருத்தினால் நாங்கள் மிகவும் மனவேத னையடைந்துள்ளதுடன். மீண்டும் இவ்வாறான ஒருவரை நாடாளுமன்ற அமைச்சராக மக்கள் நியமித்தால் சிங்களவர்களுக்காக குரல் கொடுக்கும் எங்கள் அமைப்பை கலைத்துவிடுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

## வாராந்த பஜனை

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் விசேட வாராந்த பஜனை இன்று 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணியளவில் உரும்பிராய் இராமகிருஷ்ணமிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் ஸ்ரீமத் சுவாமி ரிதமயானந்தரின் ஆன்மீக கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (3-7)

## கண்காட்சி

கலம்காரி ஓவியக் கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப் பீடக் கட்டடத்தொகுதி கலைக்கூடத்தில் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மு.ப.10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள கலங்காரி கண்காட்சி இந்தியாவின் பாரம்பரியக் கலைகளில் ஒன்று என்பதுடன் யாழ்ப்பாணத்தின் பாரம் பரியத்தோடு தொடர்புடையது.இந்தக் கண்காட்சியை அனைவரும் பார்வையிடலாம் என யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் அ.றொ.கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார். (3-7)

## 16 இலங்கை மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்

இந்திய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் இந்த மீனவர்களை ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து இந்த இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். திருகோணமலை. சிலாபம் உள்ளிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (3-5)

## காமுகர்களை தண்டியுங்கள் மலையகத்தில் ஆர்ப்பாட்டம்



புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு. படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அட்டன் சாமிமலை ஸ்டொக்கம் பாடசாலை மாணவர்களும். பிரதேச மக்களும் இணைந்து நேற்று பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையிலிருந்து ஒல்டன் சாமிமலை பிரதான வீதி வரை பேரணியாக சென்று அங்கு பிரதான வீதியில் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்களும். பிரதேச மக்களும் ஈடுபட்டனர்.

புங்குடுதீவில் நடந்தது சரியா ?. சாட்சியங்களை பாதுகாப்பதற்கு அரசே நடவடிக்கை எடு. காமுகர்களுக்கு தண்டனை மரண தண்டனையாக இருக்க வேண்டும். இனியும் வேண்டாம் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பதாதைகளை ஏந்தியவாறும். கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்பாட்டத்தில் மாணவர்களும். பிரதேச மக்களும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடதக்கது. (3-5)

## அரச ஊழியர்களுக்கு ஜூன்மாதம் 2 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தில் இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் முதல் இரண்டாயிரம் ரூபா அதிகரிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இதனை தெரிவித்துள்ளார்.

இந்த சம்பள அதிகரிப்பு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

அரச ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பின் ஒரு கட்டமாகவே அவ் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அரச ஊழியர்களுக்கான 3 ஆயிரம் ரூபா இடைக்கால கொடுப்பனவுடன். கடந்த பெப்ரவரி முதல் வழங்கப்பட்ட ஐயாயிரம் ரூபாவையும் சேர்த்து 8 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-5)

## வெளிநாட்டவர்கள் 903 பேர் 2014-ம் ஆண்டு கைதாகினர்

இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்கள் 903 பேர் கடந்த வருடம் கைது செய்யப்பட்டனர்.இந்த தகவலை பொதுமக்கள் ஒழுங்குத்துறை அமைச்சர்ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர். பாகிஸ்தான். இந்தியா. பங்களாதேஷ். ஆப்கானிஸ்தான். சீனா. அமெரிக்கா. பிரித்தானியா. கனடா. பிரான்ஸ். ஜேர்மனி. எகிப்து. நோர்வே. நெதர்லாந்து. பிலிப்பைன்ஸ் மற்றும் சவுதி அரேபியாவை சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கை வந்து சமய மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். (3-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்திய கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டோர்களையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# வித்தியா படுகொலையுடன் தொடர்புடையவர்களுக்கு எந்தத் தயவு தாட்சண்யமும் காட்ட முன்வரக்கூடாது

## தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

(மட்டக்களப்பு)

**புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எந்த தயவு தாட்சண்யமும் யாரும் காட்ட முன்வரக்கூடாது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை செய்தியானது அனைவரது மனங்களையும் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கியுள்ளது, அத்துடன்இப்படுகொலையானது ஈனச்செயலின் உச்சக்கட்டமாகும்.

இவ்வாறான செயல்களை புரிந்தவர்களுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்கவேண்டும்.இவர்கள் மீது எவரும் தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது.

இந்த சம்பவமானது தமிழ் சமூகத்துக்கு நல்ல படிப்பினை தந்துள்ளது.இந்த நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் எமது சமூகம் எந்த நிலையில் உள்ளது என்பதற்கு ஒரு செய்தியாகவும் உள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாதவகையிலான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம்.

இதுபோன்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று கொண்டு வருகின்றது.இவற்றினை தடுப்பதற்கான விழிப்புணர்வினையும் வழிநடத்தல்களையும் மேற்கொள்ளாமலே இது வரை நாம் இருந்து வந்துள்ளோம். எதிர்காலத்தில் எமது செல்வங்களை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் எமது சமூகம் சிந்திக்கவேண்டும்.

இவற்றினை யாரும் அரசியல் மயப்படுத்த முனையக்கூடாது.சிலர் இந்த சம்பவங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த முனைவதை காணமுடிகின்றது. இது தொடர்பில் மக்கள் அவதானமாக இருக் க வேண்டும்.

பாடசாலை மாணவிகளுக்கு, பாடசாலைகளில் தங்களை பாதுகாப்பதற்கான விசேட செயற்றிட்டங்களை கல்வி திணைக்களம் மேற்கொள்ளவேண்டும்.

இதுபோன்ற குற்றச் செயலகளில் ஈடுபட எண்ணுவோர் அதனை கனவிலும் நினைக்காத வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டு அவர்களுக்கான தண்டனையும் ஏற்படுத்தவேண்டும்.

உயிரிழந்த மாணவியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் உயிரிழந்த மாணவியின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மாணவி படுகொலை குறித்து சீரான விசாரணை வேண்டும்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மாணவி ஒருவர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து இடம்பெற்ற வன்முறைகளின் போது யாழ்ப்பாண நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து சீரான விசாரணை நடத்த வேண்டும் என்று, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது.

சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்களின் போது நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று, சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் அஜித் பத்திரன தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவில் 18 வயதான மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை அடுத்து ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, பிரதம நீதியரசர் கே.சிறிபவன் மற்றும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சென்றிருந்தனர்.

அவர்கள் தாக்குதலுக்கு உள்ளான நீதிமன்ற கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டிருந்தனர்.

அத்துடன் பிரதம நீதியரசர், யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிகளுடனும் சந்திப்பை நடத்தி இருந்தார்.

அதேநேரம் இந்த தாக்குதல் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து, வடமாகாணத்தின் சட்டத்தரணிகள் கடமைகளில் இருந்து விலகி இருந்தனர்.

எவ்வாறாயினும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 130 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 9 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், யாழ்ப்பாணம் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த ஐந்து பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் தலைமையக பரிசோதகர் மற்றும் ஊர்காவற்றுறை தலைமையக பரிசோதகர் ஆகியோர் இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். (3-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 31
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் PR
தொ.இ: B/4539

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 9 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/4540

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 22
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L லண்டன் NOT PR
தொ.இ: B/4542

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 50 1/2 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4543

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 8 1/2
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்
தொ.இ: G/4580

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 65/43 சூரி. செவ் 8இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: NDES
தொ.இ: G/4582

பிறப்பு: 1986 NONRC
உயரம்: 4'8"
தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4583

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 32 1/4 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BCA/ தனியார் தொழில்
தொ.இ: G/4588

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய யோகா பயிற்சிகள் நல்லூரில் இன்று ஆரம்பம்


(யாழப்பாணம்)

யாழ்.யோக அரங்கம் நல்லூர்த் தேரடிக்கு அண்மையாக அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றது. இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சுதேச மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி.சாவித்திரி ரவிச்சந்திரன் 'ஆரோக்கியத்திற்கான யோகா' என்னும் தொனிப் பொருளில் விசேட விரிவுரையை நிகழ்த்த வுள்ளார்.

யோகா பயிற்சி நெறி -1. காலை 6 மணி தொடக்கம் காலை 7 மணிவரையும் பயிற்சி நெறி-2 மாலை 4.30தொடக்கம் 5.30 வரையும் மூன்றாவது பயிற்சி நெறி இரவு 6 தொடக்கம் 7 மணி வரையும் இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

மருத்துவர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்காணப்பட்ட ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழி முறைகள் முதன்மைப்படுத்தப்பட்டு அனுபவமுள்ள ஆசானால் நுட்பமாகப் பயிற்றுவிக்கப்படு வதுடன் பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரால் வழங்கப்படும். கையேடு மற்றும் சான்றிதழ் என்பன வும் வழங்கப்படும். ஆர்வமுள்ள அனை வரும் இணைந்து பயன் பெறலாமென்று யாழ். யோக அரங்கம் அறிவித்துள்ளது. (3)




## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி கண்டனம்



பாடசாலை மாணவி செல்வி வித்தியா பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமையை சர்வதேச இந்து மத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் வன்மையாக கண்டித்துள்ளார்.

தவறு செய்தவர்கள் யாராகயிருந்தாலும் கட்டாயமாக சட்டத்தின்முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்கப்படவேண்டும்.

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். எனவே படுபாதகச் செயலைச் செய்த இவர்களுக்கு அதிகபட்சமான மரணதண்டனை வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு மரண தண்டனை வழங்கப்படுவதன் மூலம் இனிமேல் இவ்வாறு குற்றங்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறாது தடுக்க முடியும் என குருபீடாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (3)

# யாழில் போராட்டங்களை நடத்த இடைக்காலத் தடை உத்தரவு

## யாழ்.நீதவான் நீதிமன்றம் பிறப்பித்தது

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகர்ப்பகுதியில் நேற்றிலிருந்து எதிர்வரும் 14 நாட்களுக்கு கூட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடத்துவதற்கு யாழ்.நீதவான் நீதிமன்றம் இடைக் கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.**

யாழ்.நீதிமன்றுக்கு முன்னாள் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடுவிக்கக்கோரி மக்கள் போராட்ட அமைப்பு யாழ்.நகரில் நேற்றைய தினம் போராட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

இப்போராட்டத்தினை தடை செய்து கட்டளை பிறப்பித்த போதே யாழ். மேல் நீதிமன்றம் மேற்படி தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

யாழ்.நீதிமன்றின் அக்கட்டளைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாநகர பகுதியில் 2015.05.23 (நேற்று) யாழ்ப்பாணத்தில் 2015.05.20 ஆம் திகதி சட்டவிரோத கூட்டத்தை கூட்டி நீதிமன்றுக்குள் புகுந்து பொது இடம் ஒன்றுக்கு சேதம் ஏற்படுத்தியமை சம்பந்தமாக கைது செய்து நீதிமன்றின் கட்டளைப்படி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை விடுதலை செய்வதற் கும் பிணை வழங்குமாறும் விடுத்த மக்கள் போராட்டத்தலைவர் குமாரவேலு ஆகிய நீவிர் உமது கூட்டத்தோடு போராட்டத்தை நடத்துவதனால் பொதுமக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பொது இடங்களுக்கும் பாரிய சேதத்தையும் மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் இடையூறைஏற்படுத்தக்கூடிய தாகும்.

இதனை கருத்திற்கொண்டு மேற்பெயர் கூறப்பட்டுள்ள நீவிர் உமது கூட்டத்தோடு நகர்ப் பகுதியில் போராட்டத்தை நடத்துவதை உடனடியாக நிறுத்துமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் கட்டளை விடுக்கின்றது.

மீறும் பட்சத்தில் உம்மையும் கூட்டத்தினரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு கட்டளை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2015.05.23 திகதியில் (நேற்று) இருந்து 14 நாட்களுக்கு யாழ்.நகர்ப்பகுதியில் எவ்வித கூட்டங்களையோ போராட்டங்களையோ நடத்துவது நிறுத்தப்படுகின்றது என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-4)




## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்கு பாரதி கலை மன்றத்தின் 33 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் பாரதி முன்பள்ளி வளாக சுப்பையா அரங்கில் தலைவர் த.விமல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், சங்கானை வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி. காசிநாதன் நிருபா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவவிருந்தினர்களாக சுழிபுரம் மேற்கு ஐக்கிய நாணய சங்கத்தலைவர் சி.துரைசிங்கம், சுழி புரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை செயலாளர் வி.சிவராமன் மற்றும் சுழிபுரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் திருமதி. ப.கிருஷ்ணவேணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-7)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முகிழ் நிலை ஆசிரியர் அமல தாஸ் பவிக்குமாரின் "நான் பார்த்த உலகம்" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மை யில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெற்றது. இதன் போது பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் நூலை வெளியிட்டு நூலாசிரிய ரின் பெற்றோரிடம் நூலை கைய ளிப்பதை படத்தில் காணலாம்.



## சைவசித்தாந்த பண்டிதர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் வருடந்தோறும் நடத்திவரும் பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய மூன்று பிரிவுகளுக்குமான பரீட்சைகள் எதிர்வரும் யூன் மாதம் 25,26,27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

பரீட்சைக்குத்தோற்ற விரும்புவர்கள் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பப்படிவங்களை சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கும் படி பரீட்சை சபைச் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (3-5)

## மஹோற்சவம்

அல்வாய் வடக்கு குருக்கட்டு அருள்மிகு அரசடி விநாயகர் தேவஸ்தானத்தின் மன்மத வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று மு.ப.10.30 மணியளவில் கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 2 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது. (3-7)

## 'மூன்றாம் முத்தம்' வெளியீட்டு விழா

மிஷாந்தி செல்வராஜாவின் 'மூன்றாம் முத்தம்' குறுநாவல் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் மற்றும் மகளிர் ... கலா மகேஸ்வரன் கலந்து கொள்ள வுள்ளார். (இ-5)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபைகளில் கற்பிக்க ஆங்கில விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அரசாங்க அங்கீகாரமுள்ள அரச தனியார் நிறுவனங்களில் ஆங்கில டிப்ளோமா சான்றிதழ்களை உடையவர்கள் மற்றும் ஓய்வூதிய ஆங்கில ஆசிரியர்களும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னராக விண்ணப்பிக்க முடியும். உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சி எனும் தபால் முகவரிக்கோ அல்லது (dvtkilinochchi@vtasl.gov.lk) என்னும் மின்னஞ்சல் முகரிக்கு சுயவிபரக் கோவை அனுப்பி விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (3-5)

## திருமறைக்கலாமன்ற தமிழ் விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழா எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் 26,27, 28ஆம் திகதிகளில் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று நாட்களும் காலை 8.45 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் " ஈழத்துக் கலை இலக்கியம்- கருத்து நிலையும் , இயங்கு தளமும்" என்னும் மையப்பொருளில் கவிதை , சிறுகதை ,நாவல் , நாடகம் உட்பட பல்வேறு துறைகளில் 24 தலைப்புக்களில் ஆறு அமர்வுகளாக ஆய்வரங்குகளும், மாலை 6 மணிக்கு 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது.

பொன்விழா ஆண்டில் திருமறைக் கலாமன்றம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக தமிழ் விழா அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் வயல் நிலங்களில் எரிபந்த நோய் தாக்கம்

## கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி மாவட்ட நெல் வயல்களில் எரிபந்த நோயின் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில்அவர்அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தற்போது நிலவும் சாதகமற்ற காலநிலை,மப்பு மந்தார நிலை இந்நோய் பரவலுக்கு சாதகமாக அமைந்துள்ளது.மேலும் பயிர்ச்செய்கைக்கு அதிகரித்த யூரியா பசளைப் பாவனை இந்நோயின் தாக்கத்தை வேகப்படுத்துவதாக அமையும்.இது பயிரின் எந்தவொரு வளர்ச்சிப் பருவத்தையும் தாக்கக்கூடிய ஒரு பங்கசு நோயாகும்.

பயிரின் இலை,தண்டு கணுக்கள், கதிர்கள் மற்றும் தானியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் தாக்கத்தின் ஆரம்பத்தில் நடுப்பகுதி அகன்ற முனைப்பகுதி ஒடுங்கிய சாம்பல் நிற மையப்பகுதியையும் காய்ந்த ஓரங்களையும் கொண்ட புள்ளிகள் உருவாகும்.

அப்புள்ளிகள் படிப்படியாக பெரிதாகி ஒழுங்கற்ற பெரிய புள்ளிகளாக மாறும்.தீவிர தாக்கத்தின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிக்கும். தண்டு மற்றும் கணுக்களில் இந் நோயின் தாக்கம் ஏற்படும்போது அவ்விடம் கறுப்பு நிறமாக மாறி முறியும்.மேலும் இந்நோய் கதிரின் கழுத்துப்பகுதியை தாக்கும்போது கதிர் முறிவடையும். இது கழுத்துக் குத்திநோய் எனவும் விவசாயிகளால் அழைக்கப்படும்.

கதிர் ஆரம்ப நிலையில் தாக்கம் ஏற்பட்டால் தானியங்கள் உருவாகமாட்டாது.

எனவே வயல்நிலங்களில் எரிபந்த நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு யூரியா பசளையை குறைத்து பாவிக்கவேண்டும், வயலில் இந்நோயின் தாக்கம் நாற்றுப் பருவத்தில் (ஒரு மாதத்திற்குள்) இருப்பின் 10கிராம் கார்பண்டசீம்னை 10 லீற்றர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்,வளர்ச்சி பருவத்தில் இந்நோயின் தாக்கம் அதிகமாக தோன்றும்போது ரியுபுகொணசோல் (Tebuconazole) 15-20மி.லீ/10லீ நீரில் கலந்து விசிறவும் அல்லது ட்ரைசைக்ளசோல் (Tricyclazole) 6கிராம்/10லீ தண்ணீரில் கலந்து விசிறவும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# சிலாபத்துறை கடற்கரையில் 95 கஞ்சாப் பொதிகள் மீட்பு

மனனார், முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கடற்கரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 201 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிலாபத்துறை கடற்கரை பகுதியில் பொதி ஒன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கடந்த வியாழக்கிழமை இரவு சிலாபத்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. உடனடியாக அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் குறித்த பொதியை மீட்டு சோதனை செய்துள்ளனர்.

இதன் போது 95 பொதிகளை கொண்ட 201 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை சிலாப்த்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# 'யாழ்ப்பாண நினைவுகள்' நூல் அறிமுக நிகழ்வு

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் வேதநாயகம் தபேந்திரன் எழுதிய யாழ்ப்பாண நினைவுகள் பாகம்1 நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10மணிக்கு சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தலைவர் கலா நிதி தமிழ் மணி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பி.சத்தியலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன். ம.தியாகராசா இ.இந்திரராஜா, எம்.பி. நடராஜ் உட்பட வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.நூல்அறிமுகவுரையை கிளி நொச்சி மாவட்ட சமூக சேவகர் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன் ஆற்ற நூல்வெளியீடுநடைபெறும்.(2)

# மன்னார் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் வித்தியாவுக்கு நேற்று மௌன அஞ்சலி



(மன்னார்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரியும் மாணவிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 10மணியளவில் மன்னார் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் நடைபெற்றது.

மன்னார் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டது. மன்னார் முச்சக்கரவண்டி சங்கத்தின் செயலாளர் ஏ.நசூருதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவுக்கு மன்னார் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. குறித்த மாணவி துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையினை வன்மையாக கண்டிப்பதோடு, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். குறித்த அஞ்சலி நிகழ்வில் மன்னார் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், மன்னார் தனியார் பேருந்து சங்க உறுப்பினர்கள், தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (2)




# காம கழுகுகளின் கையில் சிக்குண்டு கருகிய வித்தியா

## கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிப்பு

பாடசாலை சென்று ஆயிரம் எதிர்கால கனவுகளோடு படித்துக் கொண்டிருந்த புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா, காமவெறியர்களால் கூட்டு வன்புணர்வுக்குப்பின் படுகொலை செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிக்கிறோம் என கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வளர்த்து பாடசாலைக்கு அனுப்பும் போது பல்வேறு நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகளுடன் அனுப்பி வளர்த்தெடுக்கின்றார்கள். பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த சமூகத்தின் தேவையை குறித்த மாணவர்கள் பூர்த்தி செய்வார்கள் என்ற நல்நோக்கில் அவர்களுக்கு கல்வி புகட்டுகின்றார்கள். இந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வித்தியாவின் வாழ்வில் எட்டப்படாத ஒன்றாகி விட்டது.

இலங்கை தீவில் இடம்பெற்ற போர் ஓய்ந்து ஓரளவு நிம்மதியான சூழலில் கல்வியை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு தொடர்ச்சியான பாலியல் தொந்தரவுகளும், பாதுகாப்பற்ற சூழலும் பாலியல் தேவைக்காக கொலை செய்வதும் எங்கோ ஒரு மூலையில் எமது மண்ணில் நடத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அதிலும் உச்சமானதாகவும், மிகவும் கொடூரமானதாகவும் வித்தியாவை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலைசெய்தமை அமைகிறது. தனது பாடசாலை தோழிகளுடன் கூடியிருந்து பாடம் படித்துவிட்டு வீடு செல்லும் வழியில் காம பசி கழுகுகளின் கையில் சிக்குண்டு கருகிப்போன பாடசாலை மாணவியின் கொலைக்கு கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த சமூகத்தில் இனி ஒரு பாடசாலை மாணவிக்கு இவ்வாறான கொடூரம் நிகழாத வகையில் சகல தரப்பினரும் பாதுகாப்பு வழங்க வேண்டும். குறிப்பாக சட்டத்தின் முன் இவர்கள் நிறுத்தப்பட்டு கொலைக் குற்றத்திற்குரிய தண்டனை இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மரண பயத்தின் மூலமே இவ்வாறான இழி செயல்களை சமூகத்தில் இருந்து ஓரளவுக்கேனும் ஒழிக்க முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் எமது தேசத்தில் நடமாடும் ஒவ்வொரு பாடசாலை மாணவிகளையும் பாதுகாக்க முடியும்.இந்த பிள்ளைகளின் பாதுகாப்புக்காக நாம ஒன்றிணைவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# நந்திக்கடல் ஆற்றை ஆழப்படுத்துவதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியும்

## டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல், நந்திக்கடல் ஆற்றைச் சுத்தப்படுத்தி, அதனை ஆழமாக்குவது தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், மேற்படி விடயம் தொடர்பில் அண்மையில் யாழ். வந்திருந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தனித்தனியாகக் கலந்துரையாடியிருந்தேன். அதனை மீண்டும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்,


நந்திக்கடல் இப்பகுதி மக்களின் மிக முக்கிய வாழ்வாதார கேந்திரமாக இருந்துவருகிறது. யுத்தம் காரணமாக பெரிதும் பாதிப்பிற்குள்ளான மக்கள் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதனை சுத்தப்படுத்தி, ஆழமாக்கி, புனரமைப்பதன் மூலம் வட்டுவாகல் மற்றும் நாயாறு பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் சிறந்த முறையில் முன்னேற்றம் காணும் என்பதை நான் அறிவேன்.

இப்பகுதிக்குச் சென்று, மக்களைச் சந்தித்தும், இப்பகுதியை நேரில் பார்த்தும் இதனை நான் உணர்ந்துள்ளேன்.

நீண்ட காலமாக இக் கடல் பகுதியில் சேறு நிரம்பியுள்ளதால், இங்கு தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இப்பகுதியில் தொழி லின்மை காரணமாக பல குடும்பங் கள் பாரிய கஷ்டங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்துவரும் நிலையில், அதனை ஆழப்படுத்துவதன் ஊடாக இம் மக்களுக்கு பாரியளவிலான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதி விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றேன் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (2)



புதுக்குடியிருப்பில் 19 கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்கு விசேட உதவித்திட்டத்தின் கீழ் உடுபுடவைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும் இறுக்கமாக நிலைநாட்டப்பட வேண்டும்

## வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு

(கரணவாய்)

**புங்குடுதீவு மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி வித்தியாவின் ஈவிரக்கமற்ற படுகொலை முழு தமிழ்ச் சமூகத்தையும் மீளத்துயரில் ஆழ்த்தியுள்ளது. நீதிமன்றத்தில நிறுத்தப்பட்டுள்ள கொலையாளிகளுக்கு விரைந்து உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும் என வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி அமைப்பு தெரிவித்துள்ளது.**

அவ்வமைப்பின் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாள்தோறும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடந்தேறி வந்த சமூகச் சீர்கேட்டின் உச்சக்கட்டமாகவே வித்தியாவின் படுகொலை அமைந்துள்ளது.

சமூகப் பொறுப்புள்ள அனைவரும் யாழ்ப்பாண குடாநாட்டில் நாள்தோறும் அரங்கேறி வந்த சமூகச் சீர்கேடுகளை களைவதற்கும் தடுப்பதற்கும் பின் நின்றமை காமுகர்கள் இக்கொலையைத் துணிந்து செய்வதற்கு வழிவகுத்துள்ளதா என எண்ணத்தோன்றுகின்றது. இக்கொலை தமது பெண்பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாக பெற்றோரை சிந்திக்க வைத்துள்ளது.

வெள்ளைச் சீருடை அணிந்து பள்ளிக்குச் செல்லும் மாணவிகளின் எதிர்கால கனவுகளுக்கும் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் இக்கொலை சவாலாக அமைந்துள்ளது. ஆன்மீகத்திலும் ஒழுக்கத்திலும் கலாசாரத்திலும் உச்சத்தில் விளங்கிய யாழ்ப்பாணக் குடாநாட்டினை காமுகர்களின் கொலை வெறியாட்டம் வெட்கித் தலைகுனிய வைத் துள்ளது. வடக்கு கிழக்கில் இனமத பேதமின்றி ஆயிரக்கணக்கான மாணவர்கள் வீதியிலும் இறங்கி தமது பாது காப்பினை முழுச் சமூகத்து டன் கோரியுள்ளதுடன் வித்தியாவின் கொடூரமான மரணத்தையும் கண்டித்துள்ளார்கள்.

மாணவிகள் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று திரும்பும் போது எந்த விதமான அசௌகரியங்களும் வீதியில் நடமாடுபவர்களால் ஏற்படாதிருக்க சமூக பொறுப்புள்ள அனைவரும் உத்தரவாதமளிக்க வேண்டும். இவ் வேளையில் பெண்களுக்கும் மாண விகளுக்கும் அசௌகரியங்களை ஏற் படுத்துபவர்கள் சட்டத்தின் முன் நிறு த்தி தண்டனை பெற்றுக்கொடுக் கப்படவேண்டும். யாழ்ப்பாணக் குடாநா ட்டின் சட்ட மும் ஒழுங்கும் மிக இறுக்கமான வகையில் நிலைநாட்டப்பட்டு மாணவிகளும் பெண்களும்பாதுகாக்கப்பட வேண்டும்.


சுதந்திரம் எது என்பதை புரியாதவர்களுக்கு சட்டமும் ஒழுங்கும் இறுக்கமான முறையில் நிலை நாட்டப்படுவதன் மூலம் நீதி எவ்வாறு நிலைநாட்டப்படுகின்றது என்பதை புரிய வைக்க முடியும் (3-60)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 40 | 80 | 40 |
| தக்காளி | 100 | 90 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 70 | 100 | 120 |
| கரட் | 150 | 110 | 200 | 240 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 50 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 100 | 120 | 130 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 160 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 120 | 80 |
| பயற்றங்காய் | 180 | 120 | 100 | 160 |
| லீக்ஸ் | 250 | 130 | 240 | 180 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 50 |
| கறிமிளகாய் | 120 | 70 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 320 | 600 | 600 |
| போஞ்சி | 250 | 140 | 240 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 200 | 150 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 100 | — | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 30 |

# மைத்திரி - மகிந்த சந்திப்பு இனிமேல் இடம்பெறாதாம்

## விமல் வீரவன்ச கூறுகிறார்



முன்னாள் ஜனாதிபதிக்கும், தற்போதைய ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இனி இடம்பெறாதென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயில் அமைந் துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இடையி லான சந்திப்புக்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாது.எனினும் இரு தரப்பு உறுப்பினர்களுக்கிடையில் சந்திப்புகள் இடம் பெறலாம் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

இனி எந்த ஒரு சந்தர்ப்பங்களிலும் முன்னாள், இந்நாள் ஜனாதிபதிகளின் சந்திப்புகள் இடம் பெறாதென்பது உறுதி என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# பருத்தித்துறை-மருதங்கேணி வீதி விரைவில் புனரமைக்கப்படும்

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத சுமார் 33km நீளமான பருத்தித்துறை -மருதங்கேணி வீதியை முற்றுமுழுதாக திருத்தம் செய்வதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் அமைச்சரும் ஐ.தே.க. பொதுச் செயலாளருமாகிய கபீர் காசீம் ஒப்புதல் அளித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரி ய வருவதாவது, த.தே.கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கும் மேற்படி அமைச்சருக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பில் இம் முடிவும் ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இவ் வீதியின் ஆரம்பகட்ட வேலைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அண்மையில் வடமராட்சி கிழக்கில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (3-64)

# இலங்.-ரஷ்யாவுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையில் வெகுசன ஊடகத்துறை ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடபபடவுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க முன்வைத்த குறித்த கோரிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கிடையில் ஊடகத்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. (3-5)




- 1738 - மெதடிஸ்த இயக்கம் ஜோன் உவெஸ்லியால் ஆரம்பிக்கப்பட்டது.
- 1798 - அயர்லாந்தில் பிரித்தானிய ஆக்கிரமிப்புக் கெதிராக ஐரியர்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று.
- 1844 - முதலாவது மின்னியல் தந்திச் செய்தி சாமுவேல் மோர்ஸ் என்பவரால் வோஷிங்டன் டிசியிலிருந்து மேரிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட செய்தி: What hath God wrought.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் வேர்ஜீனியாவின் அலெக்சாண்டிரியா நகரைக் கைப்பற்றினர்.
- 1883 - நியூ யோர்க்கில் புரூக்ளின் பாலம் திறந்து விடப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் "பிஸ்மார்க்" என்ற ஜேர்மன் போர்க்கப்பல் "ஹூட்" என்ற பிரித்தானியக் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 1956 - சுவிட்ஸர்லாந்தில் முதலாவது யூரோவிஷன் பாடல் போட்டி இடம்பெற்றது.
- 1962 - அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்கொட் கார்ப்பெண்டர் அவ்ரோரா 7 விண்ணூர்தியில் மூன்று முறை பூமியைச் சுற்றி வந்தார்.
- 1991 - எத்தியோப்பியாவில் இருந்து யூதர்களை இஸ்ரவேலுக்குக் கொண்டு வரும் சொலமன் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது.
- 1993 - எதியோப்பியாவிடமிருந்து எரித்திரியா விடுதலை அடைந்தது.
- 2000 - 22 வருட முற்றுகைக்குப் பின்னர் ஸ்ரேலியப் படையினர் லெபனானிலிருந்து வெளியேறினர்.
- 2000 - இலங்கையில் நோர்வேத் தூதரகம் மீது குண்டு வீசப்பட்டது.
- 2001 - எவரெஸ்ட் சிகரத்தை 15 வயது ஷெர்ப்பா டெம்பா ஷேரி எட்டினார். அச்சிகரத்தின் உச்சியை எட்டிய வயதில் குறைந்தவர் இவரே.
- 2002 - ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் மொஸ்கோ உடன்பாட்டை எட்டின.
- 2006 - விக்கிமேப்பியா ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1686 - கப்ரியேல் பரன்ஹைட், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1736)
- 1819 - விக்டோரியா மகாராணி, ஐக்கிய அமெரிக்காவின் அரசி (இ. 1901)
- 1905 - மிகயில் ஷோலகவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ. 1984)
- 1921 - சு. வேலுப்பிள்ளை, ஈழத்து நாடகாசிரியர், எழுத்தாளர்


### இறப்புகள்

- 1543 - நிக்கோலாஸ் கொப்பர்னிக்கஸ், வானியலாளர் (பி. 1473)
- 1981 - சி. பா. ஆதித்தனார், தினத்தந்தி நாளிதழ் நிறுவனர் (பி. 1905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய நிதிமோசடிகளை சு.க. மூடி மறைக்கிறது

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கியில் 2ஆயிரத்து700 பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது. ஆனால் அர்ஜுன் மகேந்திரனின் 10 பில்லியன் ரூபா விடயத்தினை மட்டும் பேசுகின்றனர். ராஜபக்ஷவின் காலத்தில் இடம்பெற்ற இந்த பாரிய மோசடியை எதிர்க்கட்சியினர் மூடி, மறைக்க பார்க்கின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் எந்தவித கேள்வி பத்திரங்களும் கோரப்படாமல் மத்திய வங்கியின் 2 ஆயிரத்து 700 பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பதில் ஆளுநர் சமரசிங்க இதுபற்றிய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன், தனியார் வத்தகர் குழுவொன்றும் இதனை ஆராய்ந்து வருகின்றது. 2012, 2013, 2014 ஆகிய காலப்பகுதிகளிலேயே இந்த நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் விபரம் தொடர்பாக ஆராய்ந்து விரைவில் பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதுடன் நாட்டு மக்களுக்கும் இதனை தெரியப்படுத்துவேன்.

மகிந்த ஆட்சிக்காலத்திலிருந்த ஜீ.எல். பீரிஸ், வாசுதேவ நாணயக்கார போன்ற எதிர்க்கட்சியினர் இதனை மூடி மறைப்பதற்காக அர்ஜுன் மகேந்திரன் விடயத்தில் பாராளுமன்றத்தில் அக்கறை காட்டுகின்றனர். மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்ற முயல்கின்றனர்.

இந்த பணம் இருந்திருந்தால், நாட்டிலுள்ள ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தியிருக்கலாம். சம்பள அதிகரிப்புகளை வழங்கியிருக்கலாம். ஐந்து வருடத்தில் பதவி வகித்துவிட்டு அதிகாரிகளாகவும் இருந்து பல கோடி ரூபாய்களை சம்பாதித்து தற்போது அனுபவிக்கின்றனர். இதற்காகவே அர்ஜுன் மகேந்திரன் விடயத்திலும் விசாரணைக் குழுவொன்றை அமைத்தோம். சிலர் நீதிமன்றம் சென்றனர். மத்திய வங்கி ஆளுநர் பற்றிய அறிக்கையையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தோம்.

மத்திய வங்கியில் கடந்த மூன்று வருட காலத்தில் 2700 பில்லியன் ரூபா மோசடி செய்தமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்படுமென்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# முதலீட்டாளர்களுக்கு நாட்டில் ஆரோக்கியமான சூழலுள்ளது

## மங்கள சமரவீர பெருமிதம்



தற்போது நாட்டில் முதலீட்டாளர்களுக்கு ஆரோக்கியமான சூழல் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். ஜெனீவாவிலுள்ள ஜேர்மன் பிரதிநிதிகள் குழுவை சந்தித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய நிர்வாகத்தினாலேயே இந்த நிலை உதயமாகியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தற்போது நீதிமன்ற சுயாதீனத் தன்மை கட்டியெழுப்பப்பட்டுள்ளதால் முதலீட்டாளர்கள் பயம் மற்றும் சந்தேகம் இன்றி இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (3-5)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பக்கச்சார்பானது-கம்மன்பில

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஒருதலைப்பட்சமாக செயற்படுவதை தெளிவாக காணமுடிகின்றதென பிவிதுரு ஹெல உறுமயவின் செயலாளர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பிரதமர் ரணில் வக்கிரமசிங்க தொடர்பில் முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழு இதுவரை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய இவ்ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பிரதமரின் நெருங்கியவர் என்பது உறுதியாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# என்மீது குற்றஞ்சாட்டுவதற்கு சாட்சியங்கள் எதுவுமேயில்லை

## துமிந்த சில்வா தெரிவிப்பு



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கில் தம்மீது குற்றம் சுமத்துவதற்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர கொலை வழக்கு விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து கூறுகையில் அவர் இதனை தெரிவித்தார். ஊடக சர்க்கஸ் அடிப்படையில் இந்த வழக்கை சில தரப்புக்கள் முன்னெடுத்து செல்கின்றன என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை விசாரணையின் பின்னர் கருத்துரைத்த கொலையுண்ட பாரத லக்ஸ் மனின் மகளான ஹிருணிகா பிரேமசந்திர, தமது தந்தையின் கொலை வழக்கை மேல்நீதி மன்றத்துக்கு கொண்டு சென்றமை முக்கிய முன்னேற்றமாகும்.

இந்நிலையில்தமது தந்தையின் மரணத்துக்கு காரணமானவர்களை சட்டத்துக்கு முன் கொண்டு வரும்வரையில்ஓயப் போவதில்லை என்றும் ஹிருணிகா மேலும் தெரிவித்தார் (3-5)

# குழப்பம் ஏற்படுத்தியவர்கள் முன்னாள் புலி உறுப்பினர்களாம்

பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவு செய்து கொல்லப்பட்ட சம்பவத்தை பயன்படுத்தி யாழ். பிரதேசத்தில் குழப்பம் ஏற்படுத்தி கைதானவர்களில் முன்னாள் விடுதலைப் புலிகள் பலர் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த பிரச்சினையை பயன்படுத்தி நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த இடமளிக்கக் கூடாது என அரசாங்கத்தை கோருவதாக ஐ.ம.சு.மு. எம்.பி. அனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவியின் கொலை தொடர்பான சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடக்க இடமளிக்கக் கூடாது.

பாதுகாப்பு குறித்த கவனயீனத்தினாலேயே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த சம்பவத்தை தொடர்ந்து படையினர் மற்றும் நீதிமன்றம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இனவாத பிரச்சினைகளுக்கு இவ்வாறான சம்பவங்களே காரணமாக அமைந்தன.

அரசாங்கத்தின் நெகிழ்வுப் போக்குக் காரணமாக ஈழக்கனவுடன் செயற்படுவோர் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தியிருக்கலாம்.

சுவிஸ் குமாரை இதனுடன் தொடர்புபடுத்த முயல்கின்றனர். அவர் சுவிசிலே இருக்கிறார். இதனை பயன்படுத்தி மகிந்த ராஜபக்ஷ மீது சேறுபூச முயல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# வாரம் ஒரு தகவல்

## மருத்துவ சோதிடம்

"ஐயா... சோதிடர் வீடு இது தானே!"

"ஆமாம். நான் தான் சோதிடர்... உங்களுக்கு என்ன வேண்டும்?"

"ஜாதகம் பார்க்க வேண்டும்."

"உட்காருங்க... உங்களுடைய ஜாதகக் குறிப்பு கொண்டு வந்திருக்கிறீர்களா?"

"இந்தாங்க!"

"இந்தக் காலத்தில் பலர் சோதிடத்தை நம்புவதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் சித்தர்களுக்கே இதில் நம்பிக்கை இருந்தது. சித்த மருத்துவத்தில் சத்திர விதி விலக்கு என்று ஒன்று உண்டு. அந்த விதிப்படி அமாவாசைக்குப் பின்னர் குறிப்பிட்ட திகதிகளில் வரும் நாட்களில் மனித உடம்பின் சில இடங்களில் அறுவைச் சிகிச்சை செய்யக்கூடாது"

"சமீபத்தில் கூட மருத்துவ சோதிட இயல் சம்பந்தமாக ஒரு சர்வ தேச மாநாடு நடந்தது. அங்கே ஓர் அறுவைச் சிகிச்சை நிபுணர் பௌர்ணமி தினங்களில் அறுவைச் சிகிச்சை செய்யும் போது நோயாளிகளுக்கு வழக்கத்தை விட அதிகளவு இரத்தப் பெருக்கு இருப்பதாகவும் அதற்கு என்ன காரணமென்று சரியாகத் தெரியவில்லை என்றும் கூறியிருக்கிறார். சத்திர சிகிச்சைக்கு முன்னர் சோதிடம் பார்ப்பது நல்லது என்றும் கூறியிருக்கிறார்."

"அப்படியா"

"ஆமாம் அதனால் தான் நான் இப்பொழுது உங்களைத் தேடி வந்திருக்கிறேன். எதிர்வரும் சனிக்கிழமை எனக்கு ஒரு சத்திர சிகிச்சை. அது நல்லபடியாக முடியுமா?

"கவலையே படாதீங்க... உங்களுக்கு ஒன்றும் ஆகாது..."

எனக்கு ஒன்றும் ஆகாது என்று தெரியும்"

"உங்களுக்குத்தானே சத்திரசிகிச்சை"

"இல்லை"

"அப்படியானால்... நீங்க..."

"அந்த சத்திரசிகிச்சை செய்யப் போற டாக்டர்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இதயங்களை வெற்றி கொள்ளுதலில் தீராத அவா...!

போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும்கூட, தமிழரை வெற்றி கொள்ளுதல் பற்றிய மனோ பாவத்தில் இருந்து இன்னமும் தென்னிலங்கைச் சிங்களச் சமூகம் விடுபடவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னரும் கூட இந்த நிலை மாறவில்லை என்பதை அண்மைய சில நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

கடந்த வாரம் பலாலியில் உள்ள யாழ். படைகளின் கட்டளைத் தலைமையகத்தில், தமிழ்மொழிப் பயிற்சியை நிறைவு செய்த 320 படையினருக்கு சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பொது நிர்வாக, உள்ளூராட்சி அமைச்சர் கரு ஜெயசூரியவும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, மூன்று விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தார். அதில் ஒன்று கடந்த காலம் பற்றியது. அடுத்தது நிகழ்காலம் பற்றியது. மூன்றாவது எதிர்காலம் பற்றியது. இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக நீடித்த போருக்கு, மொழிப் பிரச்சினையும் ஒரு முக்கியமான காரணம் என்பது முதலாவது விடயம்.

இரண்டாவது, தமிழ்மொழியை சிங்களவர்களும், சிங்கள மொழியைத் தமிழ் மககளும் கற்பதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க முடியும் என்பது. இதற்கான முயற்சிகள் தான் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவ்து விடயம் மிக முக்கியமானது. மொழியின் ஊடாக சிங்களவர்களும், படையினரும் தமிழர்களை வெற்றி கொள்ள முடியும் என்பதே அது. அதாவது, போரில் மட்டுமன்றி, போருக்குப் பின்னரும் தமிழர்களுடன் இணைந்து வாழ்வது குறித்தும் சிங்களச் சமூகம் சிந்திக்கிறதோ இல்லையோ, சிங்கள அரசியல் சமூகம் அத்தகையதொரு மனப்பாங்கைக் கொண்டிருக்கவில்லை என்பதையே இது வெளிக்காட்டுகிறது.

அவர்களின் சிந்தனை முழுவதும் தமிழரை வெற்றி கொள்வதிலேயே குறியாக இருக்கிறது. தமிழரை எந்த வகையிலாவது வெற்றி கொள்வதுதான் இப்போது சிங்களத் தலைமைகளிடம் உள்ள பிரதான பிரச்சினையாக இருக்கிறது.

போரில்வெற்றி கொண்ட நாம், அமைதியை வெற்றி கொள்ளவில்லை என்றும், தமிழரின் மனங்களை வெற்றிகொள்வதில் தோல்வியடைந்துள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் வெளியிட்டது ஆதங்கத்தை. ஆனால், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன கூறியிருப்பது, அடுத்த கட்ட இலக்கை. அதாவது, தமிழரை எப்படி வெற்றி கொள்ள வேண்டும் என்ற மூலோபாயத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.









இவர்கள் யாரும் தமிழரை ஏதோ ஒரு வகையில் வெற்றி கொள்வது பற்றித்தான் பேசுகின்றனர். ஒருவரின் வெற்றி என்பது, இன்னொருவரின் தோல்வியாகும். தமிழ் மக்களின் முப்பதாண்டு ஆயுதப் போராட்டத்தில், அரசாங்கம் வெற்றி பெற்றது. அந்தப் போராட்டத்தில், தமிழர் தரப்பு தோல்வி கண்டது. போருக்குப் பின்னர், தேவையானது வெற்றி-தோல்வி அல்ல. அவற்றுக்கு அப்பால் கூட்டாக முன்நகர்வதுதான் முக்கியமானது. இவ்வா

ந்து முன்னேறுதல், கூட்டாக வெற்றியீட்டுதல் தான் அது.

தமிழ், சிங்கள சமூகங்களுக்கிடையில், மனங்களை வெற்றி கொள்ளுதலோ அல்லது வேறெந்த வெற்றி கொள்ளுதலோ முக்கியமல்ல. ஒன்றிணைந்து செயற்படுதலே முக்கியமானது. அதற்கு அரசாங்கமோ, சிங்களச் சமூகமோ, சிங்களத் தலைமைகளோ முக்கியத்துவமோ முன்னுரிமையோ கொடுத்திருக்கவில்லை. அவர்களின் இலக்கு வெறுமனே தமிழரை வெற்றி கொள்ளுதலாகவே இருக்கிறது.

தமிழரின் இதயங்களை வெற்றி கொண்டால் பிரச்சினை தீர்ந்து போகும் என்ற கருத்து, பல சிங்கள அரசியல் தலைமைகளிடம் உள்ளன. இது தமிழருக்கான நியாயமான உரிமைகளையும், அதிகாரங்களையும் மறுப்பதற்கான முதற் காரியமாகும். தமிழரின் மனங்களை வெற்றி கொள்வதன் மூலம், அவர்களைத் தொடர்ந்து ஏமாற்றலாம் என்று கருதுகிறார்கள்.

தமிழ் மொழியைக் கற்பதன் ஊடாக, படையினரும், சிங்கள மக்களும், தமிழரை வெற்றி கொள்ளலாம் என்ற பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் கருத்தில் முழுமையான சிங்கள மேலாதிக்க உணர்வுதான் பீறிடுகிறது. இது ஒரு அரசியல், இராணுவ மூலோபாயமும்கூட. வடக்கில், மட்டுமன்றி, பொதுவாகவே படையினருக்கு சிங்கள மொழிப் பயிற்சிகள் அளிக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இது, மொழி ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை மட்டுமல்ல. அதற்கும் அப்பால், இது இராணுவ மூலோபாயத்தையும் கொண்ட ஒரு விவகாரமாகும். தமிழ் மக்களிடையே இலகுவாக ஊடுருவவும், அவர்களுடன் பரிச்சயமாகப் பழகுவதன மூலமும், தகவல்களை சேகரிக்கவும் இந்த மொழிப்பயிற்சி உதவும். அதைவிட, படையினரைத் தமிழ்மக்களுடன் நெருங்கிப் பழகச் செய்வதன் மூலம் அவர்களுக்கிடையில், அந்நியோன்யத்தை ஏற்படுத்தி, தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்கச் செய்ய முடியும்.

இவற்றுக்கு அப்பால் தமிழ்மக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில், நெருக்கம் அதிகரித்தால், வடக்கில் இருந்து படையினரை விலக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவிழந்து போகும். இதுபோன்று இந்த மொழிப் பயிற்சியின் ஊடாக, அடையக் கூடிய இலக்குகள் பலவாகும். அவை எதுவும், வெளிப்படையாக கூறப்படப் போவதும் இல்லை, வெளிப்படுத்தப்படுவதும் இல்லை.

மொழியின் ஊடாக தமிழரை வெற்றி கொள்ள முடியும் என்ற கருத்துக்குள் இவையெல்லாம் உள்ளடக்கம். மொழி அறிவை வளரத்துக் கொள்வது தவறான அணுகு முறையல்ல. ஆனால் அது எந்த அரசியல், இராணுவ உள்நோக்கமும் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்பதே முக்கியமானது. படையினருக்கான மொழியறிவு கற்கைகள் அனைத்தும், ஒரு அரசியல், இராணுவ மூலோபாயத்துடன்தான் முன்னெடுக்கப்படுகிறது. இந்த மூலோபாயம், முன்னைய அரசாங்கத்தினால் மட்டுமன்றி இப்போதைய அரசாங்கத்தினாலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது என்பதையே, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் கருத்து சுட்டிக்காட்டுகிறது.

அது மட்டுமன்றி, கடந்த வாரம் கொழும்பில், நடந்த செய்தியாளர் மாநாட்டில், பேசிய அமைச்சர் கரு ஜெயசூரிய வெளியிட்ட கருத்தும் அதனை உறுதிப்படுத்துகிறது. "வடக்கு மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஒரு சுமுக உறவு ஏற்பட்டு வருகிறது.

சில விடயங்கள் தொடர்பாக வடக்கு மக்கள் பொலிசுக்குச் செல்வதில்லை. இராணுவத்தினரைக் கொண்டு அவற்றை சுமுகமாக முடித்து விடுகின்றனர். இதுபோன்ற செயற்பாடுகளூடாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதே எமது நோக்கம்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது, பல செய்திகளைக் கூறுகிறது. படையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் சுமுக உறவை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம், வடக்கில் இராணுவ நிர்வாகத்தை ஊக்குவிக்கிறது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது. சில பிரச்சினைகளை வடக்கிலுள்ள மக்கள் பொலிசுக்கு சொல்லாமல், படையினரைக் கொண்டே தீர்த்து விடுகின்றனர் என்றால், அங்கு சிவில் நிர்வாகத்தை அரசாங்கம் ஊக்குவிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

இராணுவத்தினரைக் கொண்டு பொது மக்களின் பிரச்சினையை தீர்க்கச் செய்வதன் மூலம், அவர்கள் வடக்கிலுள்ள மக்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைகிறார்கள். சிவில் நிர்வாகத்தை இராணுவத் தலையீடுகளை அகற்ற வேண்டும் என்ற போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் இது இருக்கிறது. இதனை அரசாங்கமும் தெரிந்துகொண்டே அனுமதிக்கிறது என்றால், இது சிங்கள அரசியல் தலைமைகளால் திட்டம் போட்டு முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயலாகவே கருத வேண்டும். வடக்கில் படையினரை தொடர்ந்து நிலைநிறுத்துவதில் உறுதியாக இருக்கும் தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகள் அதற்கான மூலோபாயங்களை வகுத்துச் செயற்படுகின்றனர் என்பது உறுதியாகியிருக்கிறது. ஆனால், அதே அளவுக்கு தமிழர்கள் தூர நோக்கில் சிந்திக்கின்றனரா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

எப்படியாவது தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவி தங்கள் கருத்துக்களை விதைத்து அதன்மூலம் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மாத்திரமல்ல, அனைத்தையும் முறியடிக்கலாம் என்பதே சிங்கள பேரினவாத மக்களின் மூலோபாயமாகும். அதற்கு ஒரு சில தமிழர்களும் துணை போய் கொண்டிருக்கிறார்கள். இந்த விதமான பேராபத்துக்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் மக்களையும் தமிழ் புத்திஜீவிகளையும் சார்ந்ததாகும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய சு.க. அமைச்சர்களும் ராஜினாமா செய்யவேண்டும்

அரசாங்கத்திலுள்ள ஏனைய சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் பதவி விலகவேண்டும் என ஐ.ம.சு.மு.கோரிக்கை விடுத்துள்ளது. கட்சியினுள் ஒற்றுமை ஏற்படுத்தும் வகையில் 4 அமைச்சர்கள் பதவி விலகியதை வரவேற்றுள்ள ஐ. ம. சு. மு. ஏனையவர்களும் அந்த வழியை பின்பற்றவேண்டுமென தெரிவித்துள்ளது.

ஐ. ம. சு. மு. பாராளுமன்ற உறுபபினர்களான டலஸ் அழகப்பெரும, குமாரவெல்கம, மனுஷ நாணயக்கார ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அபயராம விகாரையில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த டலஸ் அழகப்பெரும எம்.பி 4 எம்.பிக்கள் சகல சலுகைகளையும் கைவிட்டு மீண்டும் எதிர்க்கட்சியுடன் இணைந்துள்ளதை வரவேற்கிறோம். எமது கோரிக்கையை ஏற்று உள்ளூராட்சி சபைகளின் காலத்தை நீடிக்காத நிலையில் அவர்களுக்கு தொடர்ந்து அரசில் இருப்பது சவாலான விடயமாகும். மனசாட்சிக்கு பயந்து அவர்கள் விலகியுள்ளனர்.

அரசாங்கத்திலுள்ள ஏனைய அமைச்சர்களும் அந்த வழியை பின்பற்றுவார்கள் என நம்புகிறோம்.

யானைக்கும் அங்குசத்திற்குமுள்ள தொடர்பே இரு கட்சிகளுக்குமிடையில் இருக்க வேண்டும். ஆனால் தற்பொழுது யானைக்கும் விளாங்காயிற்குமுள்ள தொடர்பே காணப்படுகிறது.

கட்சி மத்திய குழுவின் முடிவுபடியே சு. க அமைச்சர் பதவிகளை ஏற்றது. கூட்டரசாங்கத்தில் சு. க. வின் சுய கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும். அரசாங்கத்திலிருந்து விலக சு.க. அமைச்சர்களுக்கு உரிமையிருக்கிறது.

இவர்கள் பதவி விலகியது ஜனாதிபதிக்கு எதிரான முடிவல்ல. சு.க வை பலவீனப்படுத்த பல்வேறு மட்டங்களில் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

20 ஆவது திருத்தம் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் விருப்பு வாக்கு முறையை மாற்றும் 20 ஆவது திருத்தத்தை யாரும் எதிர்க்கமாட்டார்கள். 20 ஆவது திருத்தத்தை அவசரமாக நிறைவேற்றுவதனால் அடுத்த தேர்தல் புதிய முறையின் கீழே இடம்பெற வேண்டும். அதனை அமுல் செய்யாவிட்டால் அவசரமாக நிறைவேற்றுவதில் என்ன பயன் இருக்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ளார். (3-5)

# நாமல் புத்திசாதுர்யமாக செயற்பட்டு வருகிறாராம்



பாராளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ஏற்றாற்போல் அரசியல் அரங்கில் மிகவும் புத்திசாதுர்யமாக செயற்பட்டு வருகின்றார் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க பாராட்டு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே துறைமுகம் மற்றும் கப்பற்போக்குவரத்து அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது புதல்வர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியிருக்கலாம்.

நீதிமன்றத்தினால் தடைசெய்யப்பட்ட எந்தவொரு விடயத்திலும் நாமல் ராஜபக்ஷ பங்கேற்காமையை இதற்கு சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது தேவையற்ற கூட்டங்கள், பேரணிகள் மற்றும் போராட்டங்களில் பங்கேற்காமை ஒரு புத்தியுள்ள அரசியல்வாதியின் சிறந்த குணங்களாக காணப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ தனது மூளையை தெளிவாக பயன்படுத்தி அரசியல் காய் நகர்த்தி வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# வாசுதேவ 'காய்ந்து போன பூசணிக்காய்' பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிண்டல்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் எதற்கும் உதவாத காய்ந்த பூசணிக்காய் போன்றவர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினரான வாசுதேவ நாணயக்காரவுக்கும் இடையிலான வாதத்தின் போது வாசுதேவ நாணயக்கார பிரதமர் ரணில் விக்கிரசிங்க மீது கடுமையான கெட்ட வார்த்தைகளைப் பிரயோகித்தருந்தார்.

வாசுதேவ நாணயக்கார எம்.பி "நீ யார் என்னை அமரச்சொல்வதற்கு?" "நீயா சபாநாயகர்?" நீ சபாநாயகர் இல்லை ஒழுங்குப் பிரச்சினையின் நிமித்தமே எழுந்துள்ளேன் பைத்தியக்காரன்" என்று கூறியவாறு கெட்டவார்த்தை ஒன்றையும் மீண்டும் மீண்டும் கூறி நீ உட்காரு ஓய் என்றும் கூறினார்.

இந்நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடகவியலாளர் ஒருவர் மேற்படி சம்பவம் தொடர்பில் கேள்வியெழுப்பும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வாசுதேவ நாணயக்கார எதற்கும் உதவாத காய்ந்து போன பூசணிக்காய் போன்றவர். தோல்வியை தாங்கி கொள்ள முடியாதமையின் வெளிப்பாடே இதுவாகும் என்று பிரதமர் ரணில் கிண்டலடித்துள்ளார். (3-5)

# ஆத்திரமடைந்த மக்கள்தான் போராட்டங்களை நடத்தினர்

## பாதுகாப்பு அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டம் இனவாதமானதல்ல என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவி கொலை செய்யப்பட்டமைக்காக ஆத்திரமடைந்த மக்கள் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டம் அரசாங்கத்திற்கோ, படையினருக்கோ அல்லது இனவாத அடிப்படையிலோ மேற்கொள்ளப்படவில்லை.

நான் வருத்தப்படுவது என்னவென்றால் , முன்னாள் ஜனாதிபதி விஹாரைகளுக்கு சென்று பூஜைகளை செய்து பின்னர் பொய்களையும் கூறுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

அதிகார மோகத்தினால் இனவாதத்தை தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர் என நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி தனபாலசிங்கம் நாகேஸ்வரி



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் 81,மணிக்கூட்டு கோபுரவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி தனபாலசிங்கம் கடந்த 20ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

### பொன்னையா வேலுப்பிள்ளை

(முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தாதியர்பயிற்சிக் கல்லூரி )



யாழ்ப்பாணம்,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலுப்பிள்ளை கடந்த 21ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 41/4, செம்மணி வீதி,நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுகாலை 9.30 மணி யளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### தம்பாப்பிள்ளை இந்திராணி

(இளைப்பாறிய ஆசிரியை)



உடுப்பிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை இந்திராணி கடந்த 17 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கரம்பவாளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி. செல்லையா முத்தம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)



கைதடியைப் பிறப்பிடமாகவும் பலாலி, யாழ்ப்பாணம்,கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா முத்தம்மா கடந்த 21ஆம் திகதி வியா ழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப2 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பி பொரளை கனத்தை இந்து பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்

### இராசையா தர்மரட்ணம்

(ஓய்வு பெற்ற அரச லிகிதர்)



யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது தெஹிவளையை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தர்மரட்ணம் கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பி.ப3 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### முருகேசு சபாரத்தினம்



யாழ்ப்பாணம்,அரசடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சபாரத்தினம் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தயாளநேசன் மங்களகௌரி

(அதிபர்-யாழ்/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை)



நயினாதீவு,3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.15/7 முதலாம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளநேசன் மங்களகௌரி கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

### பொன்னையா முருகுப்பிள்ளை

(முன்னாள் ஊழியர்-இலங்கை தேசிய உப்புக்கூட்டுத்தாபனம், ஆனையிறவு)



கிளிநொச்சி பளை சோறன்பற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா முருகப்பிள்ளை கடந்த 21 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சோறன்பற்று இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி தியாகராசா இராசம்மா



குடத்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும்பருத்தித்துறை வராத்துப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா இராசம்மா கடந்த 20ஆம் திகதி புதன் கிழமை கால மானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஆனை விழுந்தான் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி தம்பையா அன்னலட்சுமி



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தம்பையா கடந்த 21ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சுப்பிரமணியம் கோணாத்தைப்பிள்ளை



வடமராட்சி புலோலியைப் பிறப்பிடமாகவும் புலோலி,கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கோணாத்தைப்பிள்ளை கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழக முதல்வராக ஜெயா பதவியேற்பு



(சென்னை)

**தமிழக முதலமைச்சராக அ.தி.மு.கவின் பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா நேற்று 5ஆவது முறையாக பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ரோசய்யா பதவிப்பிரமாணமும் இரகசிய காப்புப்பிரமாணமும் செய்து வைத்தார்.**



சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் நேற்று முற்பகல் 11 மணிக்குத் தொடங்கிய பிரமாண்ட விழாவில், ஜெயலலிதாவைத் தொடர்ந்து அமைச்சர்கள் பதவியேற்றனர்.

ஓ.பன்னீர்செல்வம், நத்தம் ஆர்.விஸ்வநாதன், வைத்திலிங்கம், எடப்பாடி கே.பழனிச்சாமி ப.மோகன், ப.வளர்மதி உள்ளிட்ட 28 அமைச்சர்களும் இரண்டு பகுதிகளாக இருந்து பதவியேற்றனர். இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சி தொடங்கிய 27 நிமிடங்களில் நடந்து மு ந்தது.

**பொன்.ராதாகிருஷ்ணன், ரஜினிகாந்த் பங்கேற்பு**

இந்தப் பதவியேற்பு விழாவில் பா.ஜ.க. சார்பில் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், இல.கணேசன், ஹெச்.ராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

நடிகர்கள் ரஜினி, சரத்குமார், பிரபு, ராம்குமார், விக்கிரமன், இசைமைப்பாளர் இளையராஜா, சிவகுமார், கார்த்தி, அர்ஜுன் உள்ளிட்ட பிரபலங்கள் விழாவில் பங்கேற்றனர்.

**அ.தி.மு.க தொண்டர்களின் கட்டற்ற உற்சாகம்**

மெரினா கடற்கரை, உழைப்பாளர் சிலை, எழிலகம், அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர். நினைவிடம் ஆகிய பகுதிகளில் அ.தி.மு.க. தொண்டர்கள் திரண்டிருந்தனர். ஜெயலலிதாவை வாழ்த்தி கோஷங்கள் எழுப்பியும், பதாகைகள், தட்டிகள் வைத்தும் தொண்டர்கள் உற்சாகக் குரல் எழுப்பினர். வீதியின இரு பகுதிகளிலும் தொண் டர்கள் கைகளை உயர்த்தி ஆரவாரமாக ஜெயலலிதாவை வரவேற்றனர். ஆண்களும் பெண்களும் ஆட்டம் ஆடி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

**பலத்த பொலிஸ் பாதுகாப்பு**

பதவியேற்பு விழாவையொட்டி, சென்னை பல்கலைக்கழகம், காமராஜர் சாலை, சேப்பாக்கம், அண்ணாசாலை என பல இடங்களிலும் மிக பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. எழிலகத்தில் கண்காணிப்புக்காக நவீன கமரா பொருத்தப்பட்ட இராட்சத பலூன ஒன்று தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தது.

**பொதுமக்கள் பாதிப்பு**

அதிகாலையில் தொடங்கிய போக்குவரத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டதால், அலுவலகம் செல்லும் மக்கள் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகினர். அ.தி.மு.கவினர் பல பகுதிகளில் குவிந்திருந்ததால் சென்னை பல்கலைக்கழகம் தொடங்கி போயஸ் தோட்டம் வரை வழிநெடுகிலும் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இருந்தது.




**போயஸ் தோட்டம் திரும்பினார் ஜெ.**

முதல்வராக பதவியேற்ற பிறகு சென்னை நூற்றாண்டு விழா மண்டபத்தில் இருந்து ஜெயலலிதா போயஸ் தோட்ட இல்லத்துக்கு திரும்பினார். வழியில் தொண்டர்களைப் பார்த்து கையசப்பதற்காகவே, ஜெயலலிதாவின் பாதுகாப்பு வாகனம் மெதுவாகச் சென்றது.

**ஸ்தம்பித்த சென்னை கடற்கரை சாலை**

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு, பாதுகாப்பு வாகனத்தில் கையசைத்தபடி சென்ற ஜெயலலிதாவைப் பார்த்த அ.தி.மு.க. தொண்டர்கள் உற்சாகக் குரல் எழுப்பினர்.

கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த தொண்டர்கள் எண்ணிக்கையால் சென்னை சற்றே அதிர்ந்தது. நடனம்ஆடியபடி தொண்டர்கள் தங்கள் உற்சாகத்தை வெளிப்படுத்தினர். (இ-5)

# அரச படைகளும் பிரிவினைவாதிகளும் போர்க்குற்றங்களை புரிந்துள்ளனர்

உக்ரைனின் கிழக்கு பகுதியில் பிரிவினைவாதிகளும் அரசபடைகளும் போர்க குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்று அம்னெஸ்டி இண டர்நஷனல் குற்றஞ் சாட்டியுள்ளது. உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள், உக்ரைனின் அரசபடைகள் ஆகிய இருவருமே போர்க்குற்றங்களைப் புரிந்துள்ளனர் என்று சர்வ தேச மனித உரிமைகள் அமைப்பான அம்னெஸ்டி இண்டர்நஷனல் குற்றஞ் சாட்டியுள்ளது.

அரச படைகளுக்கும், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல்கள் தொடருகின்றன. அங்கு நடைபெறும் மோதலில் ஈடுபட்டுள்ள இந்த இருதரப்புமே கைதிகளைச் சித்திரவதை செய்துள்ளனர் என்று அந்த அமைப்பு கூறுகிறது.

அதிலும் குறிப்பாக பிரிவினைவாதக் குழுக்கள் சட்ட விரோதக் கொலைகளிலும் ஈடுபடுகின்றன எனவும் அம்னெஸ்டியின் அறிக்கை தெரிவிக்கிறது. மூப்பதுக்கும் அதிகமான கைதிகளிடம் உரையாடி தகவ லகளை சேகரித்த பிறகே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுஎன்று கூறும்அம்னெஸ்டி பலர் சீராக தாங்கள அனுபவித்த கொடுமைகளைத தெரிவித்தனர் எனவும் கூறுகிறது.

இதுமட்டுமன்றி அவர்களின் வாக்குமூலங்களுக்கு அப்பாற்பட்டு, எக்-ரே மூலம் எடுக்கப்பட்ட படங்களில் எலும்புகள் முறிந்து போனதும் தெரியவந்துள்ளது என்றும், வைத்தியசாலைப் புகைப்படங்களும்காயங்கள்ஏற்பட்டுள்ளதை காட்டுகின்றன எனவும்அம்னெஸ்டி தனது அறிகையில் தெரிவித்துள்ளது. (இ-5)

# சிரியா- ஈராக் இறுதி எல்லைக்கடவை ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளின் வசம்

ஈராக்கிலும் சிரியாவிலும் தாக்குதல்களை தொடர்ந்து வருகின்ற இஸ்லாமிய அரசு என அழைக்கப்படும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள், அரசாங்கத்தின் வசம் இருந்த, இரு நாடுகளுக்கும் இடையிலான, இறுதி எல்லைக்கடவையையும் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

ஈராக்கில் கடந்த 17ஆம் திகதி ரமாடி நகரை கைப்பற்றிய இஸ்லாமிய அரசு, ஹப்பானியாவுக்கு வெளியே, ஷியா ஆயுதக்குழுக்கள் சண்டைக்காக குவிந்துவந்த அரசாங்க பாதுகாப்புப் பகுதியை உடைத்துவிட்டார்கள். தாம் ஏற்கனவே கைப்பற் றியுள்ள, பலுஜாவை நோக்கி ஜிகாதிகள் இப்போது கிழக்காக முன்னேறி வருகிறார்கள். தலைநகர் பக்தாத்தும் அதே திசையிலேயே இருக்கிறது. (இ-5)

# மெக்சிக்கோவில் நடந்த பயங்கர மோதலில் போதைப்பொருள் கடத்திய 43 பேர் மரணம்



மெக்சிக்கோவில் போதைப்பொருள் கடத்தும் கும்பலுக்கும, பொலிஸாருக்கும்இடையே நடந்த கடும் மோதலில் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படும் 42 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

மெக்சிக்கோ நாட்டில் போதைப்பொருள்கடத்தல்நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க அந்நாட்டு அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் போதைப் பொருட்கள் கடத்தும் நபர்கள் பொலிஸாருக்கு பெரும் சவாலாகவே உள்ளனர். போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முக்கிய புள்ளிகள் கைது செய்யப்பட்டு வருவதால் போதை மருந்து கும்பலுக்கும் பொலிஸாருக்கும்இடையே கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மேற்கு மெக்சிக்கோவின் மிசோகா மாநிலத்தில் போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கும், பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கி சூடு நடந்தது. இந்த சண்டையில் பொலிஸாரால் குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படும் 42 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர்.

பொலிஸாருக்கும், கடத்தல கும்பல்களுக்கும் இடையே நடந்த இந்த சண்டையில் பொலிஸார் ஒருவரும் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சவுதிஅரேபியாவில் மசூதியில் தற்கொலைப்படைத் தாக்குதல்

## 30பேர் பலி, 100பேர் படுகாயம்

(ரியாத்)

சவுதிஅரேபியாவில் அல் - குவாதிப் நகரில் ஷியா முஸ்லிம்களின் மசூதியில் நேற்று முன்தினம் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சவுதிஅரேபியாவின் குவாதிப் மாகாணம் அல்-குவாதிப் நகரில் இமாம் அலி மசூதியுள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் தொழுகை நடைபெற்றுக்கொண்டிருந்தது. சுமார் 150-க்கும் மேற்பட்டோர் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது உடலில் வெடிகுண்டுகளை கட்டிய தீவிரவாதி மசூதியில் வெடித்துச் சிதறினான்.

இதில் 30பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சவுதி அரேபியாவில் சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். அந்த நாட்டில் அல்-குவாதிப் நகரில் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வாழ்கின்றனர்.

அவர்களை குறிவைத்து சன்னி பிரிவைச் சேர்ந்த தீவிரவாத குழுக்கள் தாக்குதல நடத்தியிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும். –மெர்ரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தாலியைக் கட்டுவானே அவன் தாலி (யக்) கட்டுவான்

மற்றவர்களை ஏசுவதிலும் நாகரிகம் பேணுகின்றவர்கள் நாங்கள். அதனால்தான் நாசமறுப்பானே! தாலியைக் கட்டுவானே! என்ற பதங்களை ஏசும் மொழியாகக் கொண்டோம்.

ஏசுபதங்கள் மொழியில் மோசமானவை போல இருந்தாலும் உட்பொருள் வாழ்த்து மொழியாக இருப்பதனைக் காணமுடியும். நாசத்தை அறுப்பவன் என்பது நல்லதைச் செய்பவன் என்று பொருள்படும். எனினும் நாசம் என்ற மறைபதம் உன்னிப்பதால் அது ஏசுமொழிப்பதமாக தோற்றம் பெறுகின்றது.

இதே போன்றே தாலியைக் கட்டுவானே என்பதும் திருமணம் ஆகாத இளைஞனைப் பேசுவதற்காக நம் முன்னோர்கள் கையாண்ட சொற்பதமாகும்.

தாலியைக் கட்டுவது என்பது மங்கலகரமான செயல். ஆக மங்கலகரமான செயலை செய்ய இருப்பவனே என்று விழித்துப் பேசுவது எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வு எனலாம்.

அண்மையில் தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் சுப்பிரமணிய சுவாமி திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். தனது கட்சி சார்ந்த பிரமுகரின் திருமணம் அது. தாலியை எடுத்துக் கொடுப்பது சுப்பிரமணிய சுவாமியின் கடமையாக இருந்தது. திருமணத்தின் போது தாலியை எடுத்துக் கொடுப்பது கூட தமிழர் பண்பாட்டின் ஒரு சம்பிரதாயமாகக் கருதப்பட்டது.

நல்லவர்கள்–பெரியவர்களின் கையால் தாலியை எடுத்துக் கொடுக்க அதை மணமகன், மணமகள் கழுத்தில் கட்டிக் கொள்வார். இதுவே நடைமுறை. ஆனால் அந்த நடைமுறையை மறந்து போன சுப்பிரமணிய சுவாமி தாலியை எடுத்துத் தானே மணமகள் கழுத்தில் கட்டிவிட முற்பட்டார். இதனால் திருமண வீட்டில் ஒரே பரபரப்பு. அருகில் நின்ற பெண்கள் ஏங்கிப் பதறி அடித்து சுப்பிரமணிய சுவாமி தாலி கட்டுவதைத் தடுத்து விட்டனர்.

திருமண மண்டபத்தில் தாலியை எடுத்த சுப்பிரமணிய சுவாமி அதை மணமகனிடம் கொடுக்காமல் தானே கட்ட முயன்றதனால் திருமண மண்டபத்தில் ஒரே சிரிப்பு. அட! சுப்பிரமணியனின் செயல் எதுவும் வித்தியாசமானதாகத்தான் இருக்கும். அதில் இதுவும் ஒன்று என திருமண வீட்டுக்கு வந்திருந்தவர்கள் கூறியிருப்பர்.

இப்போ சுப்பிரமணிய சுவாமியை ஏசுவதாக இருந்தால் தாலியைக் கட்டுவானே என்று ஏசுவது பொருத்தமாகாது. ஏனெனில் அந்தாள் அந்த ஏசுமொழியைப் பயன்படுத்தியே மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டி முடித்து விடுவார்.

தேவையாயின் நீதிமன்றத்திற்குச் சென்று தாலியைக் கட்டுவானே என்று என்னை ஏசியதனால் நானே தாலியைக் கட்டும் தகைமை உடையவன். மணமகனுக்கு தாலி கட்டும் உரிமை கிடையாது என்று மனுத்தாக்கல் செய்து அதில் வெற்றியும் பெற்றுவிடுவார். ஆகையால் சுப்பிரமணிய சுவாமியை ஏசுவதிலும் கவனமாக இருக்கவேண்டும்.

அப்படியானால் எப்படி ஏசுவது? **“அட! தாலியைக் கட்டுபவனே” “அவன் தாலியைக் கட்டுவான்”** என்று ஏசுவது பொருந்தும்.

என்ன செய்வது! எவரையும் குழப்ப வேண்டும் என்று நினைப்பவர்கள் நல்ல காரியங்களைச் செய்யும் போதும் அதில் குழப்பங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

மனம் மிகவும் முக்கியமானது. மனப்பக்குவம், மன உறுதி, நேர்மை, மனச்சாட்சி என்பன நல்ல மனிதர்களின் அடையாளங்கள். இத்தகையவர்கள் எதைச் செய்தாலும் அதில் உயர்வான ஒழுங்கு தென்படும்.

மாறாக சுப்பிரமணிய சுவாமி போன்றோர்கள் நல்லவை செய்தாலும் அதில் மாறாத வழுக்களை; தவறுதல்களை கொடுத்து விடும். இதற்கான நல்ல உதாரணம்தான் தாலியை மணமகனிடம் கொடுக்காமல் மணமகளின் கழுத்தில் சுப்பிரமணிய சுவாமி கட்டப்போன சம்பவம் ஆகும்.

## ஐ.நா உயர்குழுவில் இலங்கைத் தமிழர்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் குழுவொன்றில் இலங்கை தமிழர் ஒருவர் இடம்பெற்றுள்ளார். மனிதாபிமான செயற்பாடுகளுக்கான நிதி வழங்கல் தொடர்பான உயர் மட்டக் குழு ஒன்றை ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூன் உருவாக்கியுள்ளார்.

இந்த குழுவில் இலங்கையைச் சேர்ந்த தமிழரான தனஞ்சயன் சிறிஸ்கந்தராஜா என்ற பிரித்தானிய பிரஜையும் உள்வாங்கப்பட்டுள்ளார்.

வளங்களும், நிதியிடலுக்கும் இடையிலான இடைவெளிகளை களைந்து, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான நிதி வழங்கல் தொடர்பில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இரத்ததான முகாம்

யாழ்.போதனா வைத்திசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் ஒரு படியாக இன்று காலை 9 மணி முதல் 1 மணி வரை வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50ஆவது முறையாக இரத்த தானம் வழங்கவுள்ள துரைசாமி சக்திவேல், அனைத்து குருதி கொடையாளிகளையும் சமுக மளித்து ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



இரண்டாம் நாள்

வினை தீர்க்கும் விநாயகனே வேழமுகத்தவனே!
நின் மலர்த்தாள் பணிந்தோம் இன்னருள் புரிந்திடுவாய்!
ஊரார்கள் ஒன்றுகூடி உன்னருட் காட்சி கண்டே!
உன்னதமாய் நாம் வாழ வரம் வேண்டி நிற்கின்றோம்!
வாராய் மூஷிக வாகனனே அருள் தாராய் கணபதியே!
வேதனைகள் போக்கியே சாதனை புரியவைப்பாய்!
தீங்கான அனைத்தையும் உன் திருவருளால் அகற்றியே!
திருக்காட்சி தந்தருள்வாய் சித்தி விநாயகனே!

பீ.இராகுலன்
பிறவுண்வீதி,யாழ்ப்பாணம்

# வாகனவிபத்தில் கஜேந்திரன் காயம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இடம்பெற்ற விபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவ் விபத்து நேற்று மாலை 4.15 மணியளவில் இடம்பெற்றது. பாரம் தூக்கி வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த கஜேந்திரன் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்துக்குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# உண்மையில் வாழும் வழிகளில் வழிநடப்போம்



உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியானவர் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் என இயேசு தம் சீடர்களுக்கு கூறுகின்றார். இன்றைய நற்செய்தியில் இயேசு தன் சீடர்களுக்கு தூய ஆவியைக் கொடுக்கிறார். படைப்பதும் புதுப்படைப்பாக்குவதும் தூய ஆவியின் செயல். தூய ஆவி என்பவர் அதிபுனித திரித்துவத்தின் மூன்றாம் ஆளாவார். இறை வெளிப்பாட்டில் இவர் புனிதப்படுத்துபவராக காணப்படுகிறார். தந்தையாகிய கடவுளிடம் இருந்தும், மகனாகிய கடவுளிடம் இருந்தும் புறப்படும் நித்திய அன்பாக இவர் இருக்கிறார். இறை தந்தையோடும் இறைமகனோடும் ஒன்றாக ஆராதனையும், மகிமையும் பெறும் இவர், ஆண்டவராகவும் உயிர் அளிப்பவராகவும் இருக்கின்றார். முற்காலத்தில் இறைவாக்கினர்கள் வழியாக பேசியவரும் இவரே.

தங்களுடன் இறைமகன் இயேசுவும் தூயஆவியானவரும் இருக்கிறார் என்ற உணர்வால் துணிவடைந்த

## பரமபிதா காட்டிய பாதை

எத்தனையோ வீரஉள்ளங்கள் தங்கள் உயிரையும் இழக்கதயாராக இருந்தார்கள் என்பது வரலாறு. இயேசுவுக்காக இத்தனை நூற்றாண்டுகள் உழைக்கவும் முன் வந்தார்கள். இந்த பெரும் உள்ளங்கள் நமக்கு விட்டுச் சென்றுள்ள ஒருசில எடுத்துக்காட்டுகளை பார்ப்போம்: 17ஆம் நூற்றாண்டில் கனடாவில் பழங்குடியினரிடையே பணி புரிந்து அவர்கள் மத்தியில் மறைசாட்சியாக உயிர் துறந்த பல இயேசு சபை குருக்களில் Isaac Jogues என்பவரும் ஒருவர். இவர் தொடர்ந்து அந்த மக்களால் சித்திரவதைகள் செய்யப்பட்டார். மனித உடலை, உடலின் பாகங்களை உண்ணும்பழக்கம்கொண்ட அந்த மக்களின் மத்தியில் உழைத்த Isaac Jogues தன் கைவிரல்களை இழந்தார்.

இருபதாம் நூற்றாண்டில் சீனாவில 21 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட பேராயர் Dominic Tang வசதி சிறிதும் இல்லாத ஒரு சிறு அறையில் ஐந்து ஆண்டுகள் தனித்து அடைக்கப்பட்டிருந்தார். ஐந்து ஆண்டுகள் சென்று, பேராயர் தன் சிறு அறையை விட்டு ஒரு சில மணி நேரங்கள் வெளியே வர உத்தரவு கிடைத்தது. அப்போது சிறை அதிகாரிகள் அவரிடம், “இந்த சில மணி நேரங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? காலாற நடக்கப் போகிறீர்களா? குளித்து, புதுஉடை அணிய விருப்பமா? வீட்டில் யாரையும் அழைத்துப் பேச விருப்பமா?” என்று கேட்டபோது, பேராயர் Tang தான் திருப்பலி நிகழ்த்த விரும்புவதாகக் கூறினாராம்.

San Francisco உயர்மறை மாவட்டத்தின் பேராயராக John Quinn இருந்தபோது, அவரது மறைமாவட்டத்தில் உழைக்க அருளாளர் அன்னை தெரேசாவும் சில சகோதரிகளும் வர சம்மதித்தனர். பேராயருக்கு பெரும் மகிழ்ச்சி. அருட்சகோதரிகள் தங்குவதற்கு அவர் ஒரு வீட்டை தயாரித்திருந்தார். அன்னை தெரேசா அங்கு வந்தபோது, அந்த வீட்டில் செய்யப்பட்டிருந்த வசதிகளையெல்லாம் பார்த்தார். வீட்டின் தரையில் விரிக்கப்பட்டிருந்த கம்பளங்களை எடுக்கச் சொன்னார். கதவு, ஜன்னல்களுக்குப் போடப்பட்டிருந்த திரைசீலைகளை எடுக்கச்சொன்னார். வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்த ஐந்து தொலைபேசிகளுக்குப் பதில் ஒன்று போதும் என்று சொன்னார். இப்படி அவர் ஒவ்வொன்றாக அந்த வசதிகளையெல்லாம் குறைத்த பின், பேராயரிடம், “ஆயரே, இந்த வீட்டில் எங்களுக்கு தேவையான தெல்லாம் ஒரு நற்கருணை உள்ள பேழை மட்டுமே.” என்று சொன்னாராம்.

வியட்நாமில் சிறைபடுத்தப்பட்டு கடின உழைப்பு முகாமில் ஒன்பது ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தார் இயேசு சபை குரு Joseph Nguyen-Cong Doan அந்த முகாமில், அவரோடு சிறைப்படுத்தப்பட்டிருந்த மற்றொரு குரு சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் கொண்டுவந்திருந்த அப்பம், இரசம் இவைகளை இயேசு சபை குருவுடன் பகிர்ந்து கொண்டார். இரவில் மற்றவர்கள் படுத்து உறங்கிய பின், Joseph [illegible] ஆற்றிய திருப்பலிகளைப் பற்றி பின்னர் மற்றவர்களுக்குச் சொன்னார். தன் நெஞ்சை ஒரு பீடமாக பயன்படுத்தி, தன் சிறை உடுப்புக்களை தன் பூசை உடுப்புக்களாகக் கருதி அவர் ஆனந்த கண்ணீர் பொங்க ஆற்றிய அந்தத் திருப்பலிகளைப் பற்றி மற்றவர்களுக்குச் சொன்னார். ஏன் இலங்கையில் வடபகுதியில் உள்ள மன்னார் பகுதியில் பல கத்தோலிக்கர்கள் பல வருடங்களுக்கு முன்பு இயேசுவிற்காக மறைசாட்சிகளாய் மரித்ததை நாம் எண்ணிப் பார்க்கலாம்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

எனவே இன்ப-துன்பங்கள் நொடிப் பொழுதில் மாறலாம். நிமிட சுகங்களைத் தேடுவது எளிது. ஆனால் அது நீண்ட பலன் தராது அது நிலைத்திருக்காது. நிலையான மகிழ்ச்சி, தியாகத்தால்தான் கிடைக்கும். இறைவனின் உறவில் இறுதிவரை நிலைத்திருக்க, சாவிலிருந்து வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துத் தந்தார் இயேசு. சாவைக் கண்டுபயப்படாமல் துணிவோடு செயற்படும் மனிதன் சரித்திரத்தில் நிலைத்து நிற்பான் என்பதற்கு இயேசுவே எடுத்துக்காட்டாவார். இயேசு வோடும் தூயஆவியானவரோடும் நாமி ருந்தால் அவர்கள் எம்முடன் இருப்பர் எம்மை உண்மையின் வழியில் நடத்தி என்றும் உண்மையில் வாழும் வழிகளை காட்டுவர். நாமும் அவர் காட்டும் வழிநடப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடருமா நடாவின் ஆதிக்கம்

இன்று ஆரம்பம்

ஒவ்வொரு ஆண்டும் 4 கிராண்ட்சிலாம் டென்னிஸ் போட்டி நடைபெறும். இந்த ஆண்டின் முதல் கிராணட்சிலாமான அவுஸ்திரேலிய ஓபன் மெல்பேர்னில் கடந்த ஜனவரி மாதம் நடந்தது. இதன் ஆண்கள் பிரிவில் ஜோகோவிச்சும், பெணகள் பிரிவில் செரீனா வில்லியம்சும் பட்டம் பெற்றனர்.

2 ஆவது கிராண்ட்சிலாமான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் இன்று தொடங்குகிறது. ஜூன் 7 ஆம் திகதி வரை இந்தப்போட்டி நடைபெறவுள்ளது.

களிமண் தரையில் (கிளே கோர்ட்) நடைபெறும் ஒரே கிராண்ட்சிலாம் போட்டி பிரெஞ்சு ஓபன் ஆகும். இதனால் இந்தப் போட்டிக்கு அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.


பிரெஞ்சு ஓபன் போட்டியில் ரபெல் நடால் (ஸ்பெயின்) 9 முறை சம்பியன் பட்டம் பெற்றுள்ளார். 2005, 2006, 2007, 2008, 2010, 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் அவர் பட்டம் பெற்றுள்ளார். அவரது ஆதிக்கம் தொடர்ந்து நீடிக்குமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபகாலமாக நடால் நல்ல நிலையில்இல்லை. இதனால்இந்தப் போட்டி தொடரில்அவர் 6 ஆவது வரிசையில் உள்ளார். மேலும் கால் இறுதியில் அவர் முதல் நிலை வீர ரான ஜோகோவிச்சை சந்திக்க வாய் ப்பு இருக்கிறது. இதனால் நடாலுக்கு இந்தமுறை கடும் சவால காத்திருக்கிறது.

ஜோகோவிச் (செர்பியா), முர்ரே (இங்கிலாந்து), ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), நிஷிகோரி (ஜப்பான்) போன்ற முன்னணி வீரர்கள் பட்டம்வெல்லும்வாய்ப்பில்உள்ளனர்.

பெண்கள் பிரிவில் நடப்பு சம்பியன் மரியா ஷரபோவா (ரஷ்யா), செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), சிமோனா, குவிட்டோவா, அசரென்கா போன்ற முன்னணி வீராஙகனைகள் ஆடுகிறார்கள்.(க)






## சாதனை படைத்த கோலி

நடப்பு ஐபிஎல் தொடரில் பெங்களூர் அணித்தலைவர் விராட் கோலி 500 ஓட்டங்கள் என்ற புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

ராஞ்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் சென்னை- பெங்களூர் அணிகள் மோதின. இதில் சென்னை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் சென்னை அணியின் பந்துவீச்சாளர் ஆசிஸ் நெஹ்ரா பந்தை சிக்சருக்கு விரட்டிய கோலி, இந்தத் தொடரில் 500 ஓட்டங்களை கடந்த 4ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார். இவர், 16 போட்டியில் 3 அரைசதம் உட்பட 505 ஓட்டங்கள்எடுத்துள்ளார்.

ஏற்கனவே ஐதராபாத்தின் டேவிட் வோனர் (562 ஓட்டங்கள்,14 போட்டி), ராஜஸ்தானின் அஜின் கியா ரஹானே (540 ஓட்டங்கள், 14 போட்டி), பெங்களூரின் டிவில் லியர்ஸ் (51[illegible] ஓட்டங்கள், 16 போட்டி) ஆகியோர இம் மைல் கல்லை எட்டினர்.

மேலும், ஐபிஎல் அரங்கில் ஒரு தொடரில் 500 ஓட்டங்களுக்கு மேல் 3 முறை எடுத்து சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்பு 2013 (634 ஓட்டங்கள்), 2011 (557 ஓட்டங்கள்) தொடரில் இந்த இலக்கை எட்டியுள்ளார். (க)



## சங்கா மீண்டும் சதம்

இங்கிலாந்தில் நடக்கும் கவுண்டிப் போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்டக்காரர் குமார் சங்கக்கார சதம் விளாசினார்.

உள்ளூர் அணியான சரே அணியில் சங்கக்கார விளையாடி வருகிறார். இதில் Northamptonshire அணிக்கு எதிரான போட்டியில் முதல் இன்னிங்ஸில் நிதானமாக விளையாடிய சங்கக்கார சதம் அடித்தார்.

இவர் 186 பந்துகளில் 11 பவுண்டரியுடன் 111 ஓட்டங்கள் எடுத்தார். சகவீரர் ஜாசன் ரோயும் 140 ஓட்டங்கள் எடுக்க இந்த ஆட்டம் டிராவில் முடிந்தது.



Northamptonshire அணி முதல் இன்னிங்ஸில் 309 ஓட் டங்களையும், சரே அணி 6 விக்கெட் இழப்பிற்கு 499 ஓட்டங்களையும் பெற்றிருந்தது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## சொந்த மண்ணில் சிம்பாவேயை துவம்சம் செய்தது பாகிஸ்தான்



சிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் இருபது-20' போட்டியில் பாகிஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியா சத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. ஆறு ஆண்டுகளுக்குபின்பாகிஸ்தான் மண்ணில் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் லாகூரில் நடந்த முதலாவது இருபது-20 போட்டியில் பாகிஸ்தான், சிம்பாவே அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற சிம்பாவே அணித்தலைவர் சிகும் பரா முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அதன் படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 6 விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்களை எடுத்தது. இதில் அதிகபட்சமாக அணித் தலை வர் சிகும்பரா (54) அரைசதமும், மகக்சா 43 ஓட்டங்களும்எடுத்தனர். பின்னர் 173 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு முக்தர், ஷேசாத் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது.

இருவரும் அரைசதம் அடித்தனர். முதல் விக்கெட்டுக்கு 142 ஓட்டங்கள் சேர்த்த போது, ஷேசாத் (55) ஆட்டமிழந்தார். முக்தர் 83 ஓட்டங்கள் (45 பந்து) விளாசினார். பின்னர் முகமது ஹபீஸ் (12), சோயப் மாலிக் (7), உமர் அக்மல் (4) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, அப்ரிதி ஒரு பவுண்டரி அடித்து பாகிஸ்தானை வெற்றி பெறச் செய்தார். இதனால் பாகிஸ்தான் அணி 19.3 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 173 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சர்பராஸ் அகமது (3), அப்ரிதி (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்
# துடுப்பாட்ட இறுதிப் போட்டி இன்று





இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இன்றைய இறுதியாட்டத்தில் அளவெட்டி ஞானவைரவர் அணியை எதிர்த்து இணுவில் கலை ஒளி அணி மோதவுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியனை எதிர்கொண்ட அளவெட்டி ஞானவைரவர் அணி தனது சகல விக்கெட்டுகளை இழந்த நிலையில் 59 ஓட்டங்களை பெற்றது.

60 ஓட்டங்களை இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி 6ஆவது பந்து பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவிக் கொண்டது.

எனவே முதலாவது அரை இறுதியில் வெற்றிகொண்ட இணுவில் கலைஒளி அணியும் அளவெட்டி ஞானவைரவர் அணியும் இன்றைய தினம் இறுதி ஆட்டத்தில் ஒன்றை ஒன்று எதிர் கொள்கின்றன.

இப்போட்டி மாலை 4.00 மணிக்கு மெய்கண்டான மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற உள்ளதுடன் முதலாம் இடம் பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசிலும், 2ஆம் இடம் பெறும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாய் பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட உள்ளது.

மற்றும் 3ஆம் நிலைக்கான ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணி எதிர் குருநகர் கார்மேல்ஸ் போய்ஸ் அணி மோத உள்ளன.

இந்த ஆட்டம் இன்று மாலை 2.30 மணிக்கு இடம்பெற உள்ளது. (க)

# 2013ம் ஆண்டு மும்பைக்கு நடந்தது 2015ம் ஆண்டு சென்னைக்கு நடக்கும்

ஐ.பி.எல். தொடரின் 2ஆவது தகுதிச்சுற்று போட்டியில் பெங்களூர் அணியை வீழ்த்தி சென்னை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதற்கு மைக் ஹசி 46 பந்துகளில் 56 ஓட்டங்கள் எடுத்து உறுதுணையாக இருந்தார்.

இன்று ஈடன் கார்ட்ன்ஸில் நடைபெறும் இறுதிப்போட்டியில் மும்பையை எதிர்கொள்கிறது.

இன்றைய இறுதிப் போட்டி குறித்து மைக் ஹசி கூறியதாவது,

பெங்களூரை வீழ்த்தி பெரிய போட்டிக்கு தகுதி பெற்றிருக்கின்றோம்

கடந்த 2013-ம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ் அணியை முதல் குவாலிபயரில் வீழ்த்தி சென்னை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஆனால், 2ஆவது குவாலிபயரில் வென்று இறுதிப்போட்டிக்கு வந்த மும்பை அணி, சென்னையை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த முறை நாங்கள் முதலில் மும்பையிடம் தோல்வியடைந்தோம். ஆனால் இறுதிப்போட்டியில



அவர்களை வென்று சம்பியன பட்டத்தை வெல்லுவோம்.

மும்பை அணி மிகப் பலம் வாயந்தது. அவர்கள் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆகவே, நாங்கள் எங்களுடைய முழுத்திறமையை வெளிப்படுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும்.

தொடக்கத்தில் சிறப்பாக செயல்பட நினைக்கிறோம். எங்களுடைய உறுதி அங்கே வெளிப்படுத்தினால் நன்றாக செயல்பட முடியும். இவ்வாறு ஹசி கூறினார். (க)

## விடுதலைப்...

நிலை குறித்து கூடி ஆராய்ந்துள்ளனர்.

இவர்களுக்கு இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து சர்வதேச நெருக்கடி குழு, மனித உரிமை கண்காணிப்பகம், பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு போன்ற அமைப்புகள் விளக்கவுரை வழங்கியுள்ளன.

இங்கு உரையாற்றிய அமெரிக்க செனட் பிரதிநிதி பில் ஜோன்சன் இலங்கையில் உண்மையான முன்னேற்றம் ஏற்படுவதற்கு யுத்த குற்றங்களுக்கு பொறுப்பு கூறப்படுதல் அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் காண்பதற்காக சர்வதேச சமூகம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என செனட் பிரதிநிதி டானி டேவிஸ் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னியிருந்த வேளை தான் செஞ்சோலைக்கு விஜயம் மேற்கொண்டதையும், பின்னர் அதனை பயங்கரவாதிகள் முகாம் என பிழையாக சித்திரித்து இலங்கை விமானப் படையினர் குண்டுவீசி அழித்ததையும் அவர் நினைவு கூர்ந்துள்ளார்.

இலங்கையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களையும் நினைவு கூர்ந்துள்ள அவர் விடுதலைப் புலிகளின் கொள்கைக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

நான் சரியான பக்கத்திலேயே உள்ளேன். அமெரிக்காவில் உள்ள ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனத்தை சேர்ந்தவன் என்ற வகையில் புலிகளின் சிந்தனையை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது என அவர் தெரிவித்துள்ளார் (செ-11)

## ரூபாய் 5 மில்...

அதன் அதிகாரிகளிடம் வினவிய போது மூலதன சந்தை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்விற்கு செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

எனினும் 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிரதி பணிப்பாளர் நாயகம் தம்மிக்க பெரேரா, நாளைக்கான இளைஞர் அமைப்பினை நாட்டில் நிலைத்து நிற்பதற்காகவும் மூலதன சந்தை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்விற்கும் அப்பணத்தை பயன்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளைக்கான இளைஞர் அமைப்பினால் யோசனைகள் முன்வைத்த போது, இது குறித்து பங்கு பரிவர்த்தன நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே, குறித்த நிதியை வழங்க தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பங்கு பரிவர்த்தன நிலையத்தின் முன்னாள் தலைவர் நாலக கொடஹேவ மற்றும் நிலையத்தின் உறுப்பினர்களிடமும் இது குறித்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடமும் குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (செ-11)

## ஜனநாயக...

இணுவில் இந்துக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் கையளிப்பு விழாவும் கல்லூரியில் அமரர் நா.கணேசபிள்ளை அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு முக்கியமான கட்டம் இப்பொழுது உருவாகியுள்ளது. உள்ளூர் மக்களும் வெளியூர் உறவுகளும் ஒன்று சேர்ந்து எமது வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கட்டி எழுப்பும் கடப்பாட்டினைக் கொண்டவர்களாக நாமுள்ளோம்.

எமது வளங்கள் பல விதங்களில் பாதிப்படைந்துள்ளன. வளங்கள் சில சூறையாடப்பட்டு பிற மாகாணங்களுக்கு களவாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

எம் நாளாந்த வாழ்க்கை வழமைக்குத் திரும்ப வேண்டுமெனில் இராணுவத்தினர் எமது மண்ணில் இருந்து வெளியேற வேண்டும்.

நாங்கள் யாவரும் சகோதரர்கள். எமக்குள் நல்லெண்ணம் மலரட்டும் சுமூகமான உறவுகள் உருவாகட்டும் என்றெல்லாம் மேடைகளில் ஏறிக் கூறிவிட்டுப் போரின் போது யுத்த குற்றமிழைத்த இராணுவத் தினரைத் தொடர்ந்து எம் மண்ணில் ஆக்கிரமிப்புப் படையாக இருந்து ஆளவிடுவது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

எமது மாணவ சமுதாயத்துக்கு மேற்படி தொடர் இராணுவப் பிரசன்னம் பலவிதமான பாதிப்புக்களைத் தந்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் எல்லைகளை காப்பாற்றுவதாகக் கூறி எமது மண்ணையும், வளங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு ஒரு போர் முடிந்து 6 வருடங்களின் பின்னரும் வேண்டாத எம்மிடையே பலாத்காரமாக நிலைநிறுத்தப்பட்டிருக்கும் ஒரு அரச படையே! இராணுவமும், கடற்படையும். எமது பாதுகாப்புக்காக இராணுவத்தை இங்கு நிலைநிறுத்தியுள்ளதாக அரசாங்கம் அறிவிக்கின்றது.

ஆனால், நாங்கள் எவரும் எங்களைப் பாதுகாக்க நீங்கள் இங்கு இருங்கள் என்று இராணுவத்தினரிடம் கூறியதாகத் தெரியவில்லை.

அவ்வாறு யாராவது கூறியிருந்தால் அவர் இராணுவத்தின் அனுசரணையாளனாகவோ இராணுவத்துக்குப் பயந்தவனாகவோ அல்லது அரசாங்கத்தின் ஒற்றனாகவோதான் இருக்க வேண்டும்.

அண்மைக் காலங்களில் நடைபெறும் மிகக் கொடூரமான குற்றச் செயல்கள் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இங்கு மக்களிடையே அறிந்திராத செயல்கள். 2009க்கு முன்னரான கிருஷாந்தியின் கொலைக்கும் மக்களுக்கும் தொடர்பேதும் இருக்கவில்லை.

ஆனால், தற்போது எமது இளைஞர் யுவதிகள் சுதந்திரதாகத்துடன் உருவாகக்கூடாது, அறிவில் சிறந்து விளங்கக் கூடாது, தொழிற்பாங்குடன் கடுமையாக உழைப்பவர்களாக உருவாகக் கூடாது என்று திட்டமிட்டுப் பிழையான வழிகளில் அவர்கள் பாதை தவறி நடக்க உரிய சூழலை யாராவது வழி அமைத்துக் கொடுக்கப் பார்க்கின்றார்களோ என்று எண்ணவேண்டியுள்ளது. எந்த ஒரு அரசாங்கமும் தமிழர்களுக்கு நன்மை செய்வோம் என்று வெளிப்படையாக சிங்கள மக்களிடையே தெரியப்படுத்தத் தயங்குகின்றது.

காரணம் அந்த அளவுக்கு சிங்களச் சகோதர சகோதரிகள் மனதில் நஞ்சை விதைத்துள்ளார்கள் அரசியல்வாதிகள்.

தமிழர்களுக்குத் தயை காட்டினால் தமக்குத் தேர்தலில் சிங்கள வாக்காளர்கள் தர அடையாளம் போட மாட்டார்களோ என்ற பயத்தில் எல்லா சிங்கள அரசியல் தலைவர்களும் கரவாகத்தான் எமக்கு உறுதிமொழிகளைத் தருகின்றார்கள். இது அபாயகரமானது.

1955ஆம் ஆண்டில் சேர் ஜோன் கொத்தலாவல என்ற அப்போதைய பிரதம மந்திரி வட மாகாணம் வந்து தீவுப் பகுதிகளில் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கப் போவதாக அறிவித்தார்.

1956ஆம் ஆண்டில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பண்டாரநாயக்க 24 மணித்தியாலங்களில் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார்.

சிங்கள மக்கள் பெருவாரியாக பண்டாரநாயக்க அவர்களுக்கு வாக்களித்துத் தேர்தலில் வெற்றிவாகை சூட வழி வகுத்தனர்.

பின்னர் தமிழர்கள் வெகுவாக ஆட்சேபித்ததால் நியாயமான தமிழ்மொழிப் பாவனைக்கான ஒரு சட்ட வரைபைக் கொண்டு வந்தார்.

உடனே அவரின் வீட்டின் முன் சுமார் 200 பௌத்த பிக்குமார் கூடினர். கூடி பிரதமரை வெளியே அழைத்து என்ன சொன்னார்கள் தெரியுமா? நாங்கள் யாவரும் மிகவும் பிரயாசைப்பட்டு உங்களைப் பதவியில் ஏற்றியது தமிழ் மொழிக்கு நியாயமான இடம் கொடுக்கவா? இல்லை. சிங்களம் மட்டும் நாடு பூராகவும் பாவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே உங்களுக்கு இந்தப் பதவியைத் தந்தோம் என்றார்கள்.

உடனே அந்தச் சட்டவரைபைப் பண்டாரநாயக்க. பிக்குகள் முன்னிலையிலேயே கிழித்தெறிந்து விட்டார். அடுத்த வருடம் அவர் ஒரு பௌத்த பிக்குவினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையேன் உங்கள் முன்னிலையில் இன்று இதைக் கூறுகின்றேன் என்றால், நாம் கரவாகக் காரியமாற்றினால் தப்பி விடலாம் என்று எண்ணுகின்றோம்.

அது அவ்வாறு நடப்பதில்லை. இன்று கரவாகத் தமிழர்களுக்கு நாம் உரிய உரித்துக்களைப் பின்னர் பெற்றுக் கொடுப்போம் என்று கூறுவோரை அவர்கள் பதவிக்கு வந்தபின் அவர்களுக்கு வாக்கை அளித்த பெருவாரியான சிங்கள மக்கள் இடமளிக்க மாட்டார்கள். சிறிசேன தருவார், ரணில் தருவார், சந்திரிகா தருவார் என்று நாம் எண்ணுவதெல்லாம் மடமை.

இன்றே நாங்கள் எல்லோரும் வெளிப்படையாக ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும். இதைத்தான் நாங்கள் செய்வோம் என்று சிங்களத் தலைவர்கள் கூற வேண்டும்.

இதுதான் எமக்கு வேண்டும் என்று தமிழ்த் தலைவர்கள் கூற வேண்டும். கரவாக காரியங்கள் ஆற்றக் கூடாது என்றே கூறிவைக்கின்றேன்.

உண்மையை உறுதியாகப் பற்றிக் கருமம் ஆற்றுங்கள். உண்மையை நோக்கி வழி நடப்பதால் அதில் வரும் தடங்கல்கள், தாமதங்கள் ஆகியவற்றை ஏற்க நாங்கள் மனமுவந்து ஆயத்தமாக இருக்க வேண்டும். "பொய்மையும் வாய்மையிடத்தே புரைதீர்த்த நன்மை உண்டாகப் பெறின்" என்றான் வள்ளுவன். சில சமயங்களில் பொய்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எம்மை நாடி வரும்.

ஆனால், அது ஒரு விதிவிலக்கான நடவடிக்கையே. வள்ளுவன் கூறிவிட்டான் என்று பொய்மை வழியையே கடைப்பிடிக்காதீர்கள்.

பொய்மை ஒரு விதிவிலக்கு. மெய்மையே வழி. இன்னொரு இடத்தில் வள்ளுவன் கூறுகின்றான் "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" என முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வித்தியா...

விக்கும் போதே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், புங்குடுதீவு மாணவியின் படுகொலை விவகாரத்தில் பொலிஸார் கடமைகளைச செய்வதற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டும். மக்கள் சட்டத்தை கையில் எடுப்பது நிலைமைகளை மேலும் மோசமாக்கும்.

வடக்கில் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்தவும் மாணவியின் படுகொலை தொடர்பில் உண்மைகளைக் கண்டறியவும் விசேட பொலிஸ் குழுவினர் மற்றும் சட்டத்தரணிகள்குழுவினர்நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவி வித்தியாவின் கொலையுடன் தொடர்புபட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் 9 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே சிறுமியின் கொலையில் விரைவில் நீதி நிலைநாட்டப்படும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (செ)

## மகிந்த...

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாட்டை மீட்டெடுப்பதில் முனைப்பு காட்டி வருகின்றது.

எனவேஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13-ம் உறுப்பினர் என்றவகையில் நாட்டை பாதுகாப்பது எனது கடமையாகும என டி.எம் தெரிவித்தார்.

மேலும் பெரும்பான்மை கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கு கட்சியின் தலைவர் மைத்திரிபால செவிமடுத்து மகிந்த ராஜபக்ஷவையே பிரதமர் வேட்பாளராக பெயரிட வேண்டும் என டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்


### வேலைவாய்ப்பு

Golden Group Advertising Companies 2015 ற்கான ஐந்து வகையான பதவி வெற்றிடங்கள்

- Sales Distributer
- Supervisor
- Exaguite
- A.S Manager
- Administration (Female)

ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு :- கல்வித்தகைமை O/L, A/L விரும்பத்தக்கது.
தங்குமிடம் இலவசம். வயது எல்லை :- 18 - 35 (C-1060)
தொடர்பு :- 0779987699

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள் (556)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

### தென் இந்திய திருத்தல யாத்திரை

ஆரம்பம் : 20.06.2015 நாள்கள் : 16

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய 6 மாநிலங்களுடனான 60ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம். மேலும் யாத்திரை சென்று திரும்பும்வரை நாங்களும் கூட வருவோம். சகல ஆலயங்களுக்கும் உள்ளே அழைத்துச் சென்று அழைத்து வருவோம். சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

பெற்றுக்கொண்ட ரூபாவிற்கு எமது சேவை

இருவழி விமான ரிக்கற், எயார்போட் போக வாகன வசதி, மூன்றுவேளை உயர்தர சைவ உணவு, நாளொன்றுக்கு ஒரு லீற்றர் மினரல் வோட்டர், 2 பேருக்கு கட்டில், மெத்தை, வெந்நீருடன் இணைந்த அறைகளில் தங்கவைக்கப்படுவீர்கள், யாத்திரை முடியும்வரை A/C வாகன வசதி, சகல ஆலய நுழைவுக் கட்டணங்கள் உட்பட எமது பொறுப்பு. மேலும் எமது தனிப்பட்ட சேவையாக ஆலயங்களில் குறைப்பாக எடுக்கும் 60 புகைப்படங்களும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: கலாநிதி ஸ்ரீநிங்கநாதன், 077 768 0102
தொடர்பு:S.சுப்பிரமணியம் (அதிபர், சாவகச்சேரி) 077 615 5930 (C-1057)

### Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy (C-1044)
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### SPEED LANKA EXPRESS



வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

Speed Lanka Express (Pvt) Ltd. (C-1051)
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net

### IELTS இல்லாமல் ஐரோப்பா போக

பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா

பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தி அவசியம்! அழையுங்கள்
0777 324 004

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions

எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்

Sikaram (Pvt) Ltd. (C-1062)
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்

### தங்குமிட வசதி

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest
தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)
T.P :- 0113158398, 0770260180, 0773074477

### Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்: KRC

### கடை வாடகைக்கு

யாழ்.நகரில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு உண்டு.
நீளம் - 60', அகலம் 12'
தொடர்பு: 0752040446 (549)

### ஊர்க்கோழிக் குஞ்சு விற்பனை

Lanka Farmஇன் ஒருநாள் கிரிராஜ், கழுத்து வெட்டி இன ஊர்க்கோழிக் குஞ்சுகள் ஒவ்வொரு கிழமையும் யாழ்ப்பாணத்தில் கிடைக்கும்
தொடர்புகளுக்கு: விலை 66/-
0777531344, 0779789230
திருநெல்வேலி (555)

### விற்பனைக்கு

யாழ்ப்பாண கன்னாதிட்டி என்னும் முகவரியில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு அடுக்கு மாடிகளைக் கொண்ட கடைக் கட்டிடத் தொகுதி விற்பனைக்குண்டு. (விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்) (C-1056)
தொடர்புகளுக்கு : 0774002780

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
Computer Laptop Repair & Sale
GUNAA BEST PC (560)
120, Hospital Road Jaffna. (Telecom Site)

15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...

STUDENT VISA – SPOUSE VISA – DEPENDANT VISA – WORK VISA – SKILLED MIGRATION – VISIT VISA

கனடா Express Entry Visa — தொழில்வாய்ப்புடன் குடியுரிமை (PR) Degree/Diplomaவுடன் குறைந்தது ஒரு வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

Student VISA — UK, Australia, Spain, New Zealand, Canada Switzerland & Malaysia

FREE Assessment Send your CV to info@sikaram.lk
www.sikaram.lk

Sikaram (Pvt) Ltd. (C-1062)
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004, 021 222 00 11


## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் 81, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவிலடி) யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தனபாலசிங்கம் 20.05.2015 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகரெத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் நா.தனபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வைத்தியகலாநிதி லயன் மு.கதிர்காமநாதன் (மன்னார்), காலஞ்சென்ற மு.வரதராஜன் (திரைப்பட தயாரிப்பாளர்-சென்னை), காலஞ்சென்றவர்களான விஜயலட்சுமி சேனாதிராஜா மற்றும் பாலசுப்பிரமணியம் (கனடா), பிரபல தொழில் அதிபர் கனகேந்திரநாதன் (தென்னாபிரிக்கா), Dr.லயன் K.M பத்மநாதன் (உரிமையாளர் வெஸ்கோ பாமசி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூலோகேந்திரன் (இந்திரன் சுவீட்ஸ்-கனடா), கஜேந்திரன் (கனடா), வியேந்திரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), ஜெஜேந்திரன் (கனடா), நாகராசா (ஜேர்மனி), பாலதேவன் -வரதா (ஜேர்மனி), சுதனி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், நாகேஸ்வரி, பத்மாதேவி, கமலாதேவி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வைத்திய கலாநிதி திருமதி ச.சுஜாதா (ஒக்ஸ்போட்-லண்டன்), வைத்தியகலாநிதி க.சுதாகர் (பிராந்திய வைத்திய தொற்று நோயியலாளர்-மன்னார் மாவட்டம்), வ.மதியழகன் (இயக்குநர்-சரஸ்வதி மருத்துவக் கல்லூரி, சரஸ்வதி மருத்துவமனை-புதுடில்லி, இந்தியா, திரைப்பட தயாரிப்பாளர்-புதுடில்லி, இந்தியா) வ.சுரேஸ் (தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்-அமெரிக்கா), வைத்திய கலாநிதி பத்மநாதன் பிரஷனா, பத்மநாதன் பிரவீந் (தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்), பத்மநாதன் பிறின்சிகா (மாணவி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 81, மணிக்கூட்டு வீதியில் (பெருமாள் கோவிலடி) உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-நா.தனபாலசிங்கம் (கணவன்)
லயன் வைத்தியகலாநிதி மு.கதிர்காமநாதன் (மன்னார்)
லயன் Dr.K.M பத்மநாதன் "வெஸ்கோ" பாமசி, யாழ்ப்பாணம். (545)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 | 24.05.2015 | தொலைபேசி : 021 222 3378
நாதம் 16




# முடங்கிப் போன குடாநாடு முடக்கிய இளைஞர்கள்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முடங்கிப்போன குடாநாடு முடக்கிய இளைஞர்கள்


குருஷேத்திரம்

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து தமிழர் தாயகம் பல்வேறு அகிம்சைப் போராட்டங்களையும் சந்தித்து வந்துள்ளது.

அதில் பூரணஹர்த்தால் என்பது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த அத்தனை இயக்கங்களாலும் அமுல்படுத்தப்பட்ட ஒரு பொதுவான ஒரு போராட்ட முறைமையாக இருந்தது.

கடையடைப்பு, பாடசாலைகள் பகிஷ்கரிப்பு, போக்குவரத்து முற்றாகத் தடை என்ற நடைமுறையில் மறுநாள் ஊடகச் செய்தி யாழ். குடாநாடு ஸ்தம்பிதம்; வடக்கு முடங்கியது; தமிழர் தாயகம் எங்கும் உணர்ச்சி பூர்வமான ஹர்த்தால் என்பதாக செய்திகள் இருக்கும்.

இதனிடையே பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் வீடுதிரும்பிக் கொண்டிருப்பது, தத்தம் கடமைகளை நிறைவேற்ற உரிய இடங்களுக்குச் செல்லவேண்டியவர்கள் போக்குவரத்தின்மையால் கஷ்டப்பட்டமை போன்ற சம்பவங்களும் நடந்தேறும்.

இதனிடையே விடுதலைப் புலிகளின் காலத்தில் முக்கியமான போராளிகளின் மறைவுக்காகவும் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவது வழக்கம்.



2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நிறைவேறிய சமாதான ஒப்பந்த காலத்தில் ஹர்த்தால் எதிர்ப்புப் போராட்டங்கள் மீண்டும் புதுவடிவம் பெற்றன.

வீதிகளில் ரயர்களைப் போட்டு எரித்து இராணுவ வாகனங்களின் போக்குவரத்திற்குத் தடை விதிக்கின்ற சம்பவங்கள் பொதுமக்களின் பயணத்திற்கும் பாதகமாக இருந்தது.

எதுவாயினும் நடுவீதியில், சந்தியில் இடம்பெற்ற ரயர் எரிப்பு ஏதோவொரு வகையில் பயப்பீதியை ஏற்படுத்த வீடுகளுக்குள் இருப்பதே புத்திசாலித்தனம் என மக்கள் நினைத்துக் கொண்டனர். இந்தப் போராட்டங்கள் அனைத்தும் 2006 ஆம் ஆண்டிற்குப் பின்னர் முற்றாகத் தடைப்பட்டது.

அதிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த பெரும் போரில் இலங்கை அரசு பெற்ற வெற்றிக்குப் பின்னர் தமிழர் தாயகத்தில் ஹர்த்தால் என்பது மறக்கப்பட்ட விடய




மாகவே இருந்தது. தமிழர் தாயகத்தில் எதற்காகவும் கடையடைப்புச் செய்யவிடக் கூடாது என்பதில் படைத்தரப்பு இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தது.

கடைபூட்டினால் அது உரிமையாளருக்கு ஆபத்து என்ற நிலையில் ஹர்த்தால் ஒரு பயங்கரமான நடவடிக்கையாயிற்று.

மாறாக சுதந்திர தினத்தில் எல்லாக் கடைகளிலும், நிறுவனங்களிலும் [illegible] கட்டப்பட[illegible] படையினர் முழுமையாக நடைமுறைப்படுத்துகின்ற கலாசாரம் அரங்கேறியிருந்தது. இவை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அமுலாகிய காட்சிகள்.

2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகிறார். ஜனநாயகத்தின் பண்புகள் மெல்ல முளைக்கின்றன. அதிலும் குறிப்பாக தமிழர் தாயகத்தில் ஒருவகையான அமைதிநிலை உணரப்பட்டது. இந்த நிலையில் கடந்த 13.05.2015 ஆம் திகதி புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் யாழ்.குடாநாட்டை முற்றுமுழுதாக முடக்கியது.

வித்தியாவின் படுகொலைச் சம்பவம் அறியப்பட்ட 14.05.2015 ஆம் திகதி புங்குடுதீவில் மிகப் பெரிய எதிர்ப்புப் போராட்டங்கள் ஆரம்பித்தன. ஆரம்பத்தில் மாணவர்கள் மட்டத்தில் பாடசாலைகளில் நடந்த கண்டனங்கள் கடந்த 19 .05.2015 ஆம் திகதியும் 20.05.2015 ஆம் திகதியும் வேகமெடுக்க இரண்டு நாட்களும் யாழ். குடாநாடு முடங்கிப்போனது.

அதிலும் 2015 மே 20 ஆம் திகதி மாணவர் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. அன்றைய தினம் கடைகளைப்பூட்டி பூரணஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் கோரிக்கை விடப்பட்டது. எனினும் விடப்பட்ட கோரிக்கைக்கப்பால் மாணவி வித்தியாவின் படுகொலையை ஒருபோதும் மன்னிக்க முடியாது என்ற உணர்வோடு அனைவரும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவளித்தனர். பின்னணிகள், அமைப்பு ரீதியான [illegible] இன்றி [illegible] மாணவிக்கு நீதி கிடைக்க- குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்க



வேண்டும் என்ற கோரிக்கையோடு அனைவரும் உணர்வுபூர்வமான தமது பங்களிப்பை வழங்கினர்.

ஆர்ப்பாட்டம், கண்டனப் பேரணி யாழ்.குடாநாடு ம்ழுவதிலும் அரங்கேறியது. கடைகள், போக்குவரத்துச் சேவைகள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள் என அனைத்தும் அடங்கிப்போயின.

உணர்வுபூர்வமான மக்கள் எழுச்சிக்கு பொலிஸாரின் ஒத்துழைப்பும் கிடைத்திருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைவிட, ஆர்ப்பாட்டத்தை- ரயர் எரியூட்டலை பார்ப்பதில் ஏகப்பட்ட மக்கள் கூட்டம் பார்வையாளர்களாக இருந்தாலும் அவர்களும் உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு வழங்கியதைக் காணமுடிந்தது.

இவ்வளவு இளைஞர்கள் எங்கிருந்து வந்தனர்? இந்தக் கேள்வியோடு சமூக நீதிக்கான எங்கள் இளைஞர்களின் கொந்தளிப்பு கண்களை நனைத்துக் கொண்டன.மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக நடக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தோடு வடபுலத்தில் சமூக அநீதிகள், சீரழிவுகள் முற்றுப் பெற்றுவிடும்.

எரிகின்ற ரயர்கள் காப்பெட் வீதியைக் கந்தறுப்பதாயினும் அந்தத் தீச்சுவாலையில் சமூக அநீதிகளும் எரிந்து போவதாகவே கருதப்பட்டது.

### முஸ்லிம்களின் எதிர்ப்பு ஊர்வலம்

காலைப்பொழுதில் ஒன்று திரண்ட யாழ்ப்பாண முஸ்லிம் சகோதரர்கள் மாணவி வித்தியாவின்மீது நடத்தப்பட்ட வன்மங்களைக் கடுமையாக எதிர்த்தனர். கண்டன ஊர்வலம், நடையாகவும் வாகன ஊர்தியிலுமாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி, கே.கே.எஸ். வீதி, நாவலர் வீதி வழியாக யாழ்ப்பாணப் பள்ளிவாசலைச் சென்றடைந்தது.

சவுதிச் சட்டத்தின்படி குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடு என்று அவர்கள் எழுப்பிய கோஷம் நெஞ்சை நெருடிக் கொண்டது. ஏகப்பட்ட முஸ்லிம் சகோதரர்கள் பங்குபற்றியமை இந்தப் பேரணி தமிழ்- முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்பும் பாலமாகவும் அமைந்தது எனலாம்.

ஆர்ப்பாட்டம், பேரணி, கடையடைப்பு, பூரணஹர்த்தால் என்பதன் மறுபக்கம் மைத்திரியின் ஆட்சியில் எழுந்த ஜனநாயகம் என்பதாகப் பொருள் கொள்ளக்கூடியது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்திருந்தால்- ஜீ.ஏ. சந்திரசிறி வடக்கின் ஆளுநராகக் கோலோச்சியிருந்தால் சமூக நீதிக்கான பூரண ஹர்த்தால் நடந்திருக்காதென்பது சர்வநிச்சயம்.

ஆரம்ப கட்டங்களில் ஆர்ப்பாட்டம் சுமுகமாக நடந்திருந்தாலும் மதியத்திற்குப் பின்னர் யாழ்.நீதிமன்றத்தைத் தாக்கிய போது... இதென்ன வேலை என்பதாக நிலைமை மாறியது.

ஆர்ப்பாட்டத்திற்கும் பேரணிக்கும் ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸார் நீதிமன்றத்தின் மீதான தாக்குதலோடு தாங்கள் யாரென்பதைக் காட்டத் தலைப்பட்டனர்.

எனினும் நீதிமன்றத்தின் மீதான தாக்குதலைத் தடுப்பதில் பொலிஸாரின் முன்கூட்டிய நடவடிக்கைகள் போதுமானதல்ல என்பதையும் இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

பொதுவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நீதிமன்ற வளாகத்திற்குள் அனுமதித்திருக்கக்கூடாது. எனினும் அதனைப் பொலிஸார் செய்யாதது ஆர்ப்பாட்ட முடிவில் ஒரு பாடம் படிக்க வேண்டும் என நினைத்தது தான் காரணமோ என்று எண்ணத் தோன்றும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## சுவிஸ்காரரைக் காப்பாற்றப்போய் பிசங்கிப் போன சட்டவல்லுநர்

ஆலடி மாநாடு முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காகக் கூடியது. மாநாட்டிற்கு விதானையாரைத் தவிர அனைவரும் வந்திருந்தனர்.

அனைவர் முகத்திலும் இனம்புரியாத சோகம் மாணவி வித்தியாவின் மரணம்; ஆர்ப்பாட்டத்தின் போது இளைஞர்கள் கொண்ட கோபம்; இளைஞர்களின் கைது என எல்லாம் சேர்ந்து அவர்களை ஏதோவொரு வகையில் தாக்கிவிட்டது.

மாநாட்டில் அமைதி. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** சட்டத்துறையில பெயர்போன இந்தாள் ஏனப்பா புங்குடுதீவில வந்து தன்ரபெயரைப் பிசக்கினார்.

**பண்டிதர்:** விதி பிழைத்தால் என்ன செய்யமுடியும். எதிர்வரும் பொதுத்தேர்தலில் தீவகத் தொகுதியில போட்டியிடலாம் என்றிருந்த மாறனாருக்கு இப்படியொரு தலைவிதி.

**வாத்தியார்:** நாசமாப்போன சுவிஸ்காரன் புங்குடுதீவுக்கு வந்ததால எல்லாம் கந்தறுத்து காவடி எடுக்கிற வேலையாப்போச்சுது.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா நடந்தது மன்னிக்கமுடியாத குற்றம். சனம் முழுக்க கெம்பி எழும்புது. இப்படி இருக்க மாறன் ஐயா பார்த்த வேலை பிழைதானே.

**பண்டிதர்:** இஞ்சே மூப்பர் மாறனும் புங்குடுதீவு தானே! சுவிஸ்காரன் மாட்டுப்பட்டுப்போனான் என்றவுடன் வெளிநாட்டில இருந்து தொலைபேசி அழைப்புகள் கடகடத்திருக்கும். சரி, ஆளை ஏற்றிக் கொழும்புக்கு அனுப்பிவிட்டால் எல்லாம் சரியாய்ப்போயிடும் என்று சட்டவல்லுநர் நினைத்திருக்கிறார்.

**கங்காணி:** ஓமோம் இப்ப இருக்கிற தொழில்நுட்பத்தில எங்கட இளம் பெடிபெட்டையள் எக்ஸ்பேட் என்பதை அவர் நினைக்கத் தவறிவிட்டார். சுவிஸ்காரனை ஏற்றிக் கொழும்புக்கு அனுப்பிப்போட்டு புங்குடுதீவில ஒரு உயர்மட்ட மாநாடு என்றொரு ஏற்பாடு.

**வாத்தியார்:** அடசங்கதி அப்படியே! பிறகென்ன நடந்தது கங்காணி.

**கங்காணி:** பிறகெனன்ன உயர்மட்ட மாநாடு கூடினது. சட்டவல்லுநர், டிஐஜி, வேலணைப் பிரதேச செயலர், புங்குடுதீவுப் பிரமுகர்கள், கூட்டமைப்பின்ர பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர். அந்த நேரம் பார்த்து கொழும்பில இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு யாருக்கோ வந்திருக்கு. அந்தத் தொலைபேசியில எடேய்! உங்க என்னடா செய்யிறியள். வித்தியாவைக் கொலை செய்த அந்தச் சுவிஸ்காரப் பாதகன் வெள்ளவத்தையில நிற்கிறான்.

இந்த இடிவிழுந்த செய்தியைக் கேட்டவர் மற்றவர்களுக்குச் சொல்ல, சனங்கள் மாறனுக்கு எதிராகக் குரல் கொடுக்க பிறகென்ன சொல்லவேணுமோ. உயர்மட்ட மாநாட்டைச்சூழ ஒரே சனக்கூட்டம். கொண்டுவா சுவிஸ்காரனை என்ற கோஷம் வானைப்பிளந்தது. சனங்கள் சொல்லுக்கேட்கவில்லை. எழுத்துமூலம் ஒரு கடிதம் தயாரிக்கப்பட்டது. 20.05.2015 ஆம் திகதி சம்பந்தப்பட்ட சுவிஸ் காரனும் மாறனும் யாழ்ப்பாண நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படுவர். இந்த உறுதி மொழி யில பிரதிப் பொலிஸ்மா அதிபர், வேலணைப் பிர தேச செயலர் ஆகியோர் கையெழுத்துவைக்க, சரி என்று சனங்கள் நம்பினர்.

**வாத்தியார்:** எழுத்துமூலம் உத்தரவாதம் கொடுத்தவியள் 20 ஆம் திகதி அந்த இருவரையும் கோட்டில ஆஜர்படுத்தினவியளோ.

**கங்காணி:** அதெங்க நடக்கிறது. சனத்தை ஏமாற்றுறதுக்காக எழுத்துமூலம் ஒரு கடிதம் அவ்வளவுதான். கொடுத்த வாக்குறுதியை டிஐஜி காப்பாற்றவேயில்லை.

**மூப்பர்:** அதுசரி கங்காணி சுவிஸ்காரனை கூட்டிக்கொண்டு போனது பற்றி மாறன் என்ன சொல்லுறார்.



## பதவிக்காக முன்வைத்த குற்றச்சாட்டு கேதீச்சரத்தானே! நீயே பார்த்துக்கொள்

19.05.2015 அன்று மடத்துவெளிச் சந்தியில வைத்து சுவிஸ்காரன் தாக்கப்பட்டுள்ளார். அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வாகனத்தில ஏற்றி வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று அனுமதித்த போது அவர் தப்பி ஓடிவிட்டார் என்பதுதான் மாறானாற்ற பதிலாம்.

**பண்டிதர்:** சுவிஸ்காரர் இந்தச் சம்பவத்தோட எப்படி சம்பந்தப்பட்டவர்.

**கங்காணி:** அவர் சம்பந்தப்படவில்லை. அவர்தான் சூத்திரதாரியாம். சுவிஸில இருந்து அவ்வப்போது இலங்கைக்கு வரும் அவர் இங்க வந்து பாலியல் சார்ந்த படங்களை எடுத்துக்கொண்டு போனால் அங்க நல்ல விற்பனையாகுமாம்.

**வாத்தியார்:** அட நாசமறுப்பு.சுவிஸுக்குப் போயும் இந்த வேலைதானோ அந்தாளுக்குக் கிடைத்தது. நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத் தண்ணி என்கிற மாதிரித்தான் நிலைமை இருக்குது.

**கங்காணி:** என்ன இருந்தாலும் பிள்ளை வித்தியாவுக்கு நடந்த கொடுமை கண்டு எங்கட சனங்கள் கொதித்தெழுந்ததை நாங்கள் ஒருபோதும் மறக்கமுடியாது. சனத்தின்ர எழுச்சி கண்ட அரசியல்வாதிகள் சிலருக்குக் கலக்கத் தொடங்கிற்று.

**மூப்பர்:** ஏன்? கங்காணி அவையளுக்கு என்ன?

**கங்காணி:** எங்க புலி திரும்பவும் வந்திடுமோ என்ற ஏக்கம்தான்.

**பண்டிதர்:** புங்குடுதீவில ஆர்ப்பாட்டம் செய்த எங்கட சனங்கள் பொலிஸாரின் ஜீப்பையும் மறிச்சுச் சோதனை நடத்தினவியளாமே.

**வாத்தியார்:** இதுதான் பண்டிதர் சொல்லுறது காலமாற்றம் என்று. முன்பு அவையள் எங்களைச் செக் பண்ணிச்சினம். இப்ப நாங்கள் செக் பண்றம்.

**பண்டிதர்:** சரி சரி இந்த விடயத்தை இதோட முடித்துக் கொண்டு அடுத்த விடயத்திற்குப் போவம்.

**கங்காணி:** கூட்டமைப்பின்ர சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதெல்லாம் பொழுதுபோக்கிற்காகச் செய்யுதுகள் என்று புங்குடுதீவில நடந்த உயர் மட்ட மாநாட்டில டிஐஜிக்குச் சொன்னவர் என்பது தெரியும்தானே! காதால கேட்ட சாட்சியள் இருக்குது.

**பண்டிதர்:** அடேயப்பா அதைவிடு. அந்தாள் வலி. வடக்கு என்றளவில்தான் துள்ளிக்குதிக்கும். தீவகம் எண்டால் அவருக்கு அலேஜிக். இதுகள விட்டுட்டு வாத்தியார் மாநாட்டிற்கு வந்த முறைப்பாடுகளைச் சொல்லுங்கோ.

**வாத்தியார்:** மன்னாரில பாடல்பெற்ற திருக்கேதீச்சரத்தில ஊழல் மோசடி என்று முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் படுபொய்யாம். நம்பிக்கையானவர்கள் ஆலடி மாநாட்டிற்கு அறிவித்திருக்கினம்.

நிதி மோசடி என்று குற்றஞ்சாட்டுபவர்கள் முக்கிய பதவிகளைத் தாங்கள் பிடிப்பதற்காக இப்படியொரு குற்றச்சாட்டை முன்வைக்கினமாம்.

**கங்காணி:** என்ர சிவபெருமானே! நடக்காத ஒன்றை நடந்தது என்று கூறினால் பாவபழி வந்து சேருமல்லோ.

**வாத்தியார்:** இவையள் குற்றஞ்சாட்டியவர் பெரிய மனிசன். அவர் ஊருக்கு உபகாரம் செய்யிற வள்ளல். அவரால்தான் ஒருசில இலட்சங்கள் மில்லியன்களாக மாறி திருக்கேதீச்சரத்தான்ர திருத்தொண்டுக்குப் பேருதவியாக மாறியிருக்கிறது. நடந்தது இது.

ஆனால் அந்த ஐந்து பேர் சொல்வது வேறு என நம்பிக்கையானவர்கள் ஆலடி மாநாட்டிற்குச் சொல்லியிருக்கினம். நல்லவர்களின் மனங்களை நோகடிக்கக் கூடாது என்று உண்மையையும் அவர்கள் சொல்லியிருக்கினம்.

**பண்டிதர்:** இதுதான் நான் அடிக்கடி சொல்லுறனான் சிவகாரியம். அந்தச் சிவனே பார்த்துக்கொள்ளட்டும். சரி பிழை சொல்லப்போய் நாங்கள் ஏன்பாவத்தை உழைப்பான். செய்தபாவம் போதாதோ!

(இப்படிப் பண்டிதர் கூற பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க மாநாடு நிறைவு பெற்றது)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொர்க்கத்தில் சில நாட்கள்

அந்த ஊரிலே ஒரு கோயில் இருந்தது. அந்தக்கோயிலுக்கு சரவணன் என்பவன் பூசகராக இருந்துவந்தான்.

சரவணனிடம் இரக்க சுபாவம் தாராளமாக



இருந்தது. ஏழைகளுக்கு முடிந்தளவு உதவிகளும் செய்வது வழக்கம். எல்லோரிடமும் அன்பாகவும் பண்பாகவும் பழகிவந்தான். எப்பொழுதும் இறைசிந்தனையோடுதான் காணப்பட்டான். அவன் பிறப்பால் பிராமணன் அல்லாவிடினும் இந்து மத கலாசாரங்களை நன்கு தெரிந்தவனாகவும் அதனை நன்கு பின்பற்றுபவனாகவும் இருந்தான்.

*கடவுளை நம்பினோர் கைவிடப்படார்* என்ற கூற்றை அவன் முற்று முழுதாக நம்பினான். இந்த நம்பிக்கையை அந்தக் கோயிலுக்கு வரும் அடியவர்கள் யாவருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்பது அவனது அவா.

எனவே, தனது உபதேசங்களின்போது பஞ்சமாபாதகங்களைச்செய்யக்கூடாது... உண்மைக்கெதிராகப் பேசுதல் கூடாது .. பிறர் மனம் வருந்தும்படி நடத்தல் ஆகாது என்பதை மக்கள்புரியும்படியாக வலியுறுத்திபலகதைகள் சொல்வான்.

அன்றொரு வெள்ளிக்கிழமை சரவணன், மிருகங்களைவதைத்தல்ஆகாது என்றபொருள்பட உபதேசம்செய்துகொண்டிருந்தான். அவன் கடந்தகாலத்தில், நாயன்மார்கள் செய்த அற்புதங்களைக்கூறுவதுபோல்தன்வாழ்வில்நடந்த கதைகளையும் அடியவர்களுக்குச் சொல்லுவான். ஏனெனில்தான் முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என அவன் நினைத்துக்கொள்கிறான்.

அவ்வாறுஅவன்கூறுகையில், சிலவருடங்களுக்கு முன், "இந்த ஊரின் ஆளரவமற்ற பகுதியில் எருத்து மாடொன்றை மறைவாகக் யாரோ கட்டிவைத்திருந்தார்கள். ஆனால், அது கதறிய சத்தம் வெகு தூரம் வரை கேட்டது. அச்சத்ததைக் கேட்டு அதைத்தேடி நான் போனேன். அங்கு நிலைமையைப் பார்த்தபொழுது அது இறைச்சிவெட்டுவதற்காக கட்டப்பட்டிருப்பதாக என் மனதுக்குத் தோன்றியது. எனவே, அந்த எருத்து மாட்டை அவிழ்த்து துரத்திவிட்டுவிட்டேன். உயிர்களைக்கொல்வது பாவம் இல்லையா!

இன்னொருநாள், குளக்கரையிலே குன்று ஒன்றைத் தோண்டி, அதனுள்ளே இரண்டு ஆமைகள் - கால்களைப் பிணைத்து விடப்பட்டிருந்தது. இதுவும்கூட மாமிசம் உண்பவர்கள் யாருக்குந் தெரியாமல் ஆமைகளை கொன்று ஊணை உண்பதற்காக கட்டிவைக்கப்பட்டவைதான். உலகில் ஆமை இனங்கள் அருகிவருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. -உங்களுக்குத்தெரியுமா? அதிலும் ஆமைகள் மனிதர்களிலும் பார்க்க ஆயுட்காலம் கூடியவை சில ஆமைகள் 300 வருடங்களுக்கு மேலாகவும் வாழ்கின்றன என்று. இவையெல்லாவற்றிற்கும் மேலாக அவற்றைக்கொல்வதுபாவம்இல்லையா!

அதனாலே, நான் அவற்றைப் பிடித்து குளத்துக்குள் விட்டு, தப்பிக்கவைத்தேன். எல்லா ஜீவன்களை விடவும்மனிதப்பிறவி உயர் வானது என்பதை, நாம் இப்படிப்பட்ட கருணை, அன்பு நிறைந்த செயல்களாலேதானே நிரூபிக்க முடியும்.

நம்மைப்போல எல்லா உயிர்களையும் நாம் கருதிக்கொள்ள வேண்டும். பாம்பைக்கூட நான் காப்பாற்றியிருக்கிறேன். கிணற்றுள் வீழ்ந்து நீரில் தத்தளித்த பாம்பை நீண்ட தடியை வைத்து- அதன்மேல் ஏறி தப்பிப்போகும்படியாகச் செய்து விட்டு நான் விலகிக் கொண்டேன். *நாம் நல்லது செய்கையில் நமக்கு நல்லது நடக்கும்* என்பது எனதுநம்பிக்கை" என்றுகூறிமுடித்தான். அவனது பண்புகள் மக்களை மிகவும் கவர்ந்தது. அவனே தமது கோயிலுக்கு தொடர்ந்து பூசகராக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

இவ்வாறு, சரவணனின் காலம் கழிந்தது. அவன் ஒரு நாள் வீதியில் சென்றுகொண்டிருக்கையில், வாகனம் ஒன்று அவனை மோதியது. அவன் தூக்கிவீசப்பட்டு வீதியின் ஓரத்தில் வீழ்ந்தான்.

தன்னைச்சுற்றி நடப்பது எதையும் சரவணனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் அவன், தான் ஏதோ புதிய ஓர் உலகத்தில் இருப்பதுபோல் உணர்ந்தான்.

அந்த இடம் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. முன்னொருபோதும் காணாத காட்சிகள். ஒரு அழகான உயர்ந்த மலை. அந்த மலையின் உச்சியில் தங்க நிறத்தினாலான பெரியதொரு மாளிகை. அந்த மாளிகை நூற்றுக்கும் மேற்பட்ட அடுக்குகளைக் கொண்ட மாளிகை. ஒவ்வொரு அடுக்கிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறைகள். அந்த அறைகளில் பல பதிவேடுகள் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருந்தன.

அந்த மலைச் சரிவும் அதைச் சுற்றிய சமவெளியும் எம கடாட்சமாக இருந்தது. ஆயினும் அங்கே பச்சை நிறக்கம்பளம் விரிக்கப்பட்டது போன்று புற்களாலான பசுந்தரையாகக் காணப்பட்டது. அதனிடையே அழகிய பூமரங்கள். பல நிறப் பூக்கள். அப்பூக்களில் இருந்து நறுமணம் வீசிக்கொண்டிருந்தது.

இவற்றை சற்று அவதானித்துக் கொண்டு நின்ற சரவணனை, அங்கே ஆனந்தக்கூத்தாடிக் கொண்டு நின்ற ஒரு பகுதியினர் அன்புடன் வரவேற்றனர்.

அந்த வரவேற்பில் தேன் மழையில் நனைந்ததுபோல நின்ற சரவணனுடன் அங்கு வந்தவர்கள் மனம்விட்டுப் பேசினர்.

ஒருவர் சொன்னார். "நான் மண்ணுலகிலிருந்து வந்து ஒரு மாதம் ஆகிறது. இங்கே எதைப் பார்த்தாலும், எதைத் தொட்டாலும்இன்பம்தான். இங்குள்ளோர் யாவரும் சமத்துவமாகவே மதிக்கப்படுகிறார்கள். இதனால், இனப்பிரச்சினையோ அதனோடிணைந்த சண்டைகளோ இங்கில்லை. இங்குள்ளவர்களிடையே போட்டி பொறாமைகளும் இல்லை. மண்ணுலகைப்போன்று மதுபானமோபோதைப்பொருளோவிற்கப்படுவதில்லை. வாள்வெட்டுப் பிரச்சினைகளும் இல்லைபாலியல் துஸ்பிரயோகங்களும் இல்லை. கலாசாரச் சீரழிவுகளும் இல்லை. கைத்தொலைபேசியும் இங்கில்லை" என்று கூறியவர் மேலும் தொடர்ந்தார்.

"இந்த தங்க நிற மாளிகையில் தான் இறைவன் இருக்கிறாராம். அவரைப் பார்ப்பதென்றால், மண்ணுலகின் தீய பழக்க வழக்கங்களையெல்லாம் முற்றாக மறக்கவேண்டுமாம். எப்போது அவற்றையெல்லாம் மறக்கின்றோமோ அன்றுதான், அந்த மாளிகைக்குள் நுழைய அழைப்பு வருமெனச் சொல்கிறார்கள். இந்த மாளிகையில்தான், மண்ணுலகிலுள்ளவர்களின் செயற்பாடுகளுக்கு மதிப்பீட்டுப்புள்ளிகளும் கணக்கு வைக்கப்படுகிறதாம். அங்குள்ளோர் செய்யும் பாவ புண்ணியங்களெல்லாம் கூட்டிக் கழித்துப்பார்த்து தகுதியானவர்கள் பொருத்தமான காலத்தில் மட்டுமே இங்கே அழைக்கப்படுவார்கள். சிலவேளைகளில் கணக்குப் பார்ப்பதில் கால நேரப்பிழைகள் ஏற்பட்டால் திருப்பியனுப்பி மீண்டும் அழைக்கப்படுவர்கள்" என்றார் அவர்.

இவற்றைக் கேட்ட சரவணன் இங்கே கட்டுக்கோப்பான, சமத்துவம் பேணுகின்ற ஒரு நிர்வாகம் இருப்பதாக உணர்ந்தான். ஊழல் இல்லாத ஆட்சி நடப்பதாக நினைத்தான். இயற்கையை இறைவனாகக் காணும் பக்தர்கள் வாழ்கிறார்கள் என்றுபுரிந்துகொண்டான்.

அப்பொழுது அவன் முன் ஒரு தேவ தூதர் வந்து "சரவணா உம்முடைய கணக்கில் தவறொன்று ஏற்பட்டுவிட்டது. உம்மை மண்ணுலகிற்கு அனுப்ப் போகிறோம். சரியான நேரக்கணிப்பிற்கமைய நீங்கள் இன்னும் பலவருடங்கள் கழித்தே மீண்டும் இங்கே அழைக்கப்படுவீர்கள். வாருங்கள் போகலாம்" என்றார்.

சரவணன் ஒருவாரமாய் சொர்க்கத்தில் இருந்ததில் அங்கிருந்து விலக மனமின்றி தயங்கிபடியே தேவதூதர் பின் நடந்தான்.

அதுவொரு சிறிய வானூர்தி போலத் தெரிந்தது. அதில் ஏறியவுடன், மின் விசிறி சுழல்வது போன்ற சத்தம் கேட்டது. அதன் பின் அவனுக்கு உறக்கம் தான் வந்தது. உறக்கத்திலிருந்து விடுபட்டு கண்விழித்தபோது அவன் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் இருந்தான். அருகே பிரபல வைத்தியர் ஒருவர் பயிற்சிபெறும் மருத்துவபீட மாணவர்களுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார். "இந்தநோயாளிக்குவிபத்தின்போதுகாயங்கள் ஏதும் ஏற்படவில்லை. தூக்கி வீசப்பட்டதில் பேரதிர்ச்சிஏற்பட்டிருக்கிறது. இதனால், நீண்டநாட்கள் மயக்கநிலையில் இருந்தார். தற்போது எமது சிகிச்சையின் பின் சுகமடைந்துவருகிறார்".

**அல்லாரை வடக்கு, சி.காசிப்பிள்ளை**

# காத்திடுவீரே சத்தியத்தை



தோல்வியைக் கண்டு துவளாதீர்
துணிந்து நின்றால் வென்றிடலாம்.
ஆல்போல் வாழ்க்கை தழைத்திடுமே!
அகிலாய் எங்கும் மணந்திடுமே!

ஒன்றாய்ச் சேர்ந்து வாழ்ந்திடுவீர்
ஒற்றுமை பலமென உணர்ந்திடுவீர்
பிரிந்து நிற்றல் பலவீனம்
பின்னப்படுதல் அறிவீனம்.

கூட்டாய் மேய்ந்த எருதுகளை
கொல்ல முடியலை சிங்கத்தால்
பாட்டினில் படித்த பாடத்தை
பகுத்தறிவோடு சிந்திப்பீர்!

பழமையில் நல்லதை எடுத்துக்கொள்
புதுமையை அதனில் குழைத்துக்கொள்
செழுமையில் வாழ்வு சிறக்கட்டும்
சாதனை செயலில் பிறக்கட்டும்.

பணவெறி என்றும் நன்றல்ல
பண்புகள் தாமே பெருஞ்செல்வம்
குணமே என்றும் பிரதானம்
குற்றம் களைந்து வாழ்ந்திடுவீர்.

பதவி வெறியில் மூழ்காதீர்
பாவச் செயல்கள் புரியாதீர்
உதவி கேட்டு வருவோரை
உதறித் தள்ள முயலாதீர்.

ஏசுவைப்போல மானுடத்தை
நேசிக்க வேண்டும் எந்நாளும்
புத்தனைப் போல வாழ்வினிலே
போக்கிட வேண்டும் பேராசை.

ஔவைப் பாட்டி சொன்னபடி
முயன்று நல்வழி சென்றிடுவீர்
காந்தி காட்டிய பாதையிலே
காத்திடுவீரே சத்தியத்தை.

# இராட்சத வித்து

உலகிலேயே மிகப்பெரிய வித்தை உற்பத்தி செய்யும் தாவரம்தான் *கொக்கோ டி மெர் பாம்*. இதன் விதை 18 கிலோகிராம் எடையுடையது.(கிட்டத்தட்ட 40 இறத்தல்) இது அண்ணளவாக 4-5 வயதுடைய பையனின் நிறைக்குச் சமமானது. இத்தாவரம் விதை தருமரமாக




முதிர்வதற்கு 80-100 ஆண்டுகள் தேவைப்படுகிறது. பல நூறு ஆண்டுகள் ஆயுட்காலத்தைக் கொண்டதாக இந்த மரம்காணப்படுகிறது.

இதன் விதை வளர்வதற்கு மட்டும் 6 ஆண்டுகள் வரை பிடிக்கிறது. இத்தாவரம் நமது ஊரில் காணப்படும் பனை போன்று ஆண், பெண் தாவரங்கள்வேறுவேறாக உள்ளது. பெண் தாவரம் மட்டுமே விதையை உருவாக்கக் கூடியது. இதுவும் ஒரு பனைவகைத்தாவரம் தான்.

இது மிகவும் போசணை குறைவாகக் காணப்படும் மண்வளத்தைக்கொண்ட சீசெல்ஸ் தீவுக் கூட்டத்துள் இரண்டு தீவுகளில் மட்டும் காணப்படுகிறது.

இத்தாவரம் தாவரவுலகிலேயே சாதனை படைத்த தாவரம் என்று அறியப்படுகிறது. அதாவது தனது போசணைக்காக தனது இறந்த இலைகளில் இருந்து 90 வீதமான பொஸ்பரசை மீள உள்ளெடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**வித்தியாவின் கொலையைக் கண்டித்து நடந்த போராட்டம்பற்றி?**

**இலங்கையிலும் பூமி அதிர்ச்சி வருமாமே?**

**ஜெயாவின் வழக்கு வெற்றிக்கு தொணடர்களின் வேண்டுதலா காரணம்?**

கஜன் — யாழ்ப்பாணம்

**என்னைக் காதலித்த பெண் காதலை விளையாட்டா நினைத்து மறக்கச் சொல்லுறாள் என்ன செய்ய?**

போகிற போக்கைப் பார்த்தால் காதல் விளையாட்டை ஒலிம்பிக்கில் சேர்ப்பார்கள் போலத் தெரிகிறது. அவ்வளவு பிரபல்யம்.

ஜயன் — யாழ்ப்பாணம்

**வித்தியாவின் கொலைக்கு தீர்ப்புக் கூற சரியானவர்கள் பிரபாகரனா? மைத்திரிபால சிறிசேனவா?**

பிரபாகரன் அன்று கொல்வான்
மைத்திரி நின்று கொல்வார்.

கனிராஜ் — கோப்பாய்

**இந்தியா பாகிஸ்தான் படம் எப்படி?**

இந்தியா என்றாலே அதன் பரம எதிரி பாகிஸ்தான் என்பதே நினைவில் வரும். நாயகனும் நாயகியும் போடும் சண்டையை இந்தியா பாகிஸ்தானுடன் ஒப்பிட்டு வெற்றிகண்டுவிட்டார் இயக்குநர். தோல்வி ரசிகர்களுக்குத்தான்.

டிலக்சனா — வவுனியா

**இலங்கையிலும் பூமி அதிர்ச்சி வருமாமே?**

வந்தால் பல கட்டட ஒப்பந்தகாரனின் வண்டவாளங்கள் தண்டவாளம் ஏறுவது நிச்சயம்.

கௌரீஸ் — கரவெட்டி

**ஐ.பி.எல்லில் சிறந்த அணி எது?**

கருத்துக் கணிப்பு சென்னை எனச் சொல்கிறது. சென்னை அணி தன் சொந்த மாநிலத்தை ஆக்கிரமித்ததுடன் பிற மாநிலங்களை நிறையவே ஆக்கிரமித்துள்ளது.

கனகலிங்கம் — நெல்லியடி

**பெண்களின் வாயை எப்படி அடக்கலாம்?**

மாதத்திற்கு இரண்டு பஞ்சாபி அல்லது சாறி. வருடத்திற்கு ஒரு முறை ஏதாவது நகை (அது அட்ஷயதிருதிகையாக இருந்தால் மிக நன்று) வாங்கிக் கொடுக்க எல்லாம் ஓகே...



சரஸ்வத் — ஆர்.துவாரகன் — நெல்லியடி

**வித்தியாவின் கொலையைக் கண்டித்து நடந்த போராட்டம்பற்றி?**

ஓ... இளைஞர்களே உங்களின் உணர்வலைகள் தமிழன் இன்னும் தன்மானம் இழக்கவில்லை என்பதை உணர்த்தி நிற்கிறது.

அதைவிட போராட்டங்களில் உங்கள் உணர்வுகளினூடே ஒன்றைப் புரிந்து கொணடோம். தன் மனைவியை விட மற்றைய பெண்களை தாயாக, தங்கையாக எண்ணுங்கள் என்பதை.

என் தங்கை வித்தியாவே இன்று முதல் உனக்கு இரண்டு சகோதரர்களல்ல ஓராயிரம் சகோதரர்கள் உனக்காக வீதியில் நிற்கிறார்கள் உனக்கு நீதி வேண்டி. அந்த நீதிப் பயணத்தில் அடியேனும் அணிலாய் என் பங்களிப்பை காட்டியது நான் செய்த பாக்கியமே.




கலா — உடுவில்

**பச்சிளம் குழந்தைகளை கடித்துக் குதறும் காமவெறி நாய்களுக்கு பகிரங்க மரண தண்டனை வழங்கவேண்டும் என்கிறேன். தங்கள் கருத்து...?**

மரண தண்டனையைவிட மிக மோசமான தண்டனைகளும் உண்டு. அதை பரிசீலிப்பது மிக நன்று. இந்தியாவில் பாலியல் பலாத்கார குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கம் செய்யும் கோரிக்கையை பரிசீலித்து வருகிறார்கள்.

தனுசியன் — புதுக்குடியிருப்பு

**சூர்யாவின் "மாஸ்" படம் வெற்றி பெறுமா?**

அப்படித்தான் சூர்யாவில் இருந்து இயக்குநர் வரை சொல்கிறார்கள். இதேபோல எதிர்பார்ப்புடன் அமர்க்களமாய் வந்தவன்தான் அஞ்சான் வெளிவந்தபின் பஞ்சான்.

ஜசித் — மாசியப்பிட்டி

**விஜயின் நடிப்பைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சிவாஜி, கமல், விக்ரம், சூர்யா இவர்களின் நடிப்பை நீங்கள் பார்த்ததே இல்லையா?

சு.ஜெயரூபன் — பருத்தித்துறை

**பெண்ணென்றால் பேயும் இரங்குமாமே?**

எட்டுப் பேய்களிடம் சிக்கிய வித்தியாவில் அநதப் பேய்கள் இரக்கம் காட்டவில்லையே?

வேலநந்தன் — புலோலி

**பலரும் வந்து செல்வதால் எம் துயரம் தீரும் என்று நம்புகிறீரா?**

அவர்கள் வருவார்கள் வெற்றிலைப் பெட்டியை எடுத்து வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி சீவலை அதில் சுற்றி குதப்பி துப்பி விட்டு சென்றுவிடுவார்கள். வெற்றிலை சப்பித்துப்பியதற்கு அறிக்கைவேறு. நாம் வெறும்... வெற்றிலை பெட்டிகள்தான்.

க.நாகராசா — சாவகச்சேரி

**சம்மதமில்லாத குற்றங்கள் குறையுமா?**

போதையை ஒழித்தால் போதும்.

ராஜன் — யாழ்ப்பாணம்

**ஜெயாவின் வழக்கு வெற்றிக்கு தொண்டர்களின் வேண்டுதலா காரணம்?**

தொண்டர்களின் வேண்டுதலல்ல தமிழர்களின் வேண்டுதல். ஈழத்தமிழருக்காக குரல் கொடுத்து இன அழிப்புச் செய்த இலங்கை அரசுக்கெதிராக பல பிரேரணைகளை நிறைவேற்றியவர் அம்மா.

வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி

**சந்தர்ப்பம் சறுக்குவது எப்போது?**

சன நெருக்கமான பஸ்ஸில் நாம் பஸ்ஸின் பின் பகுதியில் நிற்போம். அப்போது ஒரு அழகான பெண் ஏறுவாள். என்ன அழகு என்று ஏங்கி ஏங்கி தூரவே இவ்வளவு அழகென்றால்... அருகில் பார்க்க முயற்சித்து மிதிபட்டு நசிபட்டு முன்னுக்கு வந்ததும் அவள் இறங்கிச் சென்று விடுவாளே அப்போது சறுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சகோதரியே...



## இனி ஒரு விதி செய்வோம்...

வித்தியா எனும் விவேக மகளே
உன் உதிரத்தை எடுத்து நெற்றிப் பொட்டாக்கி
உறுதி எடுக்கின்றோம்
அகலிகையே நீ கல்லாக்கப்பட்டாலும்- இந்த
இராமபாதங்கள் ஒரு
இலட்சியம் எடுக்கின்றோம்
இதுவரை இழந்ததில் இறுதி
உயிர் நீதானம்மா
இனி ஒரு சாவுக்கு சந்தர்ப்பமளியோம்
சமுதாய சீரழிவுக்கு முடிவுகட்ட
புங்குடுதீவிலிருந்து புறப்படுகின்றோம்
உனைக் கொன்றழித்த
கயவர்களிடமாவது பொலிஸ்
கடமையைச் செய்யட்டும்
அவர் கொடும்பாவியை
கொளுத்துவதைவிட்டு
அவர்களை பெற்றெடுத்த
தாயைக் கொண்டுவந்து
வீதியில் போட்டுக் கொளுத்துவோம்
தப்பாக வளர்த்த தந்தையை
எப்போது கண்டாலும்
செருப்பாலடிப்போம்
இன்று முதல்
கல்விச்சாலைகளையெல்லாம்
மூடிவிட்டு
உடனடி தீர்வு வழங்கச் சொல்லி
உண்ணாவிரதமிருப்போம்
கள்ளமண் அள்ளச் சென்றவனை
கழுத்தில் சுட்ட பொலிஸாரே
கற்பழித்தவனை நெஞ்சில் சுடு
தீர்ப்புவரும்வரை எம் உறவு பொறுக்காது
உடனே சுடு
காமுகர்களையும் கண்டபடி சுற்றும்
களிசறைகளையும் விட்டு
அவர் பெற்றோரைப் போட்டு புரட்டி எடுப்போம்
பல்சர் வாங்கிக் கொடுத்த தந்தையரின்
பல்லை உடைப்போம்
கஞ்சா வாங்க காசு கொடுத்த
தாயை எரிப்போம்
தமிழன் பெருமை சொல்ல நூறுபேர் போதும்
மிச்சம் இருக்கும் ஆயிரம்
காவாலிகளை காவு கொடுப்போம்
அழிக்கும் தெய்வங்கள் அழிந்து போனது
காக்கும் தெய்வங்களும் காணாமல் போனது
இன்று முதல் நாமே நீதிபதி
இனப்பற்றுள்ள இளைஞரே எழுவோம்
இனி ஒரு விதி செய்வோம்

கரவை எஸ்.கண்ணன்



## வித்தியாவுக்கு நீதி தேவை

புங்குடுதீவாம் புனித பூமியிலே
புத்தகப்பை சுமந்து வந்து
பார்புகழும் கல்விமான்களாய்
பாடம் கற்று பத்திரமாய்
வையத்தில் வாழவென்று
வழிநெடுக செல்லும் -எம்
மாணாக்கர் பல்லாயிரத்தில்
ஒருத்தியாய்
வித்தியா எனும் க(ன்)னியவள்!
காலைக் கதிரவன் வாழ்த்து வழங்கிட
காலெடுத்து வைத்தாள் பள்ளியென
வீதிசென்று முடியுமுன் -அங்கு
விதியென வந்தது கயவர் கூட்டம்
நினைத்தது நினைத்தபடி தானிருக்க
எண்ணிய சில நொடிகளுக்குள்
ஊர் மறந்து உற்றம்
சுற்றம் தனை மறந்து
பாழ்பட்ட கொடிய கயவர் பிடிக்குள்
கதிகலங்கி உலகிழந்து
உயிரிழந்து- அன்று
பெற்றவர் கனவுகளில் மண் விதைத்து
மாற்றான் அவன் மனம் மகிழ
மற்றவர் நெஞ்சமதில் முள் விதைத்து
கணப்பொழுதில் சென்றானே
காலம்தான் பதில் சொல்லுமா?
வித்தியா எனும் விருட்சத்துக்கும்
நீதிதான் வழங்கிடுமா இவ்வுலகம்!!!

கா.பார்மிளா, பருத்தித்துறை

## அட்டம்பன் கொடிகள்


பத்து மாதங்கள் பத்திரமாய் கரு சுமந்து
வித்து விருட்சமாய் உதிரம்தனை ஈந்து
ஈரொன்பதாண்டுகள் கண்மணியாய்க் காத்து
பட்டங்கள் பல பெற்று- பாரில்
சட்டங்கள் ஆளுமென்ற கனவுடனே
திட்டங்கள் பல போட்டு
பெற்றவர், உற்றவர், மற்றவர் யாவரும்
கற்பனை பலதுடன் காத்திருக்க
எட்டப்பன் கூட்டமொன்று
திட்டம்தான் தீட்டியே- மொட்டதனை
முளையிலே கருக்கினவோ?
வெள்ளையுடையுடுத்து
பள்ளிபோன பிள்ளையதை
கொள்ளை மனம் கொண்டு
அள்ளி அணைத்துமே
காமக் கும்பலொன்று
கொள்ளி வைத்ததுவோ
முளையிலே கருகும்
நம் விதைகளை
துளையிடும் கரு வண்டுகளை
களைந்திடுவோம்
நாளைய புலர்விற்காய்- இவ்
உலகதை விட்டே
விழிகள் புனையும் கண்ணீர் காவியங்கள்
அழிவின் பாதைகளை என்றும் மாற்றிவிட
உணர்வின் ஊற்றாய்
உறவின் கீற்றாய்
எழுவோம்... எழுவோம்

மல்லாவிக் கஜன்

## வாடிய பூவே...

புங்குடுதீவு மண் தந்த
ஈழநிலத்து தங்கையே
பதினெட்டு வயதினிலே
பள்ளிக்குப் பக்குவமாய்
நீ நடந்தாய்...
பள்ளிக்கூடம்
போயிற்றுவாறன்
என்று சொல்லி உன்
அம்மாவுக்கு நீ
கையசைத்திருப்பாய்
இதுதான் தங்கையே
உன் இறுதி கையசைப்பு என
உன் அம்மா
நினைத்திருப்பாளோ...
ஈனர்களின் காமவெறியில்
உன் பூ விழிகள்
ஒளி இழந்து
போனதுவோ...
உன் மனதுக்குள்
எத்தனை கனவுகளோ...
இறுதி தருணங்களில்
தங்கையே நீ
பட்ட வலியை
நினைந்து பார்க்கையிலே
நெஞ்சம் அழுகிறது
தேசம் சோகத்தால்
உறைகிறது
உன் பூமுகம் காண
உன் வீட்டுத் தங்கை
வித்தியா என்றால்
உறுதியோடு எழுந்திடு
தமிழ் ஈனமே...
நீதிக்காய் குரல் கொடுக்க...

ஆ.முல்லைதிவ்யன்



## அன்புச் சகோதரியே...!

புங்குடுதீவு மண்ணிற் பிறந்த -என்
அன்புச் சோதரி வித்தியே -நீ
பள்ளி சென்று பட்டம் பெற்று
பெற்ற அன்னையின் உள்ளம் மகிழ வைக்க
எண்ணியே உன் கனவைத் தொடர்ந்தாய்
பாவியிவன்களோ உன் அழகைச் சிதைத்து
உன் கற்பைப் பறித்து
காமக் களியாட்டம் ஆட எண்ணி- உன்னை
ஆள் அரவமற்ற தனிக்காட்டில்
இழுத்துச் சென்று கதறக் கதற-உன்
கற்பைப் பறித்து பிஞ்சுமேனியை
சிதைத்துவிட்டனர்
அன்புச் சகோதரியே-உன்
இறப்பிற்குக் காரணமானவனை
நடுவீதியிலே கண்ணைக் கட்டிவிட்டுக்
கல்லால் எறிந்து அவனது
ஆணவம் அடங்கி
உடல் அணு அணுவாய்ச்
சிதைந்து உருக்குலைந்து
போகும் வரையும்
மக்களை எறியவிட்டு
தண்டனை வழங்க
ஆவன செய்யுமம்மா...

யே.சிவலோஜினி
வயாவிளான் மேற்கு

## காப்போம்

பல திங்கள் சுமந்து
உலகத்தை காட்டும்
பாசமிகு பெண்மையை
பலர் சேர்ந்துகாப்போம்
பயம் தம்மைப் போக்குவோம்!
வீரம் என்று சொல்லி
பிறரை வருத்தாது
சீரும் சிறப்பும் பெற
சிந்தித்து செயலாற்றி
காரிருளைப் போக்குவோம்
கண்ணின் மணியாம்
பெண்கள் இதயமென எண்ணாத
கயவர்களைக் களைந்து
கடமையினை நிறைவேற்றி
மனக்கலக்கந்தனை போக்குவோம்!
தாயும் பெண்ணே
தாரமும் பெண்ணே
தங்கையும் பெண்ணே
அக்காவும் பெண்ணே
அவர்களது கவலையை
வாரீர் போக்குவோம்!

மயிலை
தேவகவி மசா

## கலைந்த கனவுகள்


உன் உடலை சிதைத்து
உன் கல்வியை சீர்குலைத்து
உன் பெண்மையை நாசப்படுத்திய
கொடியவர்களை கல்லெறிந்து- நாம்
கொல்ல வேண்டும்!
செங்காத்து பூமியிலே தென்றலாய்
வாழ்ந்து வந்த எம் சக மாணவி
வித்தியா! இன்று செந்நாய்களுக்கு
இரையாகி விட்டாள்!
இவளின் இந்தக் கொடூர மரணத்திற்கு
நீதி தேவதை தகுந்த தீர்ப்பளிப்பாளா?
இல்லை சரியான தீர்ப்பை எதிர்பார்க்கும்
மாணவச் செல்வங்களை ஏமாற்றம்
கொள்ள வைப்பாளா?
யாரின் கைகளில் இவர்களின்
முடிவு- என்பதை சீக்கிரம்
தெரியப்படுத்துங்களேன்...!
தீர்ப்புக்கள் பிழையெனில்-இன்னும்
எத்தனை வித்தியாவோ?

சு.நிஷானா
யாழ்ப்பாணம்

கவிதைக் கலசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்தில் அறையும் வார்த்தைக் கோலங்கள்!



இது வித்தியாவின்
படுகொலை தொடர்பாக
சகோதரி Shamila
Daluwatte எழுதிய
கவிதையின்
மொழிபெயர்ப்பு

அவர்கள்
மன்னம்பேரியை
பாலியல் பலாத்காரம்
செய்து அவளை
உயிருடன் புதைத்தார்கள்
நான் பேசவில்லை.
ஏனெனில் கிளர்ச்சி
எழுச்சிபெற்றிருந்தது.

பின்னர் அவர்கள்
ககவத்த பெண்களிடம்
வந்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில் நான்
கஹவத்தையைச்
சேர்ந்தவளல்ல.

நுரிவத்த பெண்களிடம்
வந்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில் நான்
நுரிவத்தவில்
வாழவில்லை.

பின்னர் அவர்கள்
வடக்கின் மகளிரிடம்
வந்தார்கள்
நான் பேசவில்லை
கிருஷாந்தி குமாரசாமி,
கோணேஸ்வரி,
இசைப்பிரியா
இவர்கள் என்
சகோதரிகளல்ல.

பின்னர் அவர்கள்
வேறு தோல்
நிறம்கொண்ட
பெண்ணிடம்
வந்தார்கள்
கூட்டாய் எட்டுப்பேர்
விக்ரோறியா
அலெக்ஸ்சாண்டிராவை
பாலியல் பலாத்காரம்
செய்தார்கள்
நான் பேசவில்லை.
ஏனெனில் அவள்
வெளிநாட்டவள்
என்பதால்.

அந்தக் கோரக் கும்பல்
ரீட்டா ஜானை
பாலியல் பலாத்காரம்
செய்தது அவளது உடல்
பதினைந்துமுறை
குத்தப்பட்டு மொடேரா
கடற்கரையில்
வீசப்பட்டது.
நான் பேசவில்லை
ஏனெனில் அவள்
ஒரு இந்தியப்
பெண் என்பதால்.

அவள் மாலை
வேளை
நகைகள் அணிந்து
கடற்கரையில்
நடைப்பயிற்சி செய்து
வினையை தானே
தேடிக்கொண்டாள்.

பின்னர் அவர்கள்
விஜேராமவில்
பெண் ஒருவரை
பலாத்காரம் செய்தார்கள்
நான் பேசவில்லை
ஏனெனில் அவள்
ஒரு விபச்சாரி என்பதால்.

பின்னரும் அவர்கள்
நூற்றுக்கணக்கான
கன்னிகளை பலாத்காரம்
செய்தார்கள்
சம்பையின்
மதுவுடன்
அக்குரசவிலும்
மொனராகலையிலும்
கொண்டாடினர்கள்.
நான் பேசவில்லை
ஏனெனில் எனக்கு
அரசியல்வாதிகளுக்கு
பயம்.

பின்னர் அவர்கள்
லோகராணியை பாலியல்
பலாத்காரம் செய்து
புனித தலமொன்றில்
நிர்வாணமாய் உடலை
வீசியெறிந்தார்கள்
கும்பலாய் அவர்கள்
சரண்யா செல்வராசாவை
பாலியல் பலாத்காரம்
செய்தார்கள்
நான் பேசவில்லை.

இன்று அவர்கள்
வித்தியா
சிவலோகநாதனை
பாலியல் பலாத்காரம்
செய்தனர்
நான் பேசவில்லை
ஏனெனில் அவள்
தமிழிச்சி புங்குடுதீவு
எனும் சிறு கிராமத்தவள்.



இசைப்பிரியா



வித்தியா

“நாம் வாழும் சமூகத்தில், எமது கண்களின் முன்னால் நிகழும் முறைகேடுகளைக் கண்டும் காணாது கடந்து செல்லும். எம் ஒவ்வொருவரின் மனவோட்டத்தையும், முகத்தில் அறைந்தாற் போல் எடுத்துக் கூறும் சகோதரி ஷமிலா தளவத்தவுக்கு, பாராட்டுக்கள். எது நடந்தாலும் அதற்குப் பொருத்தமாகக் காரணம் கற்பித்து ஒதுங்கிப் போகும் மனநிலை கொடியதே என்றாலும், சட்டத்தின ஆட்சி நடைபெறாத ஒரு நாட்டில், “ஆளும் வர்க்கத்தினர் சொல்வது தான் நீதி“, என்று ஆகி விட்ட பின், தன்னை நியாயப்படுத்தப் பொது மகனொருவனுக்கு வேறு தெரிவு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை?

இவை எல்லாவற்றையும் மீறிப பொது மக்கள் வெகுண்டு எழுந்தாலும், அதைக் கூடத் தமக்குச் சாதகமாக்கி அரசியல் லாபம் தேடும் ஒரு சாக்கடைக் கூட்டம் இருக்கின்ற வரையில் ஒரு பொது மகனால் ஒதுங்கிச் செல்வதை விட, வேறு என்னதான் செய்ய முடியும்?

“பிரளயமொன்று ஏற்பட்டு இச் சாக்கடை மனிதர்கள் அழிந்த பின், இன, மத மற்றும் நிற பேத மற்ற மனிதன் புதிதாய்ப் பிறக்க வேண்டும்“, என்பதே எனது வேணடுதலாகும்!” மேலே காண்பது ஒரு வாசகரின் அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனவெளி

சென்ற வாரம் விசுவமடுவைச் சேர்ந்த குடியை முற்றாகவிட்ட ஒருவர் பற்றியகதை வெளிவந்தது. அவர் குருந்தத்தில் அனுமதிக்கப்பட்டார் என்று தவறுதலாகக் குறிப்பிடப் பட்டது. ஆனால் குறித்தநபர் ,தர்மபுரம் வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்பட்டு 14 நாட்கள் தொடர்ச்சியாகச் சிகிச்சையளிக்கப்பட்டுக் குடியை முற்றாகவிட்டார். வன்னி மாவட்டத்தில் கடந்த சிலகாலங்களாக, தர்மபுரம் வைத்தியசாலையில் மதுபாவ னையிலிருந்து விடுபடுவதற்கான புனர்வாழ்வு மேற்கொள்ளப்படுகின்றது. அப்பிரதேசத் திலுள்ள குடிப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தர்மபுரம் வைத்தியசாலையில் அமைக்கப் பட்ட மதுபாவனைக்கெதிரான புனர்வாழ்வு நிலையம் சிறந்த பங்காற்றி வருகின்றது.

மதுபாவனையால் பாதிக்கப் பட்ட குடும்பங்களில்,குடும்பத் தலைவர்களின் குடிபோதைப் பழக்கத்தால் பெரிதும் பாதிக்கப் பட் டது அவர்களின் மனைவிமார் தான். மறுபக்கத்தில் பிள்ளைகளும் பாதிக்கப்படு கின்றார்கள். மற்றும் உறவினர், அயலவர், சுற்றத்தார், வேலைஸ் தலம், சமூகம் என்று பலர் பாதிக் கப்படுகின்றார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்ட பெண் கள் சிலரைச் சந்தித்து பேசிய போது,



**லீலாவின் கதை**

"கலியாணம் கட்ட முதலே குடிபபழக்கம் அவருக்கு இருந்தது. ஆனாலும் நான் ஒருமாதிரி அவரைத் திருத்திப் போடுவன், அம்மாவும் இல்லாமல் வளர்ந்தவர் எண்டு நான் இரக்கப்பட்டு கலியாணம் கட்டிப்போட்டன். கொஞ்சநாள் அறவே குடிக்கவேயில்லை. நானும் சந்தோசப்பட்டன். எங்கடை வீட்டிலை எங்கடை அப்பா குடிக்கிறவர். அதனாலை நான் அவரோடை அப்பாவைச் சேரவிடாமல் பாத்துக் கொண்டன். பிறகு பழக்கம் வந்திடுமெண்டு. ஒரு ஆட்டிறைச்சி வாங்கினனாங்கள். கொஞ்சத்தை அப்பா வீட்டுக்கும் குடுத்திட்டு வாங்கோ எண்டு அனுப்பிவைச்சன். கொண்டு போன மனிசன் கனநேரமாகியும் வரேல்லை. என்னவெண்டு பாப்பம் எண்டுபோனால் மாமாவும் மருமகனும் நிறைதண்ணியிலை இருக் கினம். எனக்கு என்ன செய்யுற தெண்டே தெரியேல்லை. அப்பாவோடை கத்திச் சண்டை பிடிச்சிட்டு வந்திட்டன். அண்டையிலையிரு ந்து மனிசன் திரும்பவும் குடிக்கத் தொடங்கிட்டார். குடிச்சார் எண்டால் பாக்கஏலாது. ஒரே அலட்டலும், சத்தமும், பக்கத்து வீட்டுக்காரரோடை சண்டைக்குப் போறதும், எனக்கு அடிக்கிறதும் எண்டு ஒரே கலவரமாயிருக்கும். கிழமையிலை ஒருக்கால் எண்டாலும் அடிவிழும். மண்டையும் உடைஞ்சுகாயம் இப்பவும் இருக்கும். ஆனாலும் நான் இண்டைவரைக்கும் பக்கத்து வீட்டுக்கும் போறேல்லை. அடிச்சாலும் அடியை வாங்கிக் கொண்டிருப்பன். என்ரை தலையெழுத்துஅதுதான் எண்டு அடியை வாங்கி வாங்கிக் கொண்டேயிருக்கின்றேன். யாரா வது தலையில் என்ன காயம் என்று கேட்டால் கூட நான் சொல்வதில்லை. ஏனென்றால் என்னால் சொல்ல முடிவதில்லை. மற்றவர்கள் யாராவது எங்கள் வீட்டுப்பிரச்சினையில் தலையிடுவதால் அடி மேலும், மேலும் கூடுமேயொழிய குறை வது கிடையாது. எனக்கு இரண்டு பிள்ளைகள், இருவரும் மிகவும் கெட்டிக்காரர்கள். என்னுடைய கணவர் சிலவேளை தானாகவே விட்டுவிடுவார். பின்னர் சிலநாட்கள் கழித்து மீண்டும் தொடங்கி விடுவார். அவர் குடியை விட்ட காலங்களில் பிள்ளைகள் பாடசாலையில் முதலாம் பிள்ளையாக வரு வதும்,பின்னர் குடிக்கும் காலங்க ளில் படிப்பில பின்னுக்குச் செல்வதும் என்று பாடசாலையிலும் நான் முகம் கொடுக்க மிகவும் சிரமப்பட்டேன். என் மனதில் அடி உதை பற்றிய கவலை இல்லை. என் கணவர் அடிப்படையில் மிகவும் நல்லவர். அவர் குடியைவிட்டால் எங்கள் குடும்பம் அமைதியாகவும் சந்தோசமாவும் இருக்கும்."


(லீலா, பெயர் மாற்றப்பட்டுள்ளது)

**சுபாவின் கதை:**

"என்னை சிலவருடங்கள் முன் எனதுகணவர் காதலித்து திருமணம் முடித்தார். நல்லூர் திரு விழாவில் 25 நாட்களில் ஒருநாள் எமது காதல் தொடங்கி யது. அவரது துடிப்பான நடத்தைகள் எனக்குப் பிடிக்கும். திருமணமும் முடிந்தது. வாழ்க்கையையும் ஆரம்பித் தோம். அவர் ஒரு நிறுவனத்தில் பணிபுரிந் தார். நல்லசம்பளம் கிடைத்தது. ஆனால் அவர் சம்பளத்தில் அரை வாசியைத்தான் என்னிடம் தரு வார். ஆரம்பத்தில் நான் ஒன்றும் சொல்லவில்லை. மீதிப் பணத்தை என்ன செய்கின் றீர்கள் என்று கேட்டால் என்ன சொல்வாரோ என்ற பயம் மனதிலிருந்தது. ஏனென்றால் இப்பொழுது அவரில் சில மாற்றங்கள் தென்பட்டன. வேலை முடிந்தும் வீட்டுக்கு வருவதில்லை, என்னோடும் பிள்ளைகளோடும் சரியாகப் பேசுவதில்லை. எப்போதும் எரிந்துவிழுவதும் சண்டை போடுவதுமாக இருந்தார். நான் பொறுமையாக குடும்ப வேலை களை ஒழுங்காகச் செய்தேன். அவருடைய உடுப்புக்களை தோய் த்து வைப்பதுமுதல் அனைத்து வேலைகளையும் செய்வேன். காலப்போக்கில் இரண்டுபிள்ளைகளும் பிறந்தன. அவர் தருகின்ற பணமும் குறையத் தொடங்கியது. ஒருநாள் அவர் சாப்பாட்டுக்கு வந்தபோது அவருக்கு விருப்ப மான உண வைத தயாரிக்க வில்லை. ஏனெனில் கையில் உள்ளபணம் போதவி ல்லை. அவருக்குகோபம் வந்தது. அவர் முதல் முதலாக என்னை அடித்தார். இவர் குடிப்பவர் என் பதை நானும் காதலிப்பதற்கு முன்போ, திருமணத்து க்குப் பின்போ அறிந்திருக்க வில்லை. இப்போதுதான் அவர் அதிக மாகக் குடிக்கத் தொடங்கினார். ஒவ் வொரு நாளும் மத்தியான நேரத்தில் எனக்கு அடி விழுவது வழக்கமாகி விட்டது. பிள்ளைகள் சுற்றிச் சுற்றி ஓடிக் கதறியபோதும் அவர் லேசில் விடுவதில்லை. இதனை எப்படி நிறுத்தலாம் என்று அவரோடு சாதாரண நேரங்களில் கதைத்துப் பார்த்தபோது, அவர் விடுவதாகச் சொல்வார், ஆனால் விடமாட்டார். ஒருமுறை நான் தலைசுற்றிவிழுந்தபோது வைத்தியசாலையில் அனு மதித்து கவனமாகப் பார்த்தார். பிள்ளைகளையும் கவனமாகப் பாத்துக் கொண்டார். நான் சுகமாகி வீட்டுக்கு வந்தேன். அவர் அன்றுமாலை தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். அதில் நடிகர் சிவகுமார் ஒருநீண்ட பேச்சை யாற்றும் போது மனைவி உள்ளவன் கொடுத்து வைத்த வன். மனைவி இல்லாவிட்டால் தான் தெரியும் அருமை என்று ஓரிடத்தில் குறிப்பிட்டார். இந்தப் பேச்சைக் கேட்டதிலிருந்து அவரில் ஒருமாற்றம் தெரிந்தது. வாரத்தில் ஒவ்வொருநாள் எங்கோ சென்றுவந்தார். என்னிடம் சொல்வதில்லை. ஆனால் அவரில் ஒருமாற்றம் தெரிந்தது. அவர் குடிப்பது குறைந்தது. அடிப்பதும் குறைந்தது. மெல்ல மெல்ல அவர் குடியை முற்றாக விட்டார். அன்று மாலை இந்த மாற்றத் தைப் பற்றிக் கேட் டன். அவர் சொன்னார், சிவகுமாரின் பேச்சு என்னை உலுப்பி விட்டது. ஏனென்றால் நீயில்லை என்றால் நான் எப்படிஎல்லாக் காரியமும் செய்யமுடியும். பிள்ளைகளை வளர்க்கமுடியும் தனித்து போய் விடுவேனே ,அதுமட்டுமல்ல நான் உன் னைக் காதலித் தேன் அடித்தது எவ்வளவு பிழை என்றும் உணர்கின்றேன். இப்போது சொல்கின்றேன். நான் ஒவ்வொரு வாரமும் போனது யாழ் போதனா வைத்திய சாலையின் உளமருத்துவப் பிரிவுக்குத் தான்.

அங்குகுடியை விடுவதற்கான குழுச்சிகிச்சைநடைபெற்றது. அதுதான் என்னை மனிதனாக் கியது. நான் அவரைப் பாராட் டியதுடன் எனது கணவர் ஆரம்ப த்தில் இருந்தது போலவே திரும்பவும் கிடைத்தது மகிழ்ச்சி யளித்தது. பிள்ளை களும் சந்தேசத்துடன் இருந்தனர்."

(சுபா,பெயர் மாற்றப்பட்டுள்ளது)



### குடிவெறிநடத்தை

மதுவைக் குடித்த ஒருவர் தன்னை உக்கிரமானவராயும், எதிர்த்துத் தாக்குபவராயும் காட்டிக் கொள்ளலாம். சிலர் மது அருந்தியதும் எப்போதும் கோபாவேசம் கொள்பவர்களா கவோ,வாய்த்தர்க்கம், சச்சரவுகள், தகராறுகள் என்பவற்றில் ஈடுபடுபவர்களாகவோ, எதிர்த்துத் தாக்குபவர்களாகவோ அல்லது அதிகமாக ஆடிப்பாடி மகிழ்ச்சியடைபவர்களாகவோ மாறிவிடுவர்.

இது எப்போதும் இவ்வாறு இருக்கத் தேவையில்லை. மற்றவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை அவர்கள் உணர்வார்களானால், இந்தவகைப்பட்ட நடத்தைகளை அவர்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்திக் கொள்வார்கள்.

குடித்த ஒருவர் உக்கிரமாக அல்லது வன்முறையாக நடந்து கொள்ளும்போது, அவரை அவ்விடத்திலிருந்து அப்பால் அழைத்துச் செல்லலாம் அல்லது மற்றவர்களை அவ்விட த்தைவிட்டுப் போகுமாறு ஆலோசனை வழங்கலாம்.

மதுவின் உத்வேகத்தினால்தான் சமுதாயத்தில் பெரும் பாலான குடும்பச் சண்டைகளும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் ஏற்படுகின்றன. (நன்றி, தமிழ் சமுதாயத்தில் உளநலம்)

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படு கின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,
8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றும் .. இன்றும் .. ஜெயா..

## மீண்டும் பதவியேற்கும் ஜெயா!




ஐந்தாவது முறையாக மகுடம் சூட்டிக்கொள்ளப் போகிறார் ஜெயலலிதா. முதல்வராக இருக்கும்போது இரண்டு முறை பதவியைப் பறிகொடுத்தும் மீண்டும் மகுடம் சூட்டிக்கொண்ட ஒரே முதல்வர் என்கிற வரலாற்று சாதனையைப் படைத்திருக்கிறார். அந்த மலரும் நினைவுகளைப் பார்ப்போம்.

2001 சட்டசபைத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த தருணம் அது. டான்சி வழக்கில் குற்றவாளி என ஜெயலலிதா அறிவிக்கப்பட்டார். இதனால் தேர்தலில் போட்டியிட முடியாது என்கிற சர்ச்சை எழுந்தது. ஆனாலும் ஆண்டிப்பட்டி தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்தார். வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாளில் அதிரடியாக கிருஷ்ணகிரி, புவனகிரி, புதுக்கோட்டை தொகுதிகளிலும் கூடுதலாக வேட்புமனுத தாக்கல் செய்து பரபரப்பைக் கிளப்பினார். எங்காவது வேட்புமனு தள்ளுபடி ஆகிவிட்டால் இன்னோர் இடத்தில் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்பதற்காக இந்த ஏற்பாட்டை செய்திருந்தார்கள். ஜெயலலிதாவின் மனு தள்ளுபடியாகுமா என்கிற பட்டிமன்றம் நடந்துகொண்டிருந்தது. இந்தியாவின் பார்வை முழுவதும் ஜெயலலிதாவின் வேட்புமனு மீது தான் பாய்ந்திருந்தது.

வேட்புமனு தாக்கல் வைபவம் தொடங்கிய நிலையில் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஊர் ஊராகப் போய் பிரசாரம் செய்து கொண்டிருந்தார் ஜெயலலிதா. புதுக்கோட்டை ஏரியாவில் அவர் பிரசாரம் செய்து கொண்டிருந்த அன்றுதான் வேட்புமனு பரிசீலனை நடந்து கொண்டிருந்தது. ஊழல் வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றதால் ஜெயலலிதாவின் நான்கு மனுக்களும் ஒவ்வொன்றாக தள்ளுபடி செய்யப்பட்டன. தகவல் அறிந்ததும் கொதித்துப் போனார் ஜெயலலிதா. அதுவரை டெம்போ டிராவலரில் பிரசாரம் செய்து கொண்டிருந்த ஜெயலலிதா புதுக்கோட்டையில் திடீரென்று திறந்த ஜீப்புக்கு மாறினார். எதற்காக ஜீப்பில் மாறினார் என பலரும் குழம்பினார்கள். திறந்த ஜீப்பில் நின்று 'அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு! இங்கே நீ சிரிக்கும் புன்சிரிப்போ ஆனந்த சிரிப்பு. நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும் நாள் வரும்போது அங்கே சிரிப்பவர் யார்? அழுபவர் யார் தெரியும் அப்போது' என்ற பாடலை உச்சஸ்தாயியில் பாடினார். வேட்புமனு நிராகரிப்புக்குப் பின்னால் தி.மு.க-தான் இருக்கிறது என்கிற கோபத்தில் இப்படிப் பாடியே சாடினார் ஜெயலலிதா.

ஜெயலலிதா போட்டியிடாமலேயே தேர்தலை எதிர்கொண்டது அ.தி.மு.க. தேர்தலில் வென்று ஆட்சியையும் பிடித்தது. எம்.எல்.ஏ ஆகாத ஜெயலலிதாவுக்கு அப்போது கவர்னராக இருந்த ஃபாத்திமா பீவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 'சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்த ஃபாத்திமா பீவிக்கு சட்டம் தெரியாதா? அவர் எப்படி ஜெயலலிதாவுக்குப் பதவி பிரமாணம் செய்து வைக்கலாம்' என எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால் ஜெயலலிதா தலைமையில் மினி அமைச்சரவை அவசர அவசரமாகப் பதவியேற்றது. சில நாட்கள் கழித்து இன்னும் சில அமைச்சர்கள் பதவியேற்றனர். 2001 மே மாதம் பதவியேற்ற ஜெயலலிதாவின் பதவிக்காலம் கொஞ்சம் காலம்கூட நீடிக்கவில்லை. 'எம்.எல்.ஏ ஆக முடியாதவர் எப்படி முதல்வராகப் பதவியேற்க முடியும் எனச் சொல்லி ஜெயலலிதாவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டின் கண்டனத்துக்குப் பிறகு முதல்வர் பதவியை செப்டம்பரில் பறிகொடுத்தார் ஜெயலலிதா. அதன்பிறகு ஓ.பன்னீர்செல்வம் முதல்வர் ஆனார். டான்சி வழக்கின் மேல்முறையீட்டு மனு சுப்ரீம் கோர்ட்டில் நடந்தபோது ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார். அதனால் ஆண்டிப்பட்டி எம்.எல்.ஏ தங்க தமிழ்ச் செல்வன் ஜெயலலிதா நிற்பதற்கு வசதியாக தனது பதவியை ராஜினாமா செய்தார். அதன்படி 2002 பிப்ரவரி 21-ம் தேதி ஆண்டிப்பட்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. ரிசல்ட் 24-ம் தேதி. அதாவது ஜெயலலிதாவின் பிறந்தாள். ஆண்டிப்பட்டி வெற்றியும் பிறந்தநாள் கொண்டாட்டமும் ஒருசேர கொண்டாடித் தீர்த்தார்கள் அ.தி.மு.க-வினர்.

மார்ச் 2-ம் தேதி அமைச்சரவை பதவி ஏற்புக்கு தேதி குறித்தார்கள். ஆனால், அதற்கு முன்பே முதல்வராக இருந்த ஓ.பன்னீரசெல்வம் தனது அமைச்சரவையைக் கலைத்துவிடுவதாகச் சொல்லி அப்போது கவர்னராக இருந்த ராம்மோகன் ராவிடம் ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார்.

ஓ.பி. மந்திரிசபை கலைக்கப்பட்டு ஜெயலலிதா தலைமையில் புதிய அமைச்சரவை பதவியேற்றது. ஆண்டிப்பட்டி ரிசல்ட்டுக்கும் பதவியேற்புக்கும் இடையே ஆறு நாட்கள் இடைவெளி இருந்தது. பொதுத் தேர்தலில் ஜெயித்து 2001-ல் ஜெயலலிதா பதவியேற்றபோது அந்தப் பதவியேற்பு விழா கவர்னர் மாளிகையில் தான் நடந்தது. ஆனால், ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் ஜெயித்து "2002-ல் பதவியேற்றது சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில். இப்போதும் அதே மண்டபத்தில்தான் ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கின்றன. இப்போது போலவே பதவியேற்புக்கு முந்தைய தினம் தலைவர்கள் சிலைகளுக்கு அப்போதும் மாலை அணிவித்தார். அப்போது பதவியேற்றதும் சனிக்கிழமைதான் இப்போதும் அதே சனிக்கிழமைதான். எல்லாமே சொல்லி வைத்ததுபோல நடந்துகொண்டிருக்கிறது.

2002-ல் ஓ.பன்னீர்செல்வம் அமைசசரவை கலைக்கப்பட்டு ஜெயலலிதா தலைமையில் 27 பேர் கொண்ட புதிய அமைச்சரவை பதவியேற்றபோது அன்வர்ராஜா, பாண்டுரங்கன், சரோஜா, சண்முகநாதன், சுப்பிரமணியன், திருநாவுக்கரசு, ராஜேந்திர பிரசாத், வைத்திலிங்கம், சண்முகவேலு ஆகிய 10 அமைச்சர்களின் பதவிகள் பறிபோயின. ஏற்கெனவே அமைச்சராக இருந்த 10 பேர் மட்டுமே பதவியைக் காப்பாற்றிக்கொண்டனர். 13 பேரை புதிதாக அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார் ஜெயலலிதா. அதற்கு முந்தைய ஜெ. அமைச்சரவையில் சில வாரங்களே இருந்த நத்தம் விசுவநாதன் மீண்டும் அமைச்சர் ஆக்கப்பட்டார். பதவியேற்ற பிறகு "நிதி நெருக்கடியில் இருந்து தமிழகத்தை மீட்பதே எனது முதல் பணி" என சொன்னார் ஜெயலலிதா. இப்போதும் தமிழகத்தின் நிதி நெருக்கடி மோசமாகத்தான் இருக்கிறது.

நேற்றைய செய்தியும்கூட இன்றைய வரலாறுதான்!

## முதல்வர் நாற்காலி

ஓ.பி-க்கு கடைசி நாள் ஜெயலலிதா பதவியேற்கும் நாளுக்கு முந்தைய நாள் தான் ஓ.பன்னீர்செல்வத்துக்கு முதல்வராக இருக்கும் கடைசிநாள். 2002 மார்ச் 1-ம் தேதிதான் கடைசி நாளாக இருந்தது. அப்போது முதல்வர் பதவியை ஓ.பன்னீர் செல்வம் ராஜினாமா செய்தபோது ராஜ்ய சபா எம்.பி-யாக இருந்த ஜோதியும் அமைச்சராக இருந்த ஜெயக்குமாரும்தான் கடிதத்தில் கையெழுத்து வாங்கி கவர்னர் ராமமோகன் ராவிடம் அளித்தார்கள்.



அதில் கையெழுத்துப் போட்டபோது ஆனந்த கண்ணீர்விட்டார் ஓ.பி.

## ஜெ. பதவியேற்பு விழாவில் ஸ்டாலின

2002 பதவியேற்பின்போது ஒரு அதிசயம் அரங்கேறியது. அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த பேராசிரியர் அன்பழகனும் எம்.எல்.ஏ. மற்றும் சென்னை மேயராக இருந்த ஸ்டாலினும் பதவியேற்பில் கலந்து கொண்டார்கள். அரசு முறைப்படி அழைப்பு விடுத்ததால் அப்போது கலந்து கொண்டார்கள். ஜெயலலிதாவுக்கு ஸ்டாலின் வணக்கம் வைக்க, பதிலுக்கு ஜெயலலிதாவும் வணக்கம் வைத்தார். "ஸ்டாலின், அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுக்கு எனது நன்றி. யாரையும் பழி வாங்கும் நோக்கம் எனக்கு இல்லை'' என்று அப்போது மீடியாவிடம் பேசினார் ஜெயலலிதா. அந்த அணுகுமுறை இப்போதும் தொடருமா?

2002-ம் ஆண்டு பதவியேற்பு விழாவில் திரையுலகமே திரண்டு வந்து கலந்துகொண்டது. ரஜினிகாந்த் தனது வாழ்த்துச் செய்தியையும் பூங்கொத்தையும் ஜெயலலிதாவுக்கு அனுப்பியிருந்தார். கமல், விஜயகாந்த், முரளி, சத்யராஜ், நாசர், ரம்யா கிருஷ்ணன், விஜயசாந்தி, குஷ்பு, மனோரமா, ரஞ்சிதா, அம்பிகா, ராதா என கோடம்பாக்கமே ஆஜர் ஆகியிருந்தது. அப்போது ஜெயலலிதாவை கட்டித் தழுவி முத்தமிட்டார் மனோரமா.

இப்போது நடைபெறும் பதவியேற்புக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் திரையுலத்துக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்டுச் சிதைக்கப்படும் தமிழ்மக்களின் ஜனநாயக எழுச்சி



தமிழர்களின் போராட்டங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு நிர்மூலமாக்கப்படுவது தான் விதியோ என்று எண்ணத் தோன்றுகின்றது

வரலாற்றுக்காலம் தொட்டே இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. போராட்டங்கள் என்பது மக்களின் மனங்களில் கிடக்கும் உள்ளக் குமுறல்களை வெளிக்கொண்டு வருவதும், தமது ஆற்றாமைகளையும், துயரதினையும்,வெளிப்படுத்துவதுடன் நீதியையும் எதிர்பார்த்து செய்யப்படும் ஒன்றாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மாணவர்களின் போராட்டங்கள் என்பது தான் முதன்மையானது. ஆரம்ப காலங்களில் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவின் போது புறக்கணிக்கப்பட்டமையும், அதன்பால் வெட்டுப் புள்ளிகளும், பிரதேச ரீதியிலான பல்கலைகழக தெரிவும் மக்கள் மத்தியில் அதீத கொதிப்பையும் பாதிப்புக்களையும் உண்டு பண்ணின.

திட்டமிட்டவகையிலான இப்புறக்கணிப்பிற்கு எதிராக மாணவர்கள் மெல்ல மெல்ல போராடத் துணிந்ததன் விளைவே தமிழீழ விடுதலைப்புலிகளின் தோற்றமும் வளர்ச்சியும். இவ்விடத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தம் எதிர்கால இன்பமயமான வாழ்க்கையை தொலைத்து களம் புகுந்தனர்.

பல்வேறு தியாகங்களும், வரலாற்றில் மறக்க முடியாத சாதனைகளையும் புரிந்தனர் அன்றைய மாணவர்களாக இருக்க வேண்டிய இன்றைய மாவீரர்கள்.

அரசாங்கங்கள் திட்டமிட்ட வகையில் தமிழ் இனத்தின் வளர்ச்சியை தடுத்து நிறுத்திக்கொண்டே சென்றிருந்தன. இதை பொறுத்துக்கொள்ள முடியாத அன்றைய காலகட்டத்தில் இளைஞர்களும், மாணவரகளும், துணிந்தொரு போராட்டம் செய்திருந்தனர்.

அப்போராட்டங்கள் புதுவிதமாக பரிணமித்தன. அது தனக்கான தேடு தளங்கள், இருப்பிடங்கள், என்று உருப்பெற்று கடற்படை விமானப்படை தரைபபடை என்றொரு நிழல் அரசு உருவாக்கத்தில் வந்திருந்ததை நடப்பு அரசியலில் கண்டு கொண்டிருந்தோம்.

ஆனால், கூடவே இருந்து குழிபறிக்கும் கூட்டம் தமிழனத்திற்குள் உண்டு என்பதை தமிழ் இனத்தின் வரலாற்றில் இருந்தே கண்டு கொண்டோம். அது சோழர் காலத்தில் இருந்து விடுதலைப்புலிகளின் காலம் வரை உதாரணத்திற்கு அடுக்கிக்கொண்டே போக முடியும்.

விடுதலைப்போராட்டம் இன்று நிர்மூலமாக்கப்பட்டு, சிதைக்கப்பட்டமைக்கு காரணங்களை பல்வேறு ஆய்வாளர்கள் அடுக்கிக்கொண்டு போனாலும், முதன்மை காரணிகளில் நமது சிற்றறிவுக்கு எட்டிய விதத்தில் கூறுவதாயின் இலங்கை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியின் சிறப்பான வழிகாட்டலும், திட்டமிட்டதான தாக்குதல்களும் வன்னியில் நிகழ்த்தப்பட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள் நுழைந்த ஆழ ஊடுருவும் அணியின் அதிரடி நடவடிக்கைகள் தான் இறுதிவரை இலங்கை இராணுவத்திற்கு கைகொடுததிற்று. அதன் செயற்பாட்டை வைத்தே இராணுவம் புலிகளின் தளபதிகள் பலரைக் கொன்றது.

விடுதலைப் போராட்டம் என்பது சடுதியான வீழ்ச்சிக்கு காரணம் போராட்டத்தை வீழ்த்த அரசாங்க தரப்பு செய்த சூழ்ச்சி. தந்திரம், செயற்பாடு. இதுவே முள்ளிவாய்க்கால் வீழ்ச்சிக்கு மிகப்பெரிய காரணி.

2009ஆம் ஆண்டிற்கு பின்னர் அதாவது இந்த ஆறு ஆண்டுகாலமாக யாழில் தமிழர்கள் பெரிதாக ஆர்ப்பாட டங்கள், போராட்டங்களை முன்னெ டுத்திருக்கவில்லை.

ஆங்காங்கே வெளிநாட்டுத் தூதுவர்களும், ராஜதந்திரிகளும் வடக்கிற்கு விஜயம் செய்யும் பொழுது ஒரு குறிப்பிட்ட பகுதியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள். மகஜர் கையளிப்பார்கள். அழுது புலம்பல் களோடு போராட்டம் முடிவடைந்து விடும். இவற்றில் அரசியல்வாதிகளின் பங்களிப்பு என்பதும் மிக மிக குறைவான தாகவே இருக்கும்.

பெரிதான ஒன்றுபட்ட எதிர்ப்பு என்பது இல்லை என்பது தான் உண்மை. 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்கள், மாணவிகள் மாவீரர்களுக்கு விளக்கேற்றியதாக கூறி இரவில் மாணவிகளின் விடுதிக்குள் உள்நுழைந்த படையினர் அங்கு அடாவடித்தனத்தில் ஈடுபட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மறுநாள் யாழ்.பல்கலையில் நடந்த ஆர்ப்பாட்டமும், அதைத்தொடர்ந்து மாணவர்கள் மீது இராணுவமும், பொலிஸாரும் அதிரடியாக தாக்கியமை என்பது அன்றைய நாளில் மீண்டும் பேரினவாத சக்தியின் மறுவடிமாக பார்க்கப்பட்டது.

ஆனாலும், 2009 இற்கு பின்னர் நிகழ்ந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டமாக அதுவே இருந்து வந்தது நேற்றுவரை.

ஆனால், நேற்று அதை உடைத்தெறிந்திருக்கின்றது மாணவி வித்தியாவின் படுகொலைக்கு நீதிவேண்டி நடத்தப்பட்ட. போராட் டங்கள்.

இந்த போராட்டம் இதுவரை காலமும் நடந்த ஜனநாயக வழியிலான போராட்டங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட போராட்டம். புதிய ஆட்சி மாற்றம், புதிய நிர்வாகிகள், என அத்தனையும் மாறியிருக்கின்ற வேளையில் கொல்லப்பட்ட மாணவிக்காக, யாழ் மாவட்ட சமூகம் மாத்திரமல்ல, வடக்கு கிழக்கு, மலையகப் பகுதி எங்கும் ஒரு அதிர்வலைகளை உண்டு பண்ணி போராட்டம் வலுப்பெற்றிருந்தது.

இங்கு நோக்க வேண்டியது, பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக ஆசியர்கள், கல்வியற்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவரகள்,தவிர, ஏராளமான இளைஞர்கள், பெண்கள் அமைப்புக்கள், முஸ்லிம் சமூகத்தினர் என்று யாழ்ப்பாணமே், ஸ்தம்பிக்கும் அளவிற்கு போராட்டம் முழுவடித்தினைப் பெற்றிருந்தது.

இங்கு அதிகம் கவனிக்க வேண்டியது போராட்டத்திற்கு வருமாறு யாருமே அழைப்பு விடுக்கவில்லை. மக்கள் தாமாகவே போராட்டத்திற்குள் குதித்தனர். இது 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் தமிழ் மக்கள் மனங்களில் ஏற்பட்ட மாற்றத்தினை வெளிக்காட்டிருக்கின்றது.

இது ஒருவேளை முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியாக இருந்திருப்பின் என்ன நிகழ்ந்திருக்கும் என்று இவ்விடத்தில் நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. கிடைக்கப்பெற்ற ஜனநாயக வெளியைப்பயன்படுத்தி மக்களும் மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் முடங்கும் அளவிற்கு இப்படியொரு போராட்டம் 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் நிகழ்த்தப்பட்டது என்பது ஆச்சரியம் தான்.

பல்வேறு வேலைப்பழுக்களுக்கு மத்தியில் பாடசாலை மாணவிகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை போராட்டம் படர்ந்திருந்தது. யாழ்.வர்த்தக சமூகத்தினரும் போராட்டத்திற்கு பெருமளவு ஒத்துழைப்பு கொடுத்திருந்தனர.

அன்றைய தினம் கர்த்தால் என்று அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திக்குமுக்காடிய வேளை தான் அந்த துயரம் நடந்தது. திடீரென வன்முறை வெடித்திருக்கின்றது. மாணவர்களினது போராட்டம் அமைதியான வழியில் தான் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

ஆனால், திடீரென கலவரமாக அது மாற யார் காரணம்? நீண்ட நேரமாக அது கலவரமாக மாறும் வரை பொலிஸார் வேடிக்கை பார்த்தவாறே இருந்ததாக ஆர்ப்பாட டத்தில் நின்றவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருக்கும் போது அதற்குள் இருந்த சிலர் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியதாக கூறுகின்றார்கள் இன்னொரு தரப்பினர்.

வேண்டுமென்றே வன்முறையை இதற்குள் கட்டவிழ்த்து விடப்பட்டதாகவே பலர் சமூகவலைத்தளங்களில் தமது கருத்துக்களை தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

பொதுவெளியில் நோக்கில், இது உண்மையான திட்டமிட்ட முறையிலான போராட்டத்தின திசை மாற்றல் என்பது தெளிவாக தெரிகின்றது. ஜனநாயக வழியிலான மக்கள் போராட்டத்தை, மாணவர்களின் பொங்கி எழுகையை திசைமாற்றி, அவர்களை முடக்குவதற்கான ஒரு எத்தணிப்பு என்பதில் ஐயமில்லை.

அன்றைய கலவரத்தின் பின்னர் கிடைத்த செய்தியின் படி மாணவி குறித்த வழக்கு அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட வுள்ளதாக தெரியவருகின்றது.

ஆக வழக்கினை மாற்றி குற்றவாளிகளை தப்பிக்க வைப்பதற்கான இன்னொரு சூழ்ச்சியாகவே இது மாறியுள்ளதாக ஊகிக்க முடிகின்றது.

நீண்ட இடைவெளியின் பின்னர் தமிழர தரப்பு அனைவரும் ஒன்றிணைந்து ஒரே அணியில் போராடியது வித்தியாவின் படுகொலையில் தான். ஒரு பிஞ்சு சிதைக்கப பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றாள்.

அவள் தமிழ் மக்களை இந்த போராட்டத தின் மூலம் மீண்டும் ஒன்றினைத்துவிட்டுத் தான் சென்றிருக்கின்றாள். ஆனால் அதற்குள் ஒற்றர்களின் நுழைவு இந்த போராட்டத்தினை வேறு திசைக்கு மாற்றி இன்று கலவரத்திலும், கைதுகளிலும் கொண்டு வந்துவிட்டிருக்கின்றது.

மாணவர்களும், இளைஞர்களும் நிதானமான முறையில் போராட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொண்டிருந்தனர். ஆனால் திடீர் தாக்குதல் சம்பவம் எங்கிருந்து வந்தது என்பதை ஆராயவேண்டியது இப்பொழுது தேவையான ஒன்று.

தமிழர்கள் ஒவ்வொரு போராட்டத்திலும் தோற்றுப்போவதும் நீதிகிடைக்காமல் தவிப்பதும், தம்மை சூழவுள்ளவர்களை சரியான முறையில் இனம் காணாமல் தவறவிட்டது அன்றி வேறு எதுவும் அல்ல.

இனியாவது நிகழ்த்தப்படும் போராட்டங்களில் கயவர்கள் யார்? அவர்கள் என்ன நோக்கத்திற்காக உள் நுழைகின்றார்கள் என்பதை அறிந்து செயற்படவேண்டியிருக்கின்றது.

எங்களை அழிப்பதற்கென்றே எங்களில பல கூட்டம் குறியாய் அலைகின்றன. அவற்றை மாணவர்களும், இளைஞரகளும் சரியாக இனம்கண்டு கொள்ளவேண்டும். ஏனெனில் மாணவர்களையும், இளைஞர்களையும் இலகுவாக உசுப்பிட்டு வேடிக்கை பார்க்கலாம் என்று அந்த கூட்டம் அதீத நம்பிக்கையில் இருக்கின்றது.

அதற்கு நாமும் இடம்கொடுக்காமல் ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் தமிழர்களின் எல்லா போராட்டங்களும் தோல்வியில் தான் முடிந்ததாக வரலாற்றில் எழுதப்படும்.

**எஸ்.பி.தாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத கோலம்



## சிறுகதை

முகில் கூட்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டு வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தன. அவை, வைகாசிக் காற்று எழுந்துவிட்டதை உணர்த்திக் கொண்டிருந்தன. எதுவும் நிரந்தரமில்லை. எங்கும் யாவற்றிலும் மாற்றம் மட்டும் தான் நிரந்தரமாயுள்ளது. ஆனால், என் வாழ்வில் மட்டும் ஏன் மாறாத சோகமும் கண்ணீரும். அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டாள். அடக்க முடியாமல் அழுகை சட்டென்று வெளியே வந்துவிட்டது. கைக்குட்டையால் வாயைப் பொத்தி மெல்ல மெல்ல அதனை அடக்கினாள். கண்களில் கண்ணீர் நிறைந்து பார்வையை மங்கலாக்கியது. மெல்லக் கண்களை கசக்கித் துடைத்துக்கொண்டாள். பழைய நினைவுகள் அவள் மனதில் நிழலாடின.

மங்கையர்க்கரசியம்மா கூறியவை... "ராசன் உனக்கு கொஞ்சம் கூட பொருத்தமில்லை." நண்பர்கள் கூறியவை "அவன் படிப்பறிவில்லாதவன்; குடிகாரன், ஏமாற்றுக்காரன். நீ பாழாய்ப் போகப் போறியே?" வதனி ரிச்சர் கூட "நீர் பேசாமல் படியும் இப்போது கல்யாணத்துக்கு என்ன அவசரம்!" எல்லோருடைய அறிவுரையையும் மீறி அவனை அவள் திருமணம் செய்ய சம்மதித்தாள். அதற்கான காரணம் ஒன்றேஒன்றுதான். அது தான் விரும்பும் குதிரையை விட தன்னை விரும்பும் கழுதையை மணப்பது மேல் என்ற முதியோர் வார்த்தையை நம்பித்தான். விருப்பத்துடன் ஒருவன் வீடு தேடிவந்து கேட்கிறார்; மறுப்பதா ... பின்பு இப்படியொரு சந்தர்ப்பம் அமையுமா ..? எல்லோரும் சொல்வார்களே திருமணத்தின் பின் யாரானாலும் திருந்திவிடுவார்களென்று. அதை நம்பித்தான்.

ஆனால், எல்லாமே அவள் நினைத்ததற்கு மாறாகத் தான் நடந்தது. ராசன் கணவனாக வந்த நாள் முதல் அவள் மெல்ல மெல்ல வெறுமையாக்கப்பட்டாள். அதாவது வறுமையாக்கப்பட்டாள். அவளது கழுத்து, காது, விரல்கள் எல்லாவற்றிலும் இருந்தவை யாவும் காலியாகிவிட்டன. வீட்டில் நல்லதாய் இருந்த பண்டம் பாத்திரங்கள் கூட சாராயம் விற்கும் வீடுகளுக்குச் சென்று விட்டன.

தினமும் இதையெல்லாம் பார்த்து வேதனையடைந்த அவளாள் எதையும் பேசித்தீர்க்கவும் முடியவில்லை. ஏனெனில் ராசன் ஒரு பொழுதும் நிதானத்தில் இருக்கவில்லை. அப்படி மிஞ்சிப் பேசினாலும் அது வன்முறையில்தான் வந்து முடிந்தது.

அவள் கண்களில் நீர் நிறைந்து கன்னங்களில் வழிந்தது. அவளால் பழைய நினைவுகளிலிருந்து மீளமுடியவில்லை. விருப்பமில்லாத அந்த கடந்த கால நிலைமைகள் மீணடும் மீண்டும் மனதில் முட்டி மோதின ...

இப்படித்தான் ஒரு நாள் ... இந்த வேதனைகளுக்குப் பழக்கப்பட்டுப் போக முடியாமல் எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு கைகளை வீசி நடக்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. தேவையில்லாத ஒன்றைச் சுமப்பதாகவே அவள் பத்துமாதம் சஞ்சையையும் சுமந்தாள். ஆனால், அவன் பிறந்த பிறகு, அவளுக்கு இருந்த ஒரே ஆறுதலாக சஞ்சையே இருந்தான். குடிகாரக் கணவனை நம்பி வாழ்க்கையை நடத்த முடியுமா?

சஞ்சை பிறந்த பலனோ என்னவோ அவளுக்கு ஆதார வைத்திய சாலையில் அந்த குடும்பநல உத்தியோகத்தர் வேலை கிடைத்திருந்தது.

இப்போதெல்லாம் ராசன் அவளது சம்பள தேதியன்று மட்டும் குடிக்காமல், நல்ல கணவனாக காத்திருப்பான். அவளுக்கும் தெரியும் இது பாசவேஷம் அந்தச் சம்பளத்தைப் பறித்து வாங்கும் வரைக்கும்தான் என்று. அதைப் பறிப்பதற்கு சகலவிதமான நுட்பங்களையும் அவன் கையாள்வான். கொடுக்காவிட்டால், வீடே இரண்டுபட்டுவிடும். ஆனால், தற்போதெல்லாம் அவள் அந்தப் பிரச்சினையை சமாளிக்கக் கற்றுக்கொண்டுவிட்டாள். மனதின் சுமை பெருமூச்சாகக் கிளர்ந்து வெளிப்பட்டது.

கையிலிருந்த ஒருசோடி விலை உயர்ந்த செருப்புப் பார்சலைப் பார்த்தாள். சிறிய கறுப்புச் செருப்புகள். தன் பிள்ளை செருப்பு செருப்பு என்று கேட்கத் தொடங்கி இரண்டு மாதங்களாகிவிட்டது. இந்த மாதச் சம்பளத்தில் தான் இதனை வாங்க முடிந்தது ... "அம்மா செருப்புப் போடாமல் பள்ளிக்கூடம் வரவேண்டாம்" என்று ரீச்சர் சொல்லீட்டா.

"அம்மா...! செருப்புப் போட்டுக் கொண்டு போகேல்லையெண்டால் ரீச்சராக்கள் வகுப்புக்கு வெளியில நிக்க வைப்பினம் அம்மா ..."என்று விக்கி விக்கி அழுதழுது சஞ்சய் சொல்லும் போதெல்லாம் ... அவள் "வாங்கித் தாறன் ஐயா ...!" என்று அவள் சொல்லுவாள். அவளின் வார்த்தையை நம்பி குழந்தை அந்த நிமிடமே மகிழ்வடைவான். அந்த மழலைச்சிரிப்பு அவளை வெம்பவைத்துவிடும் ...சிந்தித்தவாறே, உடலை வேகவைத்துவிடும் அந்த நெருப்பு வெயிலில் வீட்டை நோக்கி நடந்து வந்தவளுக்கு வீட்டுக் கதவருகே சஞ்சை நிற்பது தெரிந்தது. பாடசாலை முடிந்த பிறகு அம்மம்மாவுடன் தான் வீட்டில் நிற்கிறவன் ... இருந்தாலும் அவனைக் கண்டவுடன்தான் வதனிக்கு நிம்மதி. அந்த ஒழுங்கை ஒருநேரம் கலகலப்பாகவும் ஆட்கள் நடமாட்டம் கூடியதாகவும் இருந்தது. போர்க்கால நிலைமைகளுக்குப்பின் இப்போது ஒரு சில குடிமனைகள்தான் இருந்தன.

"அம்மா செருப்பு வாங்கினீங்களா ..? அம்மா செருப்பு வாங்கினீங்களா ...?" முகம் செந்தாமரைபோல மலர ஓடிவந்த சஞ்சய் செருப்பு பார்சலை பறித்து துள்ளிக் குதித்தான். அவனது சந்தோசத்தில் மனம் மகிழ்ந்துபோய் உள்ளே வந்தவளை ராசன் கோபாவேசத்தோடு வரவேற்றான் சம்பள நாளை அவள் மறந்தாலும் அவன் மறக்கமாட்டானே. அனைத்தும் அடங்கி, ஒடுங்கி, ஒடிந்துபோனாள் வதனி. ஆனால், மெல்ல மெல்ல பிரச்சினையை எதிர்கொள்ள தயாரானாள்.

செருப்புக் கிடைத்த சந்தோசத்தில் துள்ளிக் குதித்த சஞ்சய் ராசனின் வெருட்டலில் அடங்கினான். "எடேய் அங்கால போடா..."

...இது ராசனின் பெரும் பொழுது களியும் கூடம் "... எடேய் பிள்ளையின்ரை செருப்பைக் கொண்டுவந்து தந்திட்டு, கள்ளுத்தா ... என்டால் நானென்ன செருப்புக்கடையே போடுறது ..." காசைத் தந்திட்டு குடி அல்லது எழுப்பிப்போ ... ராசன் விருட்டென்று எழுந்தான் அவனது உடம்பெல்லாம் கோபத்தால் நடுங்கிக் கொண்டிருநதது. ஆத்திரமிகுதியால் செந்தமிழ்கள் வாயிலிருந்து புறப்பட்டன. கால்கள் தடுமாறின ... கைகள் பதறின.

அந்த சிறிய கறுப்பு நிற பளபளப்பான செருப்புச் சோடியை, தான் பெற்ற சின்னவனிடமிருந்து பறித்திருந்தான். இப்போ கசிப்புச் சின்னவனின் கேலிச்சிரிப்புக்கு ஆளாகி, ஆவேசந்தாளாது நடந்தான் ... சைக்கிளைத் தள்ளியபடி வேகமாக நடந்தான். யார் யார் மேல் என்றில்லாமல் எல்லாவற்றின் மீதும் அவனுக்குக் கோபமாக இருந்தது. நடந்து செல்லும் செம்மண் தரையின் மீதும் கோபமாக இருந்தது. காலால் உதைத்துத்தள்ள வேண்டும் போன்ற உணர்வு எழுந்தது. கைக் கெட்டியது வாய்கெட்டாமற் போன ஆற்றாமை மனதைக் கிளறியது. வீடு நெருங்க நெருங்க கோபம் இன்னும் பீறிட்டுடெழுந்தது.

"அம்மா ...! அப்பா செருப்போட திரும்பி வாறார்." சஞ்சைய் தனது புதிய செருப்புகளை தகப்பன் மீண்டும் கொண்டு வருவதைக் கண்டு கண்கலங்கி தாயிடம் ஓடினான். வதனி ஆத்திரத்துடன் எழுந்தாள்.

"இந்த மனுசனுக்கு வாழ்க்கை ஒரு கேடா! பிள்ளையின்ரை செருப்பை விற்றுக் குடிக்கத் திரியுறவருக்கு குடும்பம் எதற்கு? மனைவி பிள்ளைகள் எதற்கு? வீடெதற்கு? வாசல் எதற்கு? இண்டைக்கு நான் யாரெண்டு காட்டுறன்."என்று சத்தமிட்டவாறு, கழுவிக்கொண்டிருந்த உடுப்புகளை அப்படியே விட்டுவிட்டு, கிணற்றடியிலிருந்து முற்றத்துக்கு விரைந்தாள்.

வீட்டுக் கதவினருகே நின்ற சஞ்சை தகப்பனை நோக்கி ஓடிச்சென்றான். மகனைக் கண்டதும் ராசனுக்கு ஆத்திரம் குமுறிக்கொண்டுவந்தது. "ஒரு போத்தல் கள்ளுக்கு வழியில்லாமல் நான் இருக்கிறன். உனக்கு செருப்பு ஒரு கேடா ..." வாயில் தகாத வார்த்தைகள் கிளர்ந்தெழுந்தன. "அப்பா ... என்ர செருப்பைத்தா... அது அம்மா வாங்கித் தந்தது. என்ர செருப்பு." சஞ்சை அவனது கைகளில் தொங்க முயன்றான். "சீ ... நாயே ...! அங்கால போ ..." என்று உதறித் தள்ளிவிட்டான். கீழே விழுந்தான் சஞ்சை. நல்ல வேளையாக அடிகிடி ஏதும் படவில்லை. "ஒரு ரூபாய் எனக்குத் தரேலாது ... செருப்பாம் ... செருப்பு.

உழைக்கிறனென்ட திமிர் ...!"

"நீரும் ஒரு அப்பனா ... பிள்ளையை ஏன் தள்ளி விழுத்திறாய்...!" ஆக்குரோசத்துடன் ஓடிவந்தாள் வதனி.

ராசனுக்கு அவளைக் கண்டதும் தலை எகிறியது. பற்களை கடித்தபடி ஒருமுழி முழித்தான். மிருகத்தனமாக அவனது முகம் இருந்தது. காசு தரேலாது கதைக்கவந்திட்டியோ ... இரடி ... உனக்கு நான் காட்டுறன் வேலை ..." தகாத வார்த்தைகள் சரமாரியாக வாயிலிருந்து கிளம்ப சைக்கிளை ஒரு புறம் தள்ளிவிட்டு குழந்தையின் செருப்புச் சோடியை மளமளவென பிய்க்க முனைந்தான் ... அது புதுச் செருப்பாகையால் ... அவ்வளவாக அவனால் பிய்க்க முடியவில்லை. தள்ளிவிட்ட சைக்கிள் முள்வேலியுடன் சாய்ந்தது. ராசன் செருப்பைக்கொண்டு பக்கத்துப் பற்றைக்காணியை நோக்கி எட்டி அடிவைத்து ஓடினான். அந்தக் காணி குடிமனையற்றது. பலவருடங்களாக யாரும் உள்ளே போனது கிடையாது. புதர் மண்டிக்கிடந்தது. சாய்ந்து கிடந்த அந்த காணியின் எல்லைப்பூவரசு மரத்தில் ஏறினான் ராசன். சஞ்சை "அப்பா ... அப்பா ..."என்று ஓடிவந்து கொண்டிருந்தான்.

வதனி அழுகையும் கோபமுமாக வீட்டுக் கதவருகே நின்று கொண்டிருந்தாள். ராசன் அந்தப் புதிய செருப்புக்களை அந்தப் புதர்க்காணிக்குள் விட்டெறிந்தான்.

சஞ்சை கண்ணீர் பொங்க தாயை நோக்கி அழுது புலம்பியபடி திரும்பி ஓடினான். ராசனின் முகத்தில் ஒரு வெறியும் வெற்றிக்களிப்பும் புலர்ந்தது. தள்ளாடியபடி நின்று, மரத்தின் மேலிருந்த காலை தரையில் வைத்தான் கால் சற்று தடுமாற, விழுந்து விடக் கூடாதே என்று எண்ணி பற்றைக் காணிப்பக்கமாக மற்றக்காலை வைத்தான்.

பாவம்! ராசன் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அங்கு ஐந்து வருடங்களாக ஒரு மிதிவெடி, இரத்த உருசி பார்ப்பதற்காக காத்திருக்கிறது என்று.

மறுகணமே ராசனது இரண்டு கால்களும் அந்த இடத்திலேயே சிதைவடைந்தன.

சஞ்சையினது செருப்பை விற்கச் சென்ற ராசனுக்கு செருப்பு போட காலே இல்லாமற்போயிற்று.

நாட்களும் உருண்டோடின. வதனியின் வாழ்விலும், காலங்கள் மாறின ... ஆனால், அவளின் சுமை நிறைந்த கோலம் மாறவில்லை ... தன்பிள்ளை "அப்பா ...!" என்று ஆசையோடு அழைப்பதற்கு அவனுக்கு அப்பா வேண்டும். இதுதான் இப்பொழுது அவளின் பிரார்த்தனை.

பா.மதனபாரதி,
அல்வாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
திரைப்படம்: குலேபகாவலி
பாடியவர்: ஜிக்கி, ஏ.எம். ராஜா
இயற்றியவர்: தஞ்சை ஏ. ராமையாதாஸ்
இசை: மெல்லிசை மன்னர்கள் எம்.எஸ். விஸ்வநாதன், டி.கே. ராமமூர்த்தி




ஆஆ... ஆஆஆஆஆஆஆ ஆஆஆ..
மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா
மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா

பன்னீர் தெளிக்க பனி பெய்யுமே
பசும்புல் படுக்கப் பாய் போடுமே
பன்னீர் தெளிக்க பனி பெய்யுமே
பசும்புல் படுக்கப் பாய் போடுமே

மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா

ஆஆஆ ஆஆஆ ஆஆஆஆஆ

பாலூட்டும் நிலவு தேனூட்டுமே
பாடும் தென்றல் தாலாடுமே
பாலூட்டும் நிலவு தேனூட்டுமே
பாடும் தென்றல் தாலாடுமே
புன்னை மலர்கள் அன்பினாலே
புன்னை மலர்கள் அன்பினாலே
போடும் போர்வை தன்னாலே
போடும் போர்வை தன்னாலே

மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா

ஆஆஆ ஆஆஆ ஆஆஆஆஆ

கனியிதழ் காதல் பசி தீர்க்குமே
காண்போம் பேரின்பமே
கனியிதழ் காதல் பசி தீர்க்குமே
காண்போம் பேரின்பமே
வானிலும் ஏது வாழ்விது போலே
வசந்தமே இனி எந்நாளும்
வானிலும் ஏது வாழ்விது போலே
வசந்தமே இனி எந்நாளும்

மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா
மயக்கும் மாலைப் பொழுதே நீ போ போ
இனிக்கும் இன்ப இரவே நீ வா வா
இன்னலைத் தீர்க்க வா

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
நவரட்ணம் இரவீந்திரா, காளி கோவிலடி தாவடி வடக்கு,எஸ். தனுபன், கட்டுவான், தெல்லிப்பழை, மயூரன் டெறி, யாழ்ப்பாணம், ஆர். கங்கா, புத்தூர், ஜே. துஷ்யந்தன், அளவோடை, வேல்சுபிதா, புளியம்பொக்கணை, ரி.தர்சியா, வயாவிளான், சோபன், சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.

அன்பு வாசகர்களே !

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தாங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பன்வற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# ஈழத்து சினிமா

## காதல் என்ன விளையாட்டாப் போச்சா- குறும்பட விமர்சனம்




காதலிக்க ஆரம்பிக்கும்போது இருக்கும் சுவாரசியம் ஒரு கட்டத்தில் சுவாரசியம் அற்றுப்போய் நீர்ந்து போகின்றது. இருவரில் ஒருவர் காதலை முறித்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. காதலிக்கின்றார்கள் சலிப்புத்தட்ட முறித்துக்கொண்டுவிட்டு விலகுகின்றனர், காதலென்பது விளையாட்டாக போய்விட்டது இதுதான் எஸ்.ஏ. நிலான் எழுதி இயக்கிய குறும்படத்தின் மையக்கரு.

கொலைகள் தொடர்ச்சியாக நடக்கின்றன . துப்பறிதலும் இன்னொரு பக்கம் நடக்கின்றன. முடிவில் யார் கொலையாளி கொலைகள் எதற்கென்ற பதிலோடு குறும்படம் முடிவுக்கு வருகின்றது. இயல்பாக நேர்கோட்டில் பயணிக்கும் கதை. ஒவ்வொரு பாத்திரங்களை சித்தரிக்கும் போது உளவியல் பின்புலங்களும் அது சார்ந்த தர்க்ககட்டமைப்புகளும் உருவாக்கப்படவேண்டும்.

இவைகள் இல்லாமல் வெறும் காட்சி யூடகமாக சித்தரிக்கும்போது முழுமையற்ற விலத்தப் பட்டஅபத்தப்படைப்பாக உருவாகும்.

ஆரம்பக் காட்சியில் கொலை செய்யப்பட்டவரின் உடலை புகையிரதநிலையத்தில் பார்க்க பொலிசார் பிளட்போம் பாய்ந்து வருகின்றனர். அங்கே அவர்கள் உரையாட ஆரம்பிக்கும் உரையாடல் வடிவங்கள் அபத்தமாக ஆரம்பிக்கின்றன. கொலையை துப்பறியும் பாத்திரமாக அமைக்கப்பட்ட பாத்திரம் சார்ந்த சித்தரிப்புகள் ஆரம்பக்கட்டத்தைக் கூடதாண்டவில்லை. நடைமுறையில் கிரைம்பிராஞ்ஜில் பொலிசாக இருப்பவர் அடிக்கடி கொலைகளையும், இரத்தத்தையும் பார்ப்பவர்.

அவ ருக்கு கொலை ஒன்று நடந்துவிட்டது என்று அறிவிக்கும் போதுஅவர்"ஓஷிட்.."என்றுஅடித்துக் கொண்டு பதற்றப்பட போவதில்லை. அப்படியா இதோ வாறன் என்று இயல்பாகஎதிர் கொள்வார்.

கொலைகள் செய்யப் பயன்படுத்தப்பட்ட இதயவடிவம் சார்ந்த உலோகத்தினை பத்திரப்படுத்துகின்றார்கள். அதனை மொட்டை மாடியில் கொலையைப் பற்றி உரையாடும் போது ஷோப்பிங் பையினுள் இருந்து எடுக்கின்றனர் எத்தனை பெரியஅபத்தம் இது.

இரண்டாவதுகொலையும் நடந்த பின்கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட இரண்டு கூரிய உலோகத்தகடுகளை பொருத்திப் பார்க்க ரொம்பவே முயல்கின்றனர் பொலிஸார். ஒத்தியல்பான இரண்டு வடிவங்களை பொருத்திப் பார்க்க நுண்ணியலாக துப்பறிய வேண்டிய பொலிசார் எடுத்துக் கொள்ளும் நேர இடைவேளைகள் அதிகமாக இருக்கிறது.

தொடர்ச்சியாக நடைபெறும் கொலைகளுக்கான முடிவினை அறிந்து அமமுடிவினை பொலிஸ் பாத்திரம் ஆதரிக்கின்றார் என்று சொல்லப்படுவது அபத்தத்தின்உச்சம். பிளாஷ் பேக்கில் சொல்லப்படும் காட்சிகளில் அதற்கான உருக்கும் வலிமையில்லை. கருத்தியல் ரீதியாக படத்தின்மையம் காதலில் ஏமாற்றப்பட்டவர்கள் ஏமாற்றியவர்களை கொல்ல வேண்டுமென்று நிறுவ எத்தனிக்கின்றது.

படத்தின் இறுதியில் வரும் காட்சித்துண்டு காதலை காதலியிடம் முன்மொழிய இருந்த நபரிடம் ஒருவர் காதல் இப்ப விளையாட்டா போச்சு ஜோசித்து காதலிங்க என்று உபதேசம் கொடுகின்றார். இந்தப் பாத்திரத்தில் நடித்திருப்பது இயக்குனர் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

நடிப்புசெயற்கைத்தனமாக நிறைந்திருக்கின்றது. நாயகன் நாயகியை கன்னத்தில் அறையும் காட்சியைத் தவிர நடிப்பின் பாவனைகள் மிளிருமிடமில்லை. ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் இசைதோராயமாகக் காட்சிகளோடு பொருந்த எத்தனிக்கின்றன. குறும்படங்களை மீண்டும் மீண்டும் உருவாக்குவதன் மூலம்தான் நெறியாள்கையைக் கற்றுக்கொள்ள முடியும்.

**அனோஜன் பாலகிருஷ்ணன்**

# தமிழர்க்குத் தலைகுனிவு!



**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

மூபத்து ஆண்டுகளாய் மூர்க்கர் எமக்கிழைத்த
ஆபத்து மீண்டும் எம் அரும்மண்ணில் தோன்றியதோ?
தாபத்தால் காமம் தலைக்கேறி நாய் ஒத்தோர்
பாபத்தைச் செய்தார்கள் பதைக்கிறதே நெஞ்செல்லாம்.

மாற்றார் செய் கொடுமைகளை மண்ணில் சகித்திருந்தோம்
வேற்றார் தம் செயலென்று வெம்பித் தணிந்திருந்தோம்
நேற்றிந்த வரலாறு நீங்கிற்று என நினைக்க
கூற்றொத்த கொடியர் பலர் கூடிச் செயல்புரிந்தார்.

மெல்ல இதழ் விரித்து மேதினியில் மலர்ந்த ஒரு
கள்ளமில்லாப் பூவை கயவர்களும் கள்வெறியில்
உள்ளம் நடுங்க உலகமெலாம் விதிர் விதிர்க்க
அள்ளிச் சிதைத்து அசிங்கங்கள் செய்தார்கள்.

உறவென்றறிந்திருந்தும் உண்மத்த நாய்கள் அவை
விறகாய் நினைந்தந்த வெண்மலரைச் சிதைத்தனவாம்
நறவில் மதி மயங்கி நமைக் கேட்க யாரென்று
தரமற்ற நாயொத்தோர் தம்காமப் பசிதீர்த்தார்

கல்விக் கண் திறக்கும் கனவோடு சென்றவளை
அள்ளிச் சென்றந்த அசிங்கம் பிடித்தவர்கள்
துள்ளித் துடிதுடிக்க துன்பத்தணல் ஏற்றி
கொள்ளிக்களித்தார்கள் கொடுமை பல செய்தார்கள்.

தமிழர்க்குத் தலைகுனிவு தரம் மிகுந்த ஈழத்தின்
அமிழ்தொத்த பண்பாட்டின் அழகுக்குத் தலைகுனிவு
நிமிர்ந்துலகில் நீதிக்கு நேர் நின்று குரல் கொடுக்கும்
எமதினத்தின் குன்றாத இயல்புக்குத் தலைகுனிவு.

புலம்பெயர்ந்து ஓடிப்போய் பொன்னாகக் கொணர்ந்திங்கு
நலங்கள் பல செய்வார்கள் நம்மவர்கள் என நினைந்தோம்
விலங்காக மாறித்தன் வெறும் பணத்தால் நீதியதை
துலங்காத வழி செய்யும் துஷ்டனையா எதிர்பார்த்தோம்?

உலகெல்லாம் சென்றங்கு ஒன்றாகக் குரல் கொடுத்து
நலம் இங்கு சேரவென நாளுந்தான் பாடுபடும்
உலைகின்ற நெஞ்சங்கள் ஒருவனவன் செயலதனால்
தலைகுனிந்து நின்றால் இத்தரணியது சிரிக்காதா?

தாபத்தால் கீழோர் செய் தரமற்ற செயலதனின்
ஆபத்தால் நெஞ்சம் அதிர்ந்து சிதைந்தாலும்
கோபத்தால் நாம் எங்கள் கொள்கை பிழையாது
பாபத்தை நீதியினால் பறித்திடலே நெறியாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# 36 வயதினிலே

## திரைவிமர்சனம்



கல்லூரியில் படிக்கிற காலத்தில் எதையும் துணிச்சலுடன் எதிர்த்துப் போராடுகிற பெண், திருமணத்துக்குப் பிறகு குடும்பம் குழந்தை என்றாகி தன்னையே தொலைத்து விடுகிறார்.

ஒருகட்டத்தில் தன்னை இழந்து விட்டதை உணரும் அந்தப்பெண் 36 வயதினில் மீண்டும் தன்னைக் கண்டடைவது எப்படி? என்பதுதான் இந்தப் படம்.

வேலைகேட்டுப் போன இடத்தில் கொட்டாவி விட்டுக்கொண்டு அசிரத்தையாக உட்கார்ந்திருக்கும் ஜோதிகா படம் முழுக்க, தான் ஏற்றி ருக்கும் வசந்தி பாத்திரத்தில் மிக அக்கறையாக நடித்திருக்கிறார்.

ஒரு சோம்பேறியாக, கணவன் மற்றும் குழந்தைக்குப் பணிவிடை செய்வதையே பெருமையாகக் கருதும் குடும்பத்தலைவியாக, அலுவலகத்தின் சகஊழியர்களைப் பற்றி புறம் பேசுபவராக, குடியரசுத் தலைவரைப் பார்த்ததும் மயங்கி விழும் அப்பாவியாக என எல்லா இடங்களிலும் சிறப்பாகச் செய்திருக் கிறார் ஜோதிகா.

என் பொண்ணும் வசந்தி மாதிரி ஆகிவிடக்கூடாது என்று கணவன் ரகுமான் சொன்னதற்காக தோழியிடம் வந்து, அப்படின்னா இவ்வளவு வருசமா நான் என்னவா? இருந்தேன் என்று கேட்டுக் கண்ணீர்விடும் காட்சியில் கலங்கவைத்துவிடுகிறார்.

உன்னை இன்ஸ்பிரேசனா வச்சுத்தான் நான் இந்தஅளவுக்கு வளர்ந்திருக்கேன், எதைக்கண்டும் பயப்படாமல் போராடுகிற அந்த வசந்தி எங்கே? என்று அபிராமி கேட்கும்போது, தெரியல, குனிஞ்சு குனிஞ்சு உடைஞ்சே போயிட்டேன் என்று கலங்கும்போதும் கடைசியில் அபிராமியோடு தெம்பாகக் கைபேசியில் பேசும் காட்சியும் நன்று.

வசந்தியின் கணவர் தமிழ்ச்செல்வனாக நடித்திருக்கிற ரகுமான், அளவாக நடித்திருக்கிறார். மனைவி மீது அக்கறை கொண்டவர் போலவே காட்டிக்கொண்டு தம்முடைய தேவைகளுக்காக அவரைப் பயன்படுத்திக்கொள்ளும் கணவன் பாத்திரத்தைச் சரியாகச் செய்திருக்கிறார்.

ஜோதிகாவின் பெண்ணாக நடித்திருக்கும் அமிர்தா, அந்தவயதுக்குரிய குழந்தைகளைப் பிரதிபலிக்கிறார். அவருடைய பாத்திரப்படைப்புதான் விஜியின் வசனத்தில் சொல்வது போல, இண்டர் நெட்டில் பழுத்ததாக இருக்கிறது.

நகரத்தின் நெரிலான வீடுகளின் மொட்டைமாடிகளை காய்கறி வளர்க்கும் தோட்டமாக மாற்றுகிற புதியயோசனையை இந்தப்படத்தின் மூலம் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். பத்துவீட்டு மாடிகளை வைத்துக்கொண்டு ஒரு பெரியஇடத்துக் கல்யாணத்துக்கே காய்கறிகள் கொடுக்கிறார்கள் என்பது அதிகபட்ச கற்பனை என்றாலும் நல்லகற்பனை.

அதேநேரம் நாம் வாங்கும் காய்கறிகளை இனிமேல் அச்சத்துடனேயே பார்க்கிற நிலையையும் ஏற்படுத்திவிட்டார்கள். இளவரசு வைத்திருக்கும் காய்கறி மண்டியும், அங்கு நடக்கும் நிகழ்வுகளும், பூச்சி மருந்து இல்லாத காய்கறி எங்குமே இல்லையே என்கிற வசனமும் பயத்தை ஏற்படுத்துகிறது.

நமக்குன்னு இந்த உலகத்துல ஒருத்தர் இருக்கிறாங்க என்கிற நம்பிக்கை ஒவ்வொருத்தருக்கும் இருக்கணும் அப்படி ஒருத்தரும் இருக்கணும், நான் தனியா பொறந்தவங்கிற குறை எனக்கில்ல ஏன்னா ஐ ம் பார்ன் வித் பெய்ன், கல்யாணத்துக்குப் பிறகு பெண்களின் கனவுகள் காலாவதியாவது ஏன்? என்பது உட்பட படத்தில் பெரும்பாலான இடங்களில் விஜியின் வசனங்கள் பலமாக அமைந்திருக்கின்றன.

பல இடங்களில் காட்சிகளில் விபரிக்கவேண்டிய விடயங்களும் வசனங்களில் கடந்துபோகின்றன. முன்பாதிப்படத்தில் ரகுமானுக்கும் ஜோதிகாவுக்குமான காட்சிகள் மற்றும் ஜோதிகா மற்றும் அவருடைய பெண்ணுக்குமான காட்சிகள் செயற்கையாகத் தெரிகின்றன.

ரகுமான் மற்றும் அமிர்தா பாத்திரம் ஆகியனவற்றை வலிந்து வில்லத்தனமாக்கியிருப்பது போலத் தோன்றுகிறது. காட்சிகளும் தொலைக்காட்சித் தொடர் மாதிரி போகின்றன. கதையில் கவனம் செலுத்திய இயக்குநர் ரோசன்ஆண்ட்ரூஸ் காட்சிகளில் அந்தளவுக்குக் கவனம் செலுத்தவில்லை.


13 இந்தியக் குடியரசுத்தலைவர்களில் ஒருவரே பெண், 14 பிரதமர்களில் ஒருவரே பெண், ஏன் இப்படி? என்பதுதான் படத்தின் மையக்கேள்வி என்பதை இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லியிருக்கலாம்.

குடியரசுத்தலைவர் ஜோதிகாவைப் பார்க்க விரும்புகிறார் என்றதும் அதற்காக பொலிஸார் உட்பட பலருடைய பரபரப்பான நடவடிக்கைகள், குடியரசுத்தலைவரை ஒருவர் பார்க்க அனுமதி கேட்டாலும் குடியரசுத்தலைவரே ஒருவரைப் பார்க்க விரும்பினாலும் இவ்வளவு நடைமுறைகள் இருக்கின்றன என்பதை விபரிக்கின்றன.

சந்தோஷ் நாராயணின் இசை படத்துக்குப் பலம். வாடி ராசாத்தி மற்றும் நாலு கழுதை வயசாச்சி ஆகிய பாடல்கள் நல்லவரவேற்பைப் பெறும். ஜோதிகாவுக்கு இந்தப்படம் மரியாதையான மறுபிரவேசம், அவருடைய நடிப்பும் வசனங்களும் படத்தைக் காப்பாற்றுகின்றன.



## இயக்குநர் மணிரத்னத்தின் அடுத்தபடநாயகன் தனுஷ்?




னுஷ் இப்போது மாரி படத்தை முடித்துவிட்டார். அடுத்து வேலையில்லாப்பட்டதாரி படத்தின் இரண்டாம்பாகத்தின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருக்கிறது.

இதற்கடுத்து வெற்றிமாறன் இயக்கத்தில் ஒருபடம் நடிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. இதற்கடுத்து அவர் நடிக்கும் படத்துக்கான பேச்சுவார்த்தைகளும் நடந்துமுடிந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தமுறை தனுஷ் நடிக்கவிருப்பது மணிரத்னம் இயக்கத்தில் என்று சொல்கிறார்கள். மணிரத்னம், ஓகாதல்கண்மணி படத்திற்கு அடுத்து தமிழ் மற்றும் இந்தி ஆகிய இருமொழிகளிலும் எடுக்கிற மாதிரி ஒரு கதையைத் தயார் செய்துகொண்டிருக்கிறாராம். அந்தக்கதைக்கு தனுஷ் பொருத்தமாக இருப்பார் என்றெண்ணி அவரை அணுகியிருக்கிறார்கள்.

கதைக்கருவை கேட்ட தனுஷுக்கு பிடித்துவிட்டதென்று சொல்கிறார்கள். ராஞ்சனா, ஷமிதாப் ஆகிய படங்களைத் தொடர்ந்து இந்தியில் மணிரத்னம் இயக்கத்தில் நடிப்பது என்பதும் தமிழிலும் அவருடைய இயக்கத்தில் ஒருபடம் வருகிறதென்பதும் தனுஷுக்கு மகிழ்ச்சி என்று சொல்கிறார்கள். தனுஷ் கைவசம் இருக்கும் படங்களை முடித்துவிட்டு வருவதற்கும் மணிரத்னம் தயாராவதற்கும் சரியாக இருக்குமாம்.

இப்போதைக்கு மணிரத்னம் இயக்கத்தில் தனுஷ் நடிக்கிறார் என்பது மட்டும் முடிவாகியிருக்கிறதென்றும் மற்ற நடிகர் நடிகைகள் தொழில்நுட்பக்கலைஞர்கள் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும் சொல்கிறார்கள். இந்தவிடயத்தை அதிகாரபூர்வமாக அறிவிக்க இன்னும் சில வாரங்களாகும் என்றும் சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு மகிந்தவும் அனுமதியளித்திருக்கலாம்



இன விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை ஈழத்திலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி தமிழகம், உலகம் பூராகவும் பரந்துவாழும் தமிழர்களும் என்றும் மறந்துவிடவும் மாட்டார்கள், அவர்களை உதாசீனப்படுத்த முற்படவும் மாட்டார்கள். அந்தளவுக்கு அவர்கள் மீதான நம்பிக்கையும் மரியாதையும் அளவுகடந்தது.

தமிழர் தாயகத்தில் எந்தவொரு அசம்பாவிதம் நடந்தாலும் விடுதலைப்புலிகளை நினைவுபடுத்தும் அளவுக்கு அவர்களின் நினைவுகள் மக்கள் மத்தியில் என்றும் அழிக்கப்படமுடியாத அளவுக்கு ஆழமாகவேரூன்றிவிட்டது எனலாம்.

விடுதலைப்புலிகளின் நினைவுச் சின்னங்களை அழிக்க படைத்தரப்பினால் முடிந்தாலும்கூட அவர்களின் நினைவுகளை மக்கள் மத்தியிலிருந்து அழிக்க ஆறு ஆண்டுகள் அல்ல அறுபது ஆண்டுகள் சென்றாலும்கூட முடியாது என்று இப்போதே கூறிவிடமுடியும்.

தமிழ்மக்கள் மத்தியிலும் விடுதலைப்புலிகள் மீது வெறுப்பு ஏற்படும் சூழ்நிலை ஒரு காலகட்டத்தில் ஏற்படக்கூடும் என்று வாதிடுபர்களும் அவ்வாறு சில சந்தர்ப்பங்கள் முன்னரும்கூட ஏற்பட்டிருந்தது எனக் கூறுபவர்களும் உள்ளனர். ஆதரிப்பவர்கள் இருந்தால் எதிர்பபவர்களும் இருப்பார்கள் என்பது உண்மைதான். ஆனால் பெரும்பான்மை என்று பார்க்கும்போது ஆதரவளித்து ஆட்களையும் அளித்து அந்த அமைப்பை வளர்த்தவர்களின் குடும்பங்கள்தான் அதிகம் என்பதால் அவர்களின் மனநிலைக்குத்தான் அதிகளவில் முக்கியத்துவம்கொடுக்கவேண்டியுள்ளது.

புங்குடுதீவில் மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு நீதிகோரி பல போராட்டங்கள் தமிழர் தாயகம் எங்கும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் போராட்டங்களில் ஒரு முக்கிய சுலோக அட்டையினை மாணவர்கள் ஏந்தியிருந்தனர். இருப்பவர்கள் இருந்தால் இப்படி நடக்குமா? என்று அந்தச் சுலோகத்தில் கேள்வியெழுப்பட்டிருந்தது.

இந்தச் சுலோகத்தின் ஊடாக தமிழர்கள் யார் மீது அதிகளவில் நம்பிக்கை வைத்துள்ளனர். யாருடைய சட்டதிட்டங்களை சரியென்று நம்புகின்றனர் என்பது புலப்படுகின்றது. இதை சிங்களவர்கள் ஏற்க வேண்டும் என்றும் அவர்களைப் போன்று கடும்தண்டனைகளை வழங்கி குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுவருகின்றது.

இன, மத, பேதமற்ற நாட்டினை உருவாக்குவோம். இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் சம உரிமையுடன் சகல சலுகைகளையும் அனுபவிப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்வோம் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை வழங்கினாலும் தேர்தல் வெற்றியின் பின்னர் இந்தநாட்டில் சிங்களவர்கள் மட்டுமே மக்கள் எனவும் தமிழரின் கோரிக்கைகளை ஏற்பதுகூட சிங்களவர்களுக்கு எதிரான ஒன்று என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது மத்தியில் ஆட்சிப்பீடம் ஏறுபவர்களின் வழக்கமான ஒன்று.

இதனை மகிந்த ஆட்சிக் காலத்திலும் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலும் தமிழர்கள் அதிகளவில் அனுபவித்திருந்தனர். இந்நிலையில், பச்சிளம் பாலகர்களையும் படுகொலைசெய்துவிட்டு பயங்கரவாதிகளை அழித்து நாட்டுமக்கள் சுதந்திரமாக நடமாட வழிசெய்தோம் என்று வகைதொகையற்ற பொய்களை அள்ளிவீசி அளவுக்கதிக பணத்தை பதுக்கிய ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து தப்பிபிழைத்த தமிழர்கள் ஆறாவது ஆண்டில்முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் நிகழ்வினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏதோ ஒருவகையில் மத்தியில் ஆட்சியிலுள்ளவர்கள் அனுமதியளித்துள்ளனர்.

எதற்கெடுத்தாலும் தடை யுத்தரவு. ஜனநாயக நாட்டில் ஜனநாயகப் பண்புகளுக்கு மதிப்பளிப்பதற்கு பதிலாக ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களே இடைஞ்சல்களையும் அச்சுறுத்தல்களையும் விடுக்க உத்தரவு பிறப்பிப்பது என்று அராஜகம் தலைவிரித்தாடிய காலப்பகுதியில் தமிழர் தாயகத்தில் அழுகுரல்கள் ஓயாது வானைப் பிளந்துகொண்டிருந்தபோது ஆடம்பரமாளிகைகளை அமைப்பதிலும் போர்வெற்றிவிழாவினைக் கொண்டாடி புண்பட்ட இதயங்களை மேலும் காயப்படுத்தி ரணகளமாக மாற்றிய மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அடக்கிவைத்த உணர்வுகளை ஆறாவது ஆண்டில் முள்ளிவாய்க்காலில் வெளிப்படுத்தியிருந்தனர் தமிழர்கள்.

ஒருநாட்டில் ஒருபகுதி மக்கள் கண்ணீர்விட்டு கதறி அழும் போதும் அதற்குக் காரணமானவர்கள் வெற்றிவிழா எடுத்துக் கொண்டாடும் போதும் நல்லிணக்கம் என்பது எப்படி ஏற்படும். அவ்வாறான சூழ்நிலையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முற்படுவதும் பயனற்ற ஒன்றாகும்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தன. ஆனால் நல்லிணக்கம் என்பது அவரது ஆட்சியில் அழிக்கப்பட்ட ஒன்றாக இருந்ததால் அந்தச் சந்தர்ப்பங்கள் எல்லாம் தவிடுபொடியாகிப்போனது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த தவறிய மகிந்த தனது ஆட்சிக்காலத்தில் தமிழரின் அழுகுரலை யாவது நிறுத்த முற்பட்டிருக்கலாம். ஆனால் தமிழர் அழுவதற்கென்றே பிறவியெடுத்த இனம் என்று அவரும் அவரைச் சார்ந்தவர்களும்எண்ணியதால்அதனைச் செய்யவில்லை.

முள்ளிவாய்க்காலில் தமிழினம் பெரும் பங்கை இழந்தது என பதனால்தான் தமிழின அழிப்பு இடம்பெற்றது என்று உலகளாவிய ரீதியில் குற்றச்சாட்டுக்களை மகிந்த அரசின் மீது முன்வைக்க சந்தர்ப்பம் உருவானது. ஆனால் தமிழின அழிப்பு என்பது முள்ளிவாய்க்காலில் முடியவுமில்லை முள்ளிவாய்க்காலில் தொடரவுமில்லை.

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையைக்கூட மறுத்து வந்த மகிந்த ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட இழப்புக்களை கண்ணீர் சிந்தியும் பிதிர்க்கடன் செலுத்தியும் ஆறாவது ஆண்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் ஊடாக தமிழர்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்திருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு மகிந்த அனுமதியளித்திருக்கலாம் அல்லது மைத்திரி போன்று அதை பெரிதுபடுத்தாமல் தமிழ் மக்களின் மனங்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்ய முற்படவில்லை.

ஆணவம் அவரை ஆட்கொண்டிருந்ததாலும் சிங்கள மக்களின் வாக்குப் பலத்துடன் நிரந்தர ஜனாதிபதியாக தான் இருக்கலாம் என்ற அதிக நம்பிக்கை காரணமாகவும் தமிழ் மக்களை உதாசீனப்படுத்த மகிந்த முற்பட்டிருந்தார்.

தமிழர்களை ஆயிரக் கணக்கில் அழித்தொழித்துவிட்டு அவர்களை நினைவுகூரக்கூட சந்தர்ப்பம் வழங்க மறுத்ததோடு நினைவுகூர்ந்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து சிறையில் அடைக்கவும் உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தமது வாழ்நாளைச் சிறையில் கழிக்க வைத்துக் கொண்டிருந்தது போதாது என்று இன்னும் தமிழரைச் சிறைபிடிக்கும் படலத்தை தொடர்ந்து மேற்கொண்டிருந்தார் மகிந்த.

ஏற்கனவே காணாமற்போனவர்களின் உறவினர்களின் கண்ணீர்ப் போராட்டம் காலவரையறையின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் எங்குள்ளனர், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று உறவுகள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு ஒருபதிலைக் கூற முனைப்புக் காட்டுவதை விடுத்து மரணச் சான்றிதழ் வழங்க உருவாக்கப்பட்ட ஆணைக்குழுவா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மகிந்த உருவாக்கிய காணாமற்போனவர்களைக் கண்டறியும்ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

யுத்தப் பாதிப்புக்களிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுத்து அவர்களை ஆற்றுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள மகிந்த முற்பட்டிருக்கவில்லை என்ற கோபத்தை ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர். அதே வேளை உயிரிழந்த உறவுக்களை நினைவுகூர யாரும் தடைவிதிக்க முடியாது என்பதை உணர்வெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வினை அனுஷ்டித்து வெளிப்படுத்தியிருந்தனர் தமிழர்கள்.

இன்னும் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உறவுகளை நினைவுகூருவதைத் தடுக்க முடியாது என்பதையும் இறுதிப் போரில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்பதையும் தமிழர் தரப்பு நினைவுபடுத்திக்கொண்டிருக்கும் என்ற உறுதியான மனநிலையை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்தியம்பியுள்ளது ஆறாவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின் ஊடாக தமிழினம்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# உண்மையான பக்தன் யார்?

ஒரு நாள் இரண்டு தேவதைகளுக்கு சந்தேகம் வந்தது. இறைவனிடம் பலர் வந்து வேண்டிக் கொள்கின்றனர்.

அப்படி வேண்டிக் கொள்ளும் போது, இறைவா... நான் தினமும் உன்னை வணங்குகிறேன் என்று சொல்கின்றனர்... இதில் உண்மையான பக்தி உடையவன் யார் என்பது தான் அந்த சந்தேகம். நேராக இறைவனிடம் சென்று தங்கள் சந்தேகத்தை கேட்டன.

அப்போது இறைவன், தேவதைகளே! இந்த ஊரில் பலரையும் போய் சந்தித்து யார் எனது உண்மையான பக்தன் என்பதை விசாரித்து வாருங்கள் என்றார்.

உடனே தேவதைகள் புறப்பட்டு பலரிடமும்சென்று விசாரித்தன.

ஒருவன், நான் கோவிலுக்குப் போகாத நாளே இல்லை... தினமும் மூன்று வேளை கடவுளை வணங்குகிறேன், என்றான்.

அடுத்தவன், நான் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் கோவில போவேன், என்றான்.

மற்றவன், நான் வாரத்தில் ஒரு நாள் நிச்சயம் கோவிலுக்குச் செல்வேன்," என்றான்.

இன்னொருவன், எனக்கு கஷ்டம் வரும் சமயத்தில் கடவுளிடம் முறையிடுவேன், என்றான்.

இப்படியாக பலரும் ஏதோ ஒரு சமயத்தில் கடவுளை நினைப்பவராகவே இருக்க, இதில் யார் உண்மையான பக்தன் எனக் கண்டுபிடிப்பது எப்படி என்ற குழப்பம் தேவதைக்கு ஏற்பட்டது.

அப்போது அந்தவழியே அவசரமாகச் சென்று கொண்டிருந்த ஒருவனை நிறுத்தி, அப்பனே ! உனக்குக் கடவுள் பக்தி உண்டா? நீ எப்போது கடவுளை வழிபடுவாய்? என்று ஒரு தேவதை கேட்டது.

அதற்கு அவன், எனக்குக் கடவுளை நினைக்கவே நேரமில்லை... அவசரமாக சிலருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது.

நான் போர்கிறேன்... என்று பதில் கூறிவிட்டு ஏழைகளுக்கு உதவிட அவன் விரைந்தான்.

தேவதைகள் கடவுளிடம் திரும்பி வந்து நடந்ததை அப்படியே விபரித்தன.

எல்லாவற்றையும் கேட்ட கடவுள் மௌனம் சாதித்தார்.

தேவனே... உண்மையான பக்தன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா? என்று கேட்டன.

கண்டுபிடித்துவிட்டேன்! என்றார் கடவுள்.

யார் பிரபு? தினமும் மூன்று வேளை கோவிலுக்கு வருபவர் தானே? என்று கேட்டன தேவதைகள்.

கடவுள் புன்னகைத்தபடியே, இல்லை... இல்லை... கடைசியாக என்னை நினைக்கக்கூட நேரமில்லாது ஏழைகளுக்கு சேவை செய்ய ஓடினானே... உண்மையில் அவன் தான் எனது உண்மைப் பக்தன், என்றார்.

அப்போது தான் உண்மை புரிந்தது தேவதைகளுக்கு.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 380

அஜந் குலசிங்கம்




ஐங்கரன் சிவசாந்தன்




அழகோன் கௌத்தம்





மைக்கல் மைக்




ரவிவர்மன் இராஜகோபால்




அபி ரேகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் கிண்ணம் யாருக்கு?

## சென்னை- மும்பை

**இன்று பலப்பரீட்சை**




8 ஆவது ஐ.பி.எல். போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.இதில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதவுள்ளன.

8 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் 8 ஆம் திகதி தொடங்கியது.

8 அணிகள் பங்கேற்ற இந்தப்போட்டியில் கடந்த 17ஆம் திகதியுடன் 'லீக்' ஆட்டங்கள் முடிந்தன. ஒவ்வொரு அணியும், ஏனைய அணிகளுடன் தலா 2 முறை மோதின.

'லீக்' முடிவில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய அணிகள் முதல் 4 இடங்களை பிடித்து 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெற்றன.

நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், டெல்லி டேர்டெவில்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகள் முறையே 5 முதல் 8ஆவது இடங்களை பிடித்து வெளியேறின.

முதல் தகுதி சுற்றில் மும்பை இந்தியன்ஸ் 25 ஓட்டங்களில் சென்னையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. எலிமினேட்டர் ஆட்டத்தில் பெங்களூர் அணி 71 ஓட்டங் களில் ராஜஸ்தானை தோற்கடி த்தது. நேற்று முன்தினம் நடந்த 2ஆவது தகுதி சுற்று ஆட்டத்தில் சென்னை அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இறுதிப் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று இரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் ரோகித்சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன. சென்னை அணி 3 ஆவது முறையாக ஐ.பி.எல். கோப்பையை வெல்லுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 2010, 2011 ஆம் ஆண்டுகளில் சென்னை சம்பியன் பட்டம் பெற்றுள்ளது.

ஐ.பி.எல். போட்டி 2008ஆம் ஆண்டு அறிமுகம் ஆனது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் 6ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 2008, 2010, 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் தகுதி பெற்று இருந்தது. 2 முறை மட்டுமே (2009, 2014) தகுதி பெறவில்லை.

மும்பை இந்தியன்ஸ் 2 ஆவது தடவையாக கோப்பையை வெல்லும் ஆர்வத்தில் இருக்கிறது. 2013 இல் அந்த அணி பட்டம் வென்று இருந்தது.

முதல் தகுதி சுற்றில் சென்னை அணியை வீழ்த்தி இருந்ததால் மும்பை இந்தியன்ஸ் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. அதே நேரத்தில் சென்னை அணி பதிலடி கொடுக்கும் ஆர்வத்துடன் உள்ளது.

ஐ.பி.எல். போட்டியில் இரு அணிகளும் மோத இருப்பது 22ஆவது ஆட்டமாகும். இதுவரை நடந்த 21 போட்டியில் மும்பை இந்தியன்ஸ் 11 போட்டியிலும், சென்னை சுப்பர் கிங்ஸ் 10 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ்- மும்பை இந்தியன்ஸ் மோதும் ஆட்டம் எப்போதுமே பரபரப்பாக இருக்கும். இதனால் இரு அணிகள் மோதுவது பரம்பரை எதிரிகள் மோதும் ஆட்டமாக கருதப்ப டுகிறது. ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் இரு அணிகளும் தற்போது 3 ஆவது முறையாக மோதுகின்றன.

2010ஆம் ஆண்டு நடந்த இறுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி பெற்றது. மும்பை பிராபோர்ன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் 22 ஓட்டங்களில் வென்று இருந்தது. இதற்கு 2013 இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் பதிலடி கொடுத்தது கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் 23 ஓட்டங்களில் வெற்றி பெற்று இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org